இது
# நம்தேசம்

'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 மே. 06.2015 வியூகம்-13 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com

Email - ithunamthesam@gmail.com



# அறிக்கைகள் அல்ல செயலே தேவை

# ஆர்ப்பாட்டங்களால் நன்மைகள் உண்டா?

## கிழக்கின் ஆளுனர் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரிடம் கேள்வி



திருகோணமலை மாவட்டத்தில் கடத்தப்பட்டோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் கிழக்கு மாகாண ஆளுனர் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கடந்த 10.04.2015 மாலை 3.00 மணியளவில் ஆளுனரைச் சந்தித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் ஓர் அரச அதிகாரி காணாமல் ஆக்கப்பட்டோரின் குறைகளைக் கேட்டறிந்த முதற் சந்தர்ப்பம் இதுதான் எனத் தெரிவித்துள்ள சங்கத்தினர் கடந்த காலங்களில் இருந்த இறுக்கமான அல்லது ஆபத்தான அரசியல் சூழ்நிலையின் நிமிர்த்தம் எமது பிள்ளைகளைக் கடத்தியவர்களை அடையாளம் தெரிந்திருந்தும் நாம் இனந்தெரியாதவர்கள் என பல இடங்களிலும் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தோம் எனவும் தற்போது உண்மையினைக் கதைக்கக் கூடிய அரசியல் சூழ்நிலை இருப்பதால் எமது பிள்ளைகளைக் கடத்தியவர்களை அடையாளம் காட்டத் தயாராக உள்ளோம் எனவும் சங்கத்தினர் ஆளுனரிடம் தெரிவித்துள்ளனர்.

எமது பிள்ளைகள் இருக்கிறார்களா அல்லது இல்லையா என்பதை கூறுங்கள் என்பதுடன் எமது உறவுகளின் வீடுகளுக்கு இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினர் தொலைபேசி ஊடாகவும், நேரடியாகவும் வீடுகளுக்குச் சென்று அச்சுறுத்துகிறார்கள் அதனை உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். அதன்போது கருத்துத் தெரிவித்துள்ள ஆளுனர் உறவுகளைக் கடத்தியவர்களை அடையாளம் காட்ட முடியுமா எனக் கேட்டதுடன் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள் எடுக்கிறீர்களே இதனால் ஏதாவது நன்மைகள் உங்களுக்கு கிடைத்திருக்கின்றனவா என விசாரித்துள்ளார்.

மேலும் உங்கள் உறவுகள் உள்ளனர் அல்லது இல்லை என்றால் நீங்கள் எதனை அரசிடம் எதிர்பார்ப்பீர்கள் என வினவிய அவர் நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் ஊடகங்கள் ஊடாக வரும்போது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தலைமறைவாவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதல்லவா எனக் குறிப்பிட்டுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் திருகோணமலை அணியிடம் தெரிவித்ததாக அச்சங்கத்தின் பத்திரிகை அறிவிப்பு தெரிவிக்கின்றது.

# இராயப்பு ஜோசப் ஆண்டகை விரைவில் நலம் பெற வேண்டும்



மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரியை சந்திக்க கொழும்பு சென்றபோது திடீர் சுகவீனமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போது பக்கவாத பாதிப்பு குறைந்திருப்பதாகவும் விரைவில் அவர் குணமடைவார் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது.

இராயப்பு ஜோசப் ஆண்டகை வெறும் மதகுருவாக மட்டும் இருக்கவில்லை. அடக்கியொடுக்கப்பட்ட தமிழ்த் தேசத்தின் உரிமைக் குரலாகவும் ஓங்கி ஒலித்தார். குறிப்பாக இன அழிப்பு தொடர்பாகவும் காணாமல் போனவர்கள் விவகாரம் தொடர்பாகவும், போரினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு தொடர்பாகவும் அவரது சேவைகள் அளப்பரியவை. எந்த அச்சுறுத்தல்களுக்கும் அவர் அஞ்சியது கிடையாது.

தமிழ் அரசியல் சக்திகளை ஒரு கொள்கையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதிலும், தமிழ் மக்களின் அனைத்து விவகாரங்களையும் கையாளக்கூடிய தமிழ்த் தேசிய சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடன் அவர் செயற்பட்டிருந்தார். இதற்காக தனது தலைமையின் கீழ் சந்திப்புகளையும் ஒழுங்கு செய்திருந்தார். இவரது முயற்சிகளுக்கு தமிழ்த் தலைமைகள் ஒத்துழைக்கவில்லை என்பது வேறுகதை. தமிழ் சிவில் சமூக அமையத்தின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அவருக்கு நிறையவே பங்குண்டு.

இராயப்பு ஜோசப் ஆண்டகை விரைவில் நலம் பெற வேண்டும். அவரது சேவைகள் தொடர வேண்டும் என "இது நம் தேசம்" பிரார்த்திக்கின்றது.

## பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்களுக்கு

# "கூத்துக்கலைச் செம்மல் விருது"

**பா.செயப்பிரகாசம், எழுத்தாளர் (தமிழகம்)**




பூமிப்பந்தின் மூத்த மனிதர்களான தமிழினத்தின் மிகப் பிரதானமானது கூத்துக்கலை. அதன் வளர்ச்சிக்காக தொன்று தொட்டு பல கலைஞர்களும், அறிஞர்களும் வாழ்ந்து மறைந்து போயுள்ளனர். உலகத் தமிழினத்திற்காக அவர்கள் விட்டுச் சென்ற உன்னத கூத்துக் கலைக்காக அவர்தம் பின்னால் நடந்து ஆயுள் பரியந்தம் உழைத்த அண்ணாவிமாரையும், கலைஞர்களையும் வரலாறு குறித்து வைத்திருக்கின்றது. ஈழதேசத்தின் மிகத் தொன்மையான கூத்துக்கலைகளில் சுடர்மிகு இரு விழிகளாக திகழ்பவை தென்மோடி, வடமோடி கூத்துக்களாகும். தென்மோடிக் கூத்தின் மூலவராகவும், தனித்துவம் மிக்க கம்பீரக் கலைஞராக, உச்சநிலை கொண்ட பாடகராக பன்முகத் திறனுடன் திகழ்ந்தவர் அமரர் கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அண்ணாவியார் அவர்களாகும். அவரின் மறைவுக்குப் பின் அவரது மகன் கலைவருணன் சவிரிமுத்து அவர்கள் அண்ணாவியாராகப் பணியாற்றி வருகின்றார். அவருடைய மகன் அண்ணாவி ச.மிக்கேல்தாஸ் 90களில் இருந்து பல பிரதிகளை உருவாக்கி புலம் பெயர்ந்த தேசங்களின் கலைஞர்களை ஒன்றிணைத்து அரங்காற்றும் பணியை முழுநேர ஊழியமாகச் செய்து வருகின்றார்.

இந்த வகையில் அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் மாசி மாதம் 23 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வில் பேராசிரியர், முனைவர் கரு.அழ.குணசேகரன் அவர்கள் தமது தலைமை உரையில். கூத்து என்ற சொல் தமிழ் இனத்துக்குரிய மரபின் அடையாளம். மனிதரின் கண்டு பிடிப்புக்களில் கலைகள் குறிப்பாக கூத்துக்கள் மக்களின் முகவரியை காட்டவல்லன.

அந்த வரிசையில் கூத்து பாரம்பரியத்தைப் பேணிக்காத்துவரும் அண்ணாவியார் மிக்கேல்தாஸ் அவர்கள், கலைக்குரிசில் நீ.வ.அந்தோனி அவர்களின் கலைப் பணியை மூன்றாம் தலைமுறையாளராகத் தொடர்ந்து வளர்த்து வருவதுடன் புலம் பெயர்ந்து கனடா, நோர்வே, பிரான்ஸ் நாடுகளில் வாழும் கலைஞர்களை ஒன்றிணைத்து அரங்காற்றுகை அளிப்பதும். மேலைநாட்டில் பிறந்து வளர்ந்த புதிய தலைமுறையினர் தமிழில் பேசுவதே அபூர்வம். அதிலும் தாள நயத்துடன் பாடுவது ஆச்சரியம். இவர்களுக்கான அரங்காற்றுப் பிரதிகளை உருவாக்கி தாள நயத்துடன் பாட வைத்து அடுத்த தலைமுறையினரிடம் கையளிக்கும் பணியில் ஈடுபடுவதனாலும், இத்தகைய அண்ணாவிமார்கள் கூத்துக் கலைஞர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிப்பது நாம் நம் பாரம்பரிய கலைகளுக்குச் செய்யும் பெரும் பணி என்பதினால் அண்ணாவியார் அவர்களை கௌரவிக்கும் இவ்விழா நிகழ்கலைத் துறையால் முன்னெடுக்கப்படுகின்றது என்றார்.

அடுத்து, எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் அவர்கள் தனது அறிமுக உரையில், அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்கள் வரலாற்றுக்கூத்துக்களான கண்ணகி, மனுக்குல மீட்பர், ஸ்நாபக அருளப்பர், மாவீரன் பண்டாரவன்னியன், எதிரேறு எல்லாளன் ஆகிய சரித்திர வரலாற்றுக் கூத்துக்களை எழுதியதுடன், சமகால சமூக பாடுபொருள் நிகழ்வுக் கூத்துப் பிரதிகளாக சிறுமை, வீரசுதந்திரம், சுதந்திரமும் முரண்பாடுகளும், தமிழ் மரபுப் பொங்கல் ஆகிய கூத்துக்களை புதிய வடிவில் மீளுருவாக்கி நோர்வேயிலிருந்து இங்கு வந்திருக்கும் அவரது இளவல் அண்ணாவியார் ச.ஜெயராசாவுடனும், பிரான்ஸ் நாட்டில் வாழும் அடுத்த தலைமுறைக் கலைஞர் சூ.றொபின்சனுடனும் இணைந்து பல அரங்காற்றுகைகளை நடாத்தி வருவது நம் தமிழ் பாரம்பரிய கலைகளுக்குச் செய்யும் தொண்டெனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய புதுவை பல்கலைக்கழக பேராசிரியர், முனைவர், பதிவாளர் எஸ்.பன்னீர்ச்செல்வம் அவர்கள் எல்லாம் இழந்த நிலையிலும் புலம் பெயர்வோடு இவர் இப்பாரம்பரிய மரபுக்கலையை காவிச்சென்று, அங்கு நம் பண்பாட்டின் வேர்களை படைக்கும் ஆற்றலுடைய அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்களுக்கு, அவரின் கலைப்பணியை போற்றும் முகமாக புதுவை பல்கலைக்கழகம் இக்கௌரவ விருதினை வழங்குவதாக "கூத்துக்கலைச் செம்மல்" விருதினை வழங்கி விளக்கமளித்தார்.

தொடர்ந்து கருஞ்சுழி என்னும் நாடகத்தின் மூலம் இந்திய நாடக அரங்கிலும், உலக நாடக மேடைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நாடக இயக்குனரும், பேராசிரியருமான வ.ஆறுமுகம் அவர்கள் அண்ணாவியார் ச.மிக்கேல்தாஸ் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பளித்தார். தொடர்ந்து பேராசிரியர்களுக்கும், அண்ணாவியார் ஜெயராசா அவர்களுக்கும் சிறப்பளிக்கப்பட்டது.

பின்பு கூத்துக்கலை பற்றிய விளக்கவுரையும், செய்முறைப் பயிற்சியும், பாடல், நடிப்பு என அண்ணாவியார் மிக்கேல்தாஸ், அண்ணாவியார் ஜெயராசா, வணபிதா வீனஸ் செபஸ்ரின் மற்றும் தர்சிகா, யுனிஸ்ரா ஆகியோரால் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன. இறுதியில் புதுவை பல்கலைக்கழக பேராசிரியர், முனைவர், நாடகருமான இரா.இராசு அவர்களின் நன்றியுடன் விழா இனிதே நிறைவுற்றது.

# மலைமுரசினால் நடாத்தப்பட்ட மேதினப் பேரணியில் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் எனப் பிரகடனம்




திருகோணமலை மாவட்டத்தில் மலைமுரசு பத்திரிகை ஆசிரியரின் தலைமையில் நடாத்தப்பட்ட மேதினப் பேரணியில் வெளியிடப்பட்ட பிரகடனமானது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்பட்டு இருதேசங்கள் இணைந்த ஒரு நாடு என்ற அரசியல் தீர்வு தமிழர்களுக்கு வேண்டும் என்றும் இணைந்த வடக்குகிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பது அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்றும் பிரகடனம் செய்துள்ளது.

பேரணியின் பிரகடனத்தை வெளியிட்டுப் பேசிய மலைமுரசின் ஆசிரியர் இரா.ஸ்ரீ ஞானேஸ்வரன் இன்றைய நாளில் இருந்து ஐந்து தொழிற் சங்கங்களும் இணைந்து ஒரேகுடையின் கீழ் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முயற்சிகளைத் தொடரப்போவதாகவும் தெரிவித்தார்.

இப்பேரணியில் 27 பிரகடனங்கள் வெளியிடப்பட்டன. அவை தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் இறைமையை முன்நிறுத்தி இரு தேசங்கள் ஒரு நாடு என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பதை ஏற்றுக் கொண்டுசெயற்படல். அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையைக் கண்டறிந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அ. இ. அ. பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டம்




அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 21 ஆவது மேதினக் கூட்டமும் ஊர்வலமும் கல்முனையில் கடந்த வெள்ளிக்கிழமை (01.05.2015) இடம்பெற்றன.

சங்கத் தலைவர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற மேதினக் கூட்டம் கல்முனை வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றதுடன் கல்முனை நகர் ஊடாக மேதின ஊர்வலமும் இடம்பெற்றது.

இந்த மேதின நிகழ்வில் கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சர் எம்.எஸ்.எம் மன்சூர் பிரதம அதிதியாகவும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் தென்கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கத் தலைவருமான கலாபூசனம் ஏ.எல்.எம் சலீம் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மேலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சங்க உறுப்பினர்கள் உட்பட விசேடமாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் சங்கத் தலைவர் லோகநாதன் உரையாற்றுகையில்,

வடக்குக் கிழக்கிற்கான பலம் பொருந்திய சங்கமாக எமது சங்கம் இயங்கிவருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியான ஆதரவு கிடைப்பதற்கு ஆதரவாக இருந்தவர்கள் விடுதலைப்புலிகள். ஆனால் புலிகளை வைத்து அரசியல் நடத்தி வருபவர்களே புலிகளின் இந்த நடவடிக்கையை கொச்சைப்படுத்த முனைந்துள்ளமை கவலை தரும் விடயமாகும்.

இன்றைய நல்லாட்சியில் தமிழ் மக்கள் ஓரளவேனும் நம்பிக்கை கொள்வதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன. எனினும் நாட்டை சூறையாடிய மஹிந்த கூட்டத்தினர் மீண்டும் ஆட்சிக்கு வரலாம் என மனப் பால் குடித்துவருகின்றனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இனவழிப்புநாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இம்முறை வாகரையிலும் அனுஷ்டிக்க ஏற்பாடு - செ.கஜேந்திரன்

தமிழ் மக்கள் மீது புரியப்பட்ட இன அழிப்பு யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வுகள் இனவழிப்பு யுத்தம் முடிவுக்கு வந்த இறுதிநாளான 2009 மே 18 அன்று முள்ளிவாய்க்காலிலும், வாகரையிலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

# சம்மாந்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் நிரப்பப்படாமல் இழுத்தடிப்பு

சம்மாந்துறை கல்வி வலயத்திற்கு உட்பட்ட நாவிதன்வெளி கல்விக் கோட்டத்திற்கான கோட்டக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் கடந்த 6 மாத காலமாக நிரப்பப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பதவிக்குப் போதிய தகைமையுள்ளவர்கள் இருந்தும் முற்றிலும் தமிழ்ப் பிரதேச பாடசாலைகளை உள்ளடக்கிய நாவிதன்வெளி கல்விக் கோட்டப்பணிப்பாளராக தமிழர் அல்லாத ஒருவர் பதில் கடமை புரிகின்றமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

போர்ச் சூழலால் பாரிய பின்னடைவைச் சந்தித்த இப்பிரதேசத்திற்கு தமிழ்த் தேசிய பற்றுடன் பணியாற்றக் கூடிய தமிழ் அதிகாரி ஒருவரை நியமிக்காது உள்ளமை ஏன்? கிழக்கு மாகாண கல்வி அமைச்சராக தமிழரான சிங்காரவேலு தண்டாயுதபாணி கதிரையை அலங்கரிக்கும் காலத்திலும் இத்தகைய இருட்டடிப்பு இடம்பெறுவது ஏன்? என மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (அ)

# சிங்கக் கொடி விவகாரம் தமிழ், முஸ்லீம் மக்கள் வேறு தேசம் என்பதை உணர்த்துகிறது - இராசையா



இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளரை லஞ்ச ஒழிப்பு விசாரணைக்கு அழைத்த சந்தர்ப்பத்தில் சிங்கள பௌத்த கடும் போக்காளர்கள் தமிழ், முஸ்லீம் மக்களின் அடையாளத்தை அகற்றிய வேறுவிதமான தேசியக் கொடியை ஏந்தியிருந்தமையானது தமிழ், முஸ்லீம் மக்களைப் பார்த்து நீங்கள் வேறு தேசத்தவர்கள் என்று இடித்துக் கூறியுள்ள செயற்பாடாகும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் செல்லையா இராசையா தெரிவித்துள்ளார். அத்தேசியக் கொடியில் தமிழ், முஸ்லீம் மக்களைக் குறிக்கும் செம்மஞ்சள், பச்சை கோடுகள் அகற்றப்பட்டிருந்தன.

காரைதீவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

ஓமந்தை சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்படும் பதிவுகளும், சோதனைகளும் ஒரு நாட்டுக்குள் இரு தேசங்கள் என்பதை சொல்லாமல் சொல்கின்றன. நிலத் தொடர்புடைய நாடுகளுக்கிடையே பயணிக்கும் ஒருவர் இரு நாடுகளுக்குமிடையிலான எல்லையைத் தாண்டும் போது கடைப்பிடிக்கவேண்டிய அத்தனை அம்சங்களையும் ஒத்ததாக ஓமந்தைச் சோதனைச்சாவடியின் செயற்பாடுகள் உள்ளன.

கடந்த 65 வருடகால அரசியல் வரலாற்றை தமிழ் மக்கள் ஒரு கணம் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ், முஸ்லீம் மக்கள் சுதந்திரத்தைத் தொலைத்தவர்களாக, சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடியாதவர்களாக இருந்து வருவதைக் காணலாம்.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்பது போல் தமிழ், முஸ்லீம் மக்களை அடக்கி ஒடுக்க முற்பட்டதன் விளைவாக இந்நாட்டில் யுத்தம் வெடித்தது. இதற்கு வித்திட்டவர்கள் சிங்களக் கடும் போக்காளர்கள். இவர்களின் வழித் தோன்றல்களே தேசியக் கொடியை மாற்றியமைத்து இனவாத வெட்டு முகத்தை உலகறியக் காட்டியுள்ளனர்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டை ஒரு தமிழ் மகன் அல்லது முஸ்லீம் மகன் செய்திருந்தால் நிலைமை என்னவாகி இருக்கும் என்பது எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு யுவதி உதயஸ்ரீ விடுதலை



சிகிரியா சுவரில் எழுதினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி உதயஸ்ரீ கடந்த வியாழக்கிழமை காலை விடுதலையாகி வீடுதிரும்பியுள்ளார்.

விடுதலை தொடர்பில் கருத்து தெரிவித்த உதயஸ்ரீ "இனிமேல் யாரும் என்னைப் போன்று விவரம் தெரியாமல் தவறிழைத்து விடக்கூடாது. இதுபோன்ற விடயத்துக்காகத் தண்டிக்கப்பட்ட கடைசி நபர் நானாகத்தான் இருக்க வேண்டும்" என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

உதயஸ்ரீ கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சிகிரியா சுவரில் பெயர் எழுதினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதுடன், அவரிற்கு இரண்டு வருடங்கள் சிறைதண்டனையும் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அரசியல் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்றவர்களினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கையினை தொடர்ந்து

(08 ஆம் பக்கம் பார்க்க)



## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

தமிழ் மக்களிடம் யாருக்கு ஆதரவு அதிகரித்து வருகின்ற தென்பதை நடந்து முடிந்த மேதினம் அப்பட்டமாக வெளிக்காட்டிப் போட்டுது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ர மேதினத்தில அள்ளி திரண்ட சனம் கஜேந்திரகுமாரிட்ட வந்து தங்கடை மனக்குமுறலை போட்டுடைச்சது. அதுவும் இளம் சமூகம் தெளிவாகியிட்டுது. அப்பு இனி பருப்பு அவியாது.

வடக்கு முதலமைச்சரோட இணங்கிப்போகக்கூடாதென்று மாகாண அமைச்சர்மார் கேட்டுக்கொண்டிருக்கின்றதாக செய்திகள் வெளியாகியிருக்குது. நல்லது மதியாதார் தலைவாசல் மிதிக்காதே யென்றது நல்லது தான். ஆனால் அவையளில எத்தினை பேர் பின்கதவால ரணிலோட அவற்றை அரசோட டீலிங் வைச்சிருக்கினமெண்ட இரகசியம் பரகசியம் பாருங்கோ. முன்னரும் இருட்டினாப்பிறகு ஆளுநர் சந்திரசிறியோட நடத்திய வியாபாரம் உலகமறிஞ்ச விசயம்.


சுன்னாகம் கழிவு ஓயில் பிரச்சினையை மூடிமறைக்க சிலர் மேற்கொண்டுவாற முயற்சி பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. டீலிங் முடிஞ்சிட்டுதோவென்று ஆளாளுக்கு சந்தேகம் எழுப்பிக் கொண்டிருக்கின்றது சரியோவென்று சந்தேகம் வலுக்கின்றது. அதிலும் இந்த பிரச்சினைகள் பற்றி குரல் கொடுக்கின்ற பேப்பர்காரர்களை பற்றி சேறு பூச ஆட்களை வைச்சு வேலை செய்யிறதாக தகவல். அதிலும் சகோதர சிங்கள பத்திரிகையாளர்களிற்கும் முட்டுக்கட்டை போட அவங்கள் போட்டுடைச்சிருக்கிறாங்கள்.

காணாமல் போனோர் பற்றி அரசின் முன்னாள் பங்காளியான தாடியர் வெளியிட்ட ஊடக அறிக்கையை பார்த்து நாள் முழுதும் வயிறு வலிக்க சிரிச்சதுதான் மிச்சம். அதிலும் தாங்கள் பார்லிமென்றில் பேசியிருக்கின்றதாகவும் சொல்லியிருக்கின்றார். கடத்தலில் பயன்பட்ட வெள்ளை வான்கள் எங்கு நின்றது என்பது பற்றியோ ஆளாளுக்கு கடத்தின ஆட்களினை விடுவிப்பதாக கூறி கப்பம் வசூலிச்சது பற்றியோ சொல்லித்தெரியவேண்டியதில்லை. அதுவும் மகேஸ்வரியின்ர மரணத்தை அடுத்து அரங்கேற்றின தொடர் கொலைகள் சொல்லித்தெரியவேண்டியதில்லை. சாத்தான் வேதம் ஓதுதென்று சொல்லிறது இதைத்தான் பாருங்கோ. என்ன சனம் இப்பவும் பயத்தில வாய் திறக்காதென்ற நம்பிக்கைதான்.

தமிழரசுக்கட்சி தனித்து நடத்தின மேதினக்கூட்டத்திற்கு பங்காளிக்கட்சி தலைவர்மார் சிலர் போனவையாம். உண்மையில இவங்கள் இடுப்பில துண்டு துணி கட்டிக்கொண்டு போனவங்களோ இல்லையோவெண்டு கேட்கின்றன். அவங்கள் வேண்டாம் வேண்டாமெண்டு அடிச்சு கலைச்சாலும் ஒட்டிக்கொண்டு திரியிறதை பச்சோந்தித் தனமெண்டு சொல்லிறதை விட வேறென்னவெண்டு சொல்லுறது. எல்லாம் ஒட்டிக்கொண்டிருந்த, அனுபவிச்ச கதிரை சுகம் தான் பாருங்கோ.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அண்மையில பகிரங்கமாக சொல்லிபோட்டார் நாங்கள் இந்தியா, அமெரிக்கா சொல்லிறமாதிரித் தான் நடப்பமெண்டு. அப்ப இனியும் சர்வதேசம் தீர்வைத் தருமெண்டு சொல்லிறதும் ராஜதந்திரமெண்டு ஏமாற்றுறதும் தொடர்ந்தும் நடக்கப்போகுது. ஆனால் அதைக்கேட்கிறதுக்கு தமிழ்ச் சனமோ அதுக்கொரு தேசமோ இருக்குமாவெண்டது பெரிய கேள்வி தான் பாருங்கோ

# அமுதவாக்கு



மஹிந்த ராஜபக்ஷ மூவகை வியாதிகளினால் பீடிக்கப்பட்டிருந்தார். முட்டாள்தனம், மாயை, விகாரம் என்பவையே அவ்வியாதிகளாகும். முட்டாள்தனம் என்பது தவறான நம்பிக்கைகள் காரணமாக வழி தவறப்பட்டமை, மாயை என்பது யதார்த்த உண்மை, போலியாகத் தோன்றியமை, விகாரம் என்பது இல்லாததும் உள்ளது போலத் தோன்றியமை. இறுதியில் இந்த மூவகை வியாதிகளுக்கும் இரையாகுவதைத் தவிர அவருக்கு வேறு தெரிவு இருக்கவில்லை

**பேராசிரியர் ஜயந்த செனிவிரத்ன**




இலங்கைப் பிரஜைகளின் மொழி உரிமை மீறப்பட்டபோது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் சில முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

**எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, சட்டத்தரணி**




தகவல் அறியும் உரிமை பிரஜைகளுக்கு உரித்தானது. அது ஊடகவியலாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. மேலும் தேசிய பாதுகாப்பு, ஆட்புல ஒருமைப்பாடு என்ற அரசியல் யாப்பின் உறுப்புரைக்குள் மறைந்து கொண்டு தகவல்களை மூடிமறைக்கும் சாத்தியங்களும் உள்ளன.

**சட்டத்தரணி கே.டபிள்யூ ஜனரஞ்ஜன பிரதம ஆசிரியர் ராவய**




இன்றுபுத்தகத்திற்கும், நமக்குமானஉறவு தூரவிலகிச் சென்றுள்ளது. காதலர் தினம், ஆசிரியர் தினம், தந்தையர் தினம், தாய் தினம் போன்ற கொண்டாட்டங்களில் காட்டும் அக்கறையை புத்தகதினக் கொண்டாட்டங்களில் காணமுடிவதில்லை.

**தெ.ரவீந்திரன், Book LAB உரிமையாளர்.**



சூழலுக்கும் மனிதருக்கும் இடையேயுள்ள இடைவெளிகள் பற்றிய ஆய்வு சூழலியல் உளவியலில் முதன்மைபெற்று வருகின்றது. மனிதரால் உருவாக்கப்படும் சமூகச் சூழலும் இயற்கைச் சூழலும் மனித நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றன.

**பேராசிரியர் சபா ஜெயராஜா**



திரைப்படம் என்பது பதிவு செய்தல் நாடகம் என்பது பகிர்ந்து கொள்ளுதல். நாடகத்தில்தான் ஒரு நடிகன் முழுவீரியத்தையும் காண்பிக்க முடியும். மிகவும் அனுபவித்துச் செய்ய முடியும் சினிமாவில் கட்டுப்படுத்தப்பட்ட ஒருவித நடிப்பைத்தான் நம்மால் வெளிப்படுத்த முடியும்.

**சார்லி, திரைப்பட, நாடக நடிகர்.**




பி.எல்.480 என்ற பெயரில் அமெக்காவிலிருந்து கப்பல் கப்பலாய் கோதுமையைக் கொட்டினார்கள். கோதுமையில் வந்தது பார்த்தீனியம் என்ற விஷவித்து. பார்த்தீனியம் படராத புஞ்சை கிடையாது. நஞ்சையும் இல்லை. கொத்துமல்லிச் செடியுடன் கீரைச் செடியுடன். ஒட்டிப் பிறந்த பிறவியாய் ஊடாடிக் கொண்டிருக்கிறது பார்த்தீனியம்.

**எழுத்தாளர் செயப்பிரகாசம், தமிழ்நாடு.**



புட்டின் ரஷ்யப் பொருளாதாரத்தைக் காப்பாற்றுவதற்காகச் சீனாவின் பக்கம் சாய்கிறார். அமெரிக்காவும் ரஷ்யாவின் இந்த நகர்வைத் தடுக்கும் வழிகள் அற்றதாகவே உள்ளது. ஆனால் ரஷ்யாவிற்கு சீனா தேவைப்படுவது போல சீனாவிற்கு ரஸ்யாவின் உதவி தேவை என்று கூறமுடியாது.

**வில்லியம் ஜோன்சன், அமெரிக்க விமானப்படை மற்றும் வெளியுறவு சேவையின் ஓய்வுபெற்ற அதிகாரி.**



இரண்டு ரூபாய் முதல் 100 ரூபாய் வரை ஒரே மருந்து பல்வேறு வர்த்தகப் பெயர்களில் விற்கப்படுகின்றன. இது நோயாளிக்கு செய்யும் பாரதூரமான அநீதியாகும். இந்த உற்பத்திகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும். மருந்துச் சந்தையில் உள்ள மருந்துகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரநியமங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்பட்டுள்ளனவா? என்பதைப் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

**மருத்துவர் ராஜா விஜயதுங்க**

இது நம்தேசம்

தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தமிழ் மக்களை மட்டுமல்ல, தமிழ் மொழியையே உதாசீனப்படுத்திய 19 ஆவது திருத்தம்

அரசியல் யாப்பிற்கான 19வது திருத்தம் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஜனாதிபதி முறையை நீக்கவெனக் கொண்டுவரப்பட்ட திருத்தம் உருமாறி ஜனாதிபதியின் அதிகாரங்களில் கட்டுப்பாடு செலுத்துவதாக மாற்றப்பட்டுவிட்டது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒரு தனி மனிதரிடம் ஆட்சி அதிகாரத்தைக் குவித்து விடுவதால் வலுவான சமநிலைத்தலையீடுகள் வேண்டும் என்ற வாதம் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றே.

இலங்கையில் சமநிலைத் தடைகள் பெரிதாக இருக்கவில்லை. இரு தடவைகள் மட்டும் பதவி வகிக்கலாம் என்பது மட்டும் ஒரேயொரு தடையாக இருந்தது. 17 வது திருத்தம் அரசியலமைப்புப் பேரவையூடாகவும் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஊடாகவும் மேலும் பல தடைகளைக் கொண்டு வந்த போதும் சந்திரிகாவே நடைமுறைப்படுத்த ஒத்துழைக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ ஒருபடி மேலே சென்று இருந்த பலவீனமான தடைகளையும் இல்லாமல் செய்து ஜனாதிபதி பதவியை சகல அதிகாரங்களும் கொண்ட முடிமன்னர் என்ற நிலைக்கு மாற்றினார்.

தற்போது 19 வது திருத்தம் பல சமநிலைத் தடைகளைக் கொண்டு வந்திருக்கின்றது. இரு தடவை மட்டும் பதவி வகித்தல், பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூறல், அடிப்படை உரிமைகள் மீதான வழக்குத் தொடுத்தல், அரசியலமைப்புப் பேரவையின் அறிமுகம் என்பவை இவற்றில் முக்கியமானவை.

அரசியல் கலப்பில்லாத சுயாதீனச் செயற்பாட்டிற்கு திருத்தத்திலும் பெரிய வெளி இருக்கவில்லை. அரசியலமைப்புப் பேரவையில் அரசியல்வாதிகளின் ஆதிக்கமே மேலோங்கியுள்ளது. சுதந்திர ஆணைக்குழுக்கள் பலவும் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இவையெல்லாம் சிங்கள தேசத்தின் கவலைகள். நமது கவலை அவையல்ல. 19 வது திருத்தத்தில் தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட நலன்கள் எதுவுமில்லை என்பதே எமது கவலை. எமது தலைவர்களும் தமிழ் மக்கள் நலன்சார்ந்த விடயங்களை சேர்க்குமாறு கோரவில்லை.

இனஒடுக்குமுறை உள்ள ஒரு நாட்டில் அனைத்து அரச நிறுவனங்களும் பேரினவாத கண்ணோட்டத்திலேயே செயற்படும் என்பது தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரலாற்றுப் பட்டறிவு.

இந்நிலையில் இனரீதியான பாதுகாப்புப் பொறிமுறையை கேட்டிருக்கலாம். தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் தீர்மானிக்கும் அதிகாரம் தமிழ் மக்களிடம் இருக்க வேண்டும் என வற்புறுத்தியிருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்திற்கு உதவியது போலவே இது விடயத்திலும் வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டது போல பங்களித்துள்ளது.

20வருடங்களாக தமிழர்கள் மீதான இன ஒடுக்குமுறைக்குத் துணை நின்ற தமிழ் கட்சியை சார்ந்த ஒருவர் உயர்நீதிமன்ற, மேல்நீதிமன்ற நீதிபதிகளாக தமிழர்களும் நியமிக்கப்பட வேண்டும் என ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அது ஒரு இனரீதியான கோரிக்கை. ஆனாலும் அதனை ஏற்க முடியாது எனக் கூறப்பட்டு நிராகரிக்கப்பட்டது. கடந்த இரு தசாப்தகாலமாக அவர் மேற்கொண்ட இணக்க அரசியலுக்கு அவருக்கு கிடைத்த பதில் இதுதான்.

எல்லாவற்றிற்கும் மேலாக திருத்தப் பிரேரணையின் தமிழ்ப் பிரதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆங்கிலப் பிரதி மட்டுமே வழங்கப்பட்டது. பிரபா கணேசன் மொழி புரியவில்லை எனச் சுட்டிக் காட்டிய போது ரணில் விக்கிரமசிங்க "நீ ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளினால் வென்றனீர் வாயைப் பொத்திக் கொண்டிரு" எனக் கூறி அடக்கினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இது பற்றி வாய் திறக்கவில்லை. இவ்வளவிற்கும் பிரபா கணேசனுக்கு ஆங்கிலமும் தெரியும். சிங்களமும் தெரியும். கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் பலருக்குத்தான் ஆங்கிலம் தெரியாது. ஆனாலும் எவரும் வாய் திறக்கவில்லை. இங்கு உறுப்பினர்களுக்குக் கட்டாயம் ஆங்கிலம் தெரிய வேண்டும் என நாம் கூற வரவில்லை.

ஆங்கிலத்தைப் புரிந்து கொள்வதல்ல இங்குள்ள பிரச்சினை. தமிழ்மொழி ஒரு தேசிய இனத்தின் அடையாளம். தமிழ் மொழியைப் புறக்கணித்ததன் மூலம் தமிழ்த் தேசம் அவமானப்படுத்தப்பட்டுள்ளது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

நாட்டின் அதியுயர் சபையாகக் கருதப்படும் பாராளுமன்றத்தினுள்ளே மொழி உரிமையை வலியுறுத்த முதுகெலும்பில்லாதவர்கள் பாராளுமன்றத்தினுள் கூட தமிழ் மொழி உரிமையை மதிக்கத் தயாரில்லாத அங்கீகாரமளிக்கத் தயாரில்லாத, மைத்திரி அரசாங்கத்துடன் இணக்க அரசியல் நடாத்தி தமிழ் மக்களுக்கு நல்வாழ்வு பெற்றுத் தருவார்கள் என யாரும் எதிர்பார்த்தால் அவர்களது எதிர்பார்ப்பு வெறும் கானல் நீர்தான்.

# ஆட்சியாளர்கள் மட்டுமல்ல எம்மவர்களும் ஒடுக்குமுறைக்குக் காரணம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2015 ஆம் ஆண்டிற்கான மேதினப் பொதுக்கூட்டமும் இசை நிகழ்வும் பருத்தித்துறை கொட்டடிக் கடற்கரையில் உள்ள நடராஜா அரங்கில் மே மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. மேதினப் பேரணி மாலை 4.30 மணிக்கு பருத்தித்துறை பெரியபிள்ளையார் கோவிலடியில் ஆரம்பமாகி பஸ் நிலையம் ஊடாகச் சென்று கொட்டடிக் கடற்கரையில் முடிவுற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் - பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் மணிவண்ணன், மகளீர் அணிப் பொறுப்பாளர் பத்மினி சிதம்பரநாதன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் செல்லையா இராசையா, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆனந்தராஜா உட்பட சுமார் அறுநூறு வரையிலான ஆண்களும் பெண்களும் தொழிலாளர்களும் பேரணியில் கலந்துகொண்டனர்.

மேதினப் பொதுக்கூட்டம் காரை நகர் கணேச வித்தியாலய அதிபர் இளங்கோ தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கஜேந்திரகுமார், பத்மினி சிதம்பரநாதன், ஆனந்தராஜா, செல்லையா இராசையா, சட்டத்தரணி சுகாஸ், சட்டத்தரணி திருக்குமரன் கனகராஜா ஆகியோர் உரையாற்றினர்.

**“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணக்க அரசியலைச் செய்கின்றனர். இந்த இணக்க அரசியலினால் 100 நாட்களில் என்ன செய்தனர்? படையினர் பறித்த காணிகளை முழுமையாக மீட்டார்களா? சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தார்களா? காணாமல் போனவர்களை கண்டுபிடித்துக் கொடுத்தார்களா?”**

இளங்கோ தனது தலைமை உரையின்போது 1833 ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட தொழிலாளர் எழுச்சி மே தினமாகக் கொண்டாடப்படுகின்றது. தமிழ் மக்கள் 1920 ஆம் ஆண்டிலிருந்தே போராடி வருகின்றனர். இதில் தமிழ்த் தொழிலாளர்களும் பங்குபற்றத் தவறவில்லை. 94 வருடங்களாக நாம் போராடி வருகின்றோம்.

இப்போராட்டங்களினூடாக இன்று எமது அரசியல் சர்வதேச மட்டத்திற்கு வந்துள்ளது. ஆரம்பகாலத்தில் எமது தலைவர்கள் அறிவு, ஆற்றல் என்பவற்றின் துணைகொண்டு அகிம்சை வழியில் போராடினர். சிங்கள ஆட்சியாளர்கள் இதற்கு செவிசாய்க்காததினால் எமது இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இன்று ஆயுதப் போராட்டம் முடிவிற்கு வந்துள்ளது. எனினும் கட்டமைப்பு சார் இனப்படுகொலை சகிக்க முடியாதளவிற்குத் தொடர்கின்றது. எமது தேசியப் போராட்டத்திற்கு எதிராகச் சிங்கள ஆட்சியாளர்கள் மட்டும் செயற்படவில்லை. எம்மவர்களும் ஒடுக்குமுறைக்குக் காரணமாக உள்ளனர். பிராந்திய வல்லரசின் நிகழ்ச்சி நிரலுக்கு கட்டுப்பட்டு சரணாகதி அரசியலை முன்னெடுக்கின்றனர். இதனை நாம் அனுமதிக்கமுடியாது. இந்த தமிழ்த்துரோக கட்சிகளிடமிருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் இலட்சிய அரசியலை முன்னெடுத்தார். சிங்கள தேசத்திலிருந்து குரல் கொடுத்தார். அதற்காகவே கொலை செய்யப்பட்டார். இன்று அவர் வழியிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செல்கின்றது.

மாகாண சபை முறையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் நிராகரித்தோம். தமிழ் மக்களது அபிலாசைகளை எந்த வகையிலும் அது தீர்க்காது எனக் கூறினோம். எமது கருத்துக்களை நிராகரித்து மாகாண சபையைக் கைப்பற்றியவர்கள் இன்று எதுவும் செய்ய முடியவில்லை எனக் கூக்குரலிடுகின்றனர். காருக்கும் தேநீருக்கும் அடிபடுகின்றனர் என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணிப்பொறுப்பாளர் பத்மினி சிம்பரநாதன் பேசும்போது நீண்டகால ஒடுக்குமுறைக்கு உட்பட்டவர்கள் என்ற வகையில் இன்றைய நாள் எமக்கு முக்கியமான நாள். நாம் சொல்ல முடியாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றோம். தமிழ் அரச அதிகாரிகள் கூட இன்று அடிமைகளாக இருக்கின்றனர். சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு கட்டமைப்புசார் இனப்படுகொலையை மேற்கொண்டு வருகின்றது.

2009 இற்குப் பின்னர் சிங்களக் குடியேற்றங்கள் அதிகமாகியுள்ளன. பொருளாதார ரீதியான ஒடுக்குமுறைகள்

(23 ஆம் பக்கம் பார்க்க)

06.05.2015 இது நம்தேசம்

# அறிக்கைகள் அல்ல செயலே தேவை

-முத்துக்குமார்-

அமெரிக்க அரசுச் செயலர் ஜோன் கெரிதனது இலங்கைப்பயணத்தைமுடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கின்றார். இவர் இலங்கை வருமுன் இலங்கையின் வெளிநாட்டமைச்சருக்கும் படைத் தளபதிகளுக்கும் இந்து சமுத்திரக் கடலில் தரித்திருந்த இராட்சத விமானம் தாங்கிக் கப்பலை அமெரிக்கப் படையினர் காட்டியிருக்கின்றனர். அவரது பயணத்தின் நோக்கம் ஆட்சி மாற்றத்தை பாதுகாப்பதும் தமிழர் எழுச்சியைத் தடுப்பதும்தான். மோடியைப் போலவே அரசாங்கத்திற்குக் கரைச்சல் கொடுக்க வேண்டாம் எனக் கூட்டமைப்பினருக்கு புத்திமதியும் கூறிச் செல்லவும் அவர் தவறவில்லை.


அமெரிக்க இராஜதந்திரிகள் அரசு முறைப் பயணத்தின்போது கருத்துச் சொல்வதிலும் ஒரு ஒழுங்கு முறை உண்டு. தாம் பயணம் செய்த நாட்டின் செயற்பாடுகளை மெச்சுதல், போதாமைகளைக் கூறுதல், ஆலோசனைகளைக் கூறுதல் என்பது தான் அந்த ஒழுங்குமுறை. ஜோன் கெரியின் பயணத்திலும் அது பின்பற்றப்பட்டது. அவர் இலங்கை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளையும் ஜனநாயக மறுசீரமைப்பு முயற்சிகளையும் மெச்சினார். பின்னர் போதாமைகளைக் கூறி சர்வதேச தரத்தில் உள்ளக விசாரணை மேற்கொள்ளுதல், மனித உரிமை நிலவரத்தினை முன்னேற்றுதல், அதிகாரப் பகிர்வை வழங்குதல் என ஆலோசனைகளையும் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர் மெச்சிய விடயங்களும் ஆலோசனை கூறிய விடயங்களும்தான் கவனத்தைப் பெறுகின்றன. இவற்றில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்.

ஜோன் கெரி அவர்கள் முதலில் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுள்ளது எனக் கூறுகின்றார். இங்கு எது சமாதானம் என்ற ஆய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. சிங்களத் தரப்பிற்கு போரில்லா நிலை மட்டும் சமாதானமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு போரில்லா நிலை மட்டும் சமாதானமல்ல. போரில்லா நிலை, இயல்பு நிலையைக் கொண்டு வருதல், அரசியல் தீர்வு ஆகிய மூன்றும் கிடைக்கின்றபோதே சமாதானம் உருவாகும்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை போர் முடிவடைந்துவிட்டது.ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போர் இன்னோர் வகையில் தொடர்கின்றது என்பதே உண்மை. ஆயுதப் போரின் முடிவின் பின்னரும் கட்டமைப்பு சார் இனப் படுகொலை தொடர்கின்றது. மகிந்தர் அரசாங்கம் மன்னர் ஆட்சிக் காலத்தில் வெற்றியடைந்த மன்னர் தோல்வியடைந்த நாட்டை சூறையாடுவதுபோல் பச்சைச் சூறையாடலில் ஈடுபட்டது.

ஆட்சி மாற்றம் வந்த பின்னர் சூறையாடல் நின்று விட்டது எனக் கூற முடியாது. சிங்கள மீனவர்களின் ஆக்கிரமிப்பும், சிங்கள வர்த்தகர்களின் ஆக்கிரமிப்பும், சிங்களக் குடியேற்ற முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன.



இயல்பு நிலையைக் கொண்டு வருதலில் காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரத்திற்கான தீர்வு, இராணுவம் அகலுதல் என்பன உள்ளடங்கும். இவை எவையுமே தீர்க்கப்படவில்லை. காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. முதற் கட்டமாக 1000 ஏக்கர் வலி.வடக்கில் விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்ட போதும் 400 ஏக்கர் வரையே விடுவிக்கப்பட்டுள்ளது. அங்கும் ஏகப்பட்ட இராணுவ கெடுபிடிகள் உண்டு. விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின்வாழ்வாதார திட்டங்கள்பெரியளவிற்கு முன்னெடுக்கப்படவில்லை. சம்பூர் மக்கள் நீண்ட காலமாக அகதி முகாம்களில் வசிக்கின்றனர். அவர்களது காணிகள் விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும் எதுவும் நடைபெறவில்லை.

அரசியல் கைதிகள் விடயம் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுபவர்களும் உள்ளனர். இவர்களை விடுவிப்பது கஸ்டமான ஒன்றல்ல. ஒரு அரசியல் தீர்மானம் மூலம் ஒரு நாளிலே அனைவரையும் விடுதலை செய்துவிடலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது அவ்வாறான விடுதலை இடம்பெற்றது. ஆட்சியாளர்களுக்கு இது தொடர்பில் பெரிய விருப்பங்கள் இல்லை.

அடுத்தது காணாமல் போனோர் விவகாரம். தங்கள் கணவன்மார்களையும் பிள்ளைகளையும் நேரில் கையளித்த சாட்சியங்கள் பல உண்டு. அவர்கள் தரும் சாட்சியங்களின் அடிப்படையில் உண்மைகளைக் கண்டறிவது கஸ்டமான காரியமல்ல. இங்கு தமது படையினரை குற்றவாளியாக்க அரசாங்கம் தயங்குவதால் பின்னடிக்கின்றது. பெயருக்கு ஆணைக்குழு அமைத்து விசாரிக்கின்றது. அந்த ஆணைக்குழு ஒழுங்காக விசாரணைகளை மேற்கொள்வதில்லை. விசாரணைகளை மேற்கொண்டாலும் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது. வெறும் சிபாரிசுகளைச் செய்யும் அதிகாரம் மட்டுமே உண்டு. சிங்கள உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஆணைக்குழு ஒழுங்கான சிபார்சுகளை முன்வைப்பதுமில்லை. முன்வைத்த சிபார்சுகளை அரசாங்கம் கணக்கெடுப்பதுமில்லை. இந்த ஆணைக்குழுக்கள் எல்லாம் சர்வதேச அழுத்தங்களைக் குறைப்பதற்கு மட்டும்தான்.

இராணுவத்தைஅகற்றுதல்.விடயத்திலும் பெரிதாக எதுவும் நடைபெறவில்லை. இராணுவம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்து கொண்டுதான் இருக்கின்றது. ஹோட்டல் நடத்துதல், மக்களின் நிலங்களில் விவசாயம் செய்தல், பண்ணைகளை நடத்துதல் என எவற்றையும் இதுவரை விட்டுவிட வில்லை.

மூன்றாவது அரசியல் தீர்வு விவகாரம் இது விடயத்தில் விருப்பத்திற்கான சைகை எவற்றையும் ஆட்சியாளர்கள் காட்டவில்லை. அமெரிக்க தலைமையிலான மேற்குலகமும், இந்தியாவும் கூட அழுத்தங்கள் எவற்றையும் கொடுக்கவில்லை.இந்தியாதமிழ்மக்களின்அபிலாசைகளை எந்த வகையிலும் தீர்க்காத 13 ஆவது திருத்தத்தையே அரசியல் தீர்வாக முன்வைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றது. மேற்குலகமும் அதற்கு ஒத்தூதுகின்றது. வடமாகாண சபை தந்த அனுபவத்தை பரிசீலித்து பார்ப்பதற்குக் கூட இந்த சக்திகள் தயாராக இல்லை.

இந்நிலையில் சமாதானம் வந்து விட்டது என ஜோன் கெரி தெரிவிக்கும் கருத்து மிகைப்படுத்தப்பட்ட கருத்தேயாகும். சமாதானம் வந்துவிட்டது. அது முதிர்ச்சியடைய வேண்டும் என ஜோன் கெரி கூறியிருக்கின்றார். கட்டமைப்பு சார் இனப் படுகொலைகள் நிறுத்தப்பட்டு, இயல்பு நிலையினைக் கொண்டு வருதல் விவகாரமும் தீர்க்கப்பட்டு, அரசியல் தீர்வு தொடர்பாக இடைக்காலத் தீர்வு ஒன்றினையும் வழங்கியிருந்தால் ஜோன் கெரி கூறிய கருத்தில் உண்மை இருந்திருக்கும். வெறுமனவே சில ஏக்கர் காணிகள் விடுவித்ததையும், ஜனாதிபதிசெயலணிஉருவாக்கப்பட்டதையும் வைத்துக் கொண்டு சமாதானம் வந்துவிட்டது எனக் கூறுவதை ஏற்க முடியாது. ஜனாதிபதி செயலணிகள் தொடர்பாக நிறையவே அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. தவிர சந்திரிகா தலைமையிலான ஜனாதிபதி செயலணி இதுவரை எதனைச் செய்துள்ளது என்றால் எதுவுமே இல்லை.

**அரசியல் கைதிகள் விடயம் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றது. 20 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுபவர்களும் உள்ளனர். இவர்களை விடுவிப்பது கஸ்டமான ஒன்றல்ல. ஒரு அரசியல் தீர்மானம் மூலம் ஒரு நாளிலே அனைவரையும் விடுதலை செய்துவிடலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது அவ்வாறான விடுதலை இடம்பெற்றது. ஆட்சியாளர்களுக்கு இது தொடர்பில் பெரிய விருப்பங்கள் இல்லை.**

மக்கள் எந்தப் பகுதிக்கும் சென்று வரக் கூடிய நிலை உள்ளது என ஜோன் கெரி கூறுகின்றார். மக்கள் சம்பூருக்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கும் செல்ல விரும்புகின்றனர். ஜோன் கெரி கொண்டு போய்விடுவாரா? பெரிய பூசணிக்காயை சோற்றில் மறைக்க ஜோன் கெரி முற்படுகின்றார்.

ஜோன் கெரியும் கருத்துக்களில் மிகவும் அபத்தமான விடயம் சர்வதேச தரத்தில் நம்பத் தகுந்த உள்ளக விசாரணை வேண்டும் எனக் கூறப்பட்ட கருத்தாகும். இது சர்வதேச விசாரணை வேண்டும் என்ற தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாட்டினை சமாதானம் செய்வதற்கு கூறப்பட்ட கருத்தாகவே இருக்கலாம்.

உள்ளக விசாரணை என்பது குற்றவாளியே நீதிபதியாகின்ற நிலையைக் குறிக்கின்றது. நீதியான உள்ளக விசாரணை ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. தனது படையினரையே குற்றவாளியாக்க இந்த அரசாங்கம் ஒருபோதும் முன்வரப் போவதில்லை. தமிழ் மக்களுக்கு இதில் எந்தவித நம்பிக்கையும் கிடையாது.

இனப்படுகொலைகளுக்கு, உள்ளக விசாரணை, அரசியல் தீர்விற்கு உள்ள முயற்சிகள் என்பதெல்லாம் இலங்கைக்குள்ளேயே விவகாரத்தை முடக்கும் செயற்பாடுகள். சர்வதேச சமூகம் தனது பொறுப்பை தட்டிக் கழிக்கும் செயற்பாடுகளே இவை. தமிழ் மக்களுக்கு இவற்றில் நம்பிக்கை எதுவும் கிடையாது. அவர்கள் இவற்றை அனுமதிக்கவும் போவதில்லை.

சமாதானம் என்பது நல்லிணக்கம், சகல இனங்களையும் சமமாக நடாத்துதல், சம உரிமை வழங்குதல், ஒடுக்குமுறை இன்மை என்பவற்றில் தங்கியுள்ளது என ஜோன் கெரி குறிப்பிடுகின்றார். காணாமல் போனோர் விவகாரத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் ஐ.நாவுடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்கிறார். நல்லிணக்கத்திற்கு நீதியும் பதிலளிக்கும் கடமையும் அவசியம் என்கிறார். இவையெல்லாம் வரவேற்கப்படக் கூடிய கருத்துக்கள். ஆனால் இலற்றை அடைவதற்கான வரை படம் என்ன? இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் பங்கு என்ன?

தமிழ் மக்களுக்கு வெறும் அறிக்கைகள் தற்போது தேவையில்லை. செயல்களே தேவை.

# சிவராமை கூத்தமைப்புக்காரர் மறந்தே போயிட்டினம்

வணக்கம் வணக்கம்


நான் கல்வயல் கனகசிங்கம்

எப்படி உங்கட பாடு?

ஏதோ என்ர பாடும் போகுது.

மேதினமென்றது தொழிலாளர்களது உரிமை மற்றும் ஒற்றுமைக்கான அடையாளமெண்டது உங்களுக்கு சொல்லித்தெரிய வேண்டியதில்லை. தமிழரசுக் கட்சிக்காரர் தங்களுடைய மே தினத்தை திருகோணமலையில அரங்கேற்றியிருக்கினம். பங்காளிகள் மட்டக்களப்பு அது இது வெண்டு தங்களுக்கு வசதியான இடத்தில நடத்தி முடிச்சிருக்கினம்.

பின் கதவு எம்பி தேர்தல் தோல்வியை புரிஞ்சு கொண்டு தேர்தல் நடைமுறையில திருத்தத்தைக் கொண்டு வர தலை கீழாக முயன்று கொண்டிருக்கின்றார். புதிய வியூகத்தின்படி சிங்கக் கொடி வீரனையோ, பின்கதவு எம்பியையோ நீங்கள் நிராகரித்தாலும் கட்சி தீர்மானிக்கிற ஆள் பதவிக்கு வாறதென்று முடிவு செய்யப்பட்டிருக்காம். அப்ப நிராகரிப்பு தனிநபரென்று இருக்காதாம். ஒட்டுமொத்த கட்சியெண்டு தான் மக்களின்ர மனதில ஏறவேண்டும்.




போன கிழமை சும்மா ஒருக்கால் திருகோணமலை பக்கம் எட்டிப் பார்த்திட்டு வந்தனான். இடம் பெயர்ந்த சனமிருக்கிற சம்பூர் முகாம் பக்கமும் எட்டிப்பார்த்தனான். அதுகள் திட்டித் தீர்க்குதுகள். அதுவும் சிங்கக்கொடி காத்தவீரன் அகப்பட்டால் கட்டியிருக்கிற வேட்டி உரிஞ்சு விழுகின்ற மாதிரி நாலு கேள்வி கேட்கவேணுமெண்டு சனம் நிக்குது.

அதிலயும் சம்பூர் அனல்மின் நிலையத்திற்கெண்டு காணி இந்தியாவிற்குதான் தார வார்க்கப்படப் போகுது. அதனால் தான் டெல்லியின்ர எடுபிடிகள் இந்த விசயத்தில மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கினம். அதுவும் சிங்கக்கொடி காத்த வீரனோ, நான் என்ன செய்யிறது பகைக்கவும் ஏலாது, அதனால தான் மௌனம் காக்கிறதாக சகபாடிகளிற்ற சொல்லியிருக்கிறார். சனமோ அடுத்தமுறை புள்ளடி கேட்டு வரக்கே நாங்கள் பதில் சொல்லியனுப்புவமெண்டு சீறி சினக்குதுகள்.

மறைந்த மாமனிதர் சிவராமின்10ஆவதுஆண்டுநினைவுநிகழ்வு இம்முறை அவரது சொந்த மண்ணான மட்டக்களப்பினில் அனுஷ்டிக்கப் பட்டிருக்குது. வடக்கு – கிழக்கு ஊடக அமைப்புக்கள் ஒன்று திரண்டு முதல் தடவையாக வெற்றிகரமாக சிவராமின்ர நினைவேந்தலை நடத்தியிருக்கின்றமை கவனத்தில கொள்ள வேண்டியதொன்று.

அதிலயும் கூட்டமைப்பின்ர உருவாக்கத்தில பெரும் பங்காற்றின சிவராமை, கூத்தமைப்புகாரர் மறந்தே போயிட்டினம். இது போதாதெண்டு அவரின்ர தியாகத்தையும், பேரையும் பயன்படுத்தி புலம்பெயர்ந்தவையில பலரும் அந்தாளை மறந்து போயிட்டினம். கிழக்கின் முத்துக்களுள் ஒன்றென்று வடக்கு ஊடகவியலாளர்கள் சமூகம் திரண்டு போய் அங்கு அஞ்சலி செலுத்தியிருக்குது.

ஆனால் அந்த நினைவேந்தல் கூட்டத்திலயும், மைக் பிடிச்சு வீரக்கதை பேச கூத்தமைப்புக்காரர் சிலர் பின்னாலை திரிந்திருந்தாலும் ஏற்பாட்டுக்காரர்கள் மறுதலித்துப் போட்டதாக கேள்வி. ஊரான் வீட்டு மேடையில ஏறி பிரசங்கம் செய்ய அவையள் உங்கட கட்சி என்ன செய்ததென்று நாக்கை புடுங்கிக் கொள்ளுற மாதிரி கேள்வி கேட்டதாக தகவல்.

வடமாகாண சபையில, சிவாஜிலிங்கத்தார் கொண்டு வந்த சர்வதேச மத்தியஸ்த பிரேரணை காலவரையறையின்றி ஒத்திவைக்கப் பட்டிருக்குது. முன்னரும் இன அழிப்பு பிரேரணை ஒன்றை கொண்டு வாறதில பெரும் பங்கை சிவாஜிலிங்கமே ஆற்றியிருந்தார். அவர் கொண்டுவந்த பிரேரணை ஒரு வருடகாலம் இழுபறிப் பட்டுத்தான் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதேபோல சர்வதேச மத்தியஸ்தம் கோர கால அவகாசம் விதித்திருக்கிறார் முதலமைச்சர். அத்தோட யாரெல்லாம் மத்தியஸ்தத்திற்கு வரலாமென்ற நிபந்தனையையும் நீக்கியிருக்கிறார். ஆனாலும் பிரேரணையினை ஐ.நா அறிக்கை வெளிவரும் வரை பிற்போட சொல்லியிருக்கின்றார். உவற்றை நோக்கம் விளங்கேல்லை பாருங்கோ.

மக்களிற்கு பெருமெடுப்பில நம்பிக்கையினை ஊட்டிப் போட்டு பழையபடி நடுறோட்டில விடுகின்ற மாதிரி இருக்கக் கூடாதென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

# நையாண்டியார் பதில்கள்

க.ஜெயக்குமார் – செட்டிக்குளம், வவுனியா.

கேள்வி : ஒருவாறாக 19 இனை நிறைவேற்றிவிட்டார்களே?

பதில் : முதலில் 19 நிறைவேற்றத்தினால் தமிழ் மக்களிற்கு சொல்லிக் கொள்ளத்தக்கதாக எதுவுமே கிட்டப்போவதாக இல்லை. அதனால் பொருட்படுத்தத் தேவையில்லை. ஆனால் 19 வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்னதாக வெட்டி, ஒட்டி, வெறும் எலும்புக் கூடாக்கிய சிங்கள ஆட்சியாளர்கள், எவ்வாறு தீர்வொன்றைத் தருவார்களென கனவு காண முடியுமென்பது கேள்வியே.

க.ரமேஸ், கரவெட்டி

கேள்வி: கூட்டமைப்புத் தலைமை மீதான மக்களது வெறுப்பு உச்சமடைந்திருக்கின்றதே?

பதில்: தேர்தல்கால எழுச்சியூட்டல்கள், உணர்வுபூர்வமான அரசியல் நின்று நிலைக்காதென்பதே உண்மை. கூட்டமைப்பின் தலைவர்களென அடையாளப்படுத்திக்கொள்பவர்கள் மக்களினை சந்திப்பதோ அவர்களது கருத்துக்கள், உணர்வுகளையோ கண்டு கொள்வதில்லையென்பதும் உண்மை. ஒட்டுமொத்த தமிழினத்தை அடைவு வைக்கும் அவர்களது சுயநல அரசியல் சாயம் வெளுப்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.அத்தகைய வெறுப்பே மக்கள் உண்மையாளர்களை அடையாளம் கண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பின்னால் அணி திரளவும் காரணமாகின்றது.

ப.பிலோமினா – வசாவிளான்

கேள்வி : வலி.வடக்கு மீள்குடியமர்வு என்ன ஆச்சு?

பதில் : மைத்திரியின் நூறு நாளுடன் அந்தக் கதையும் முடிந்தாயிற்று. புதிதாக நாட்டப்படும் நிரந்தர கொங்கிறீற் தூண் உண்மைக் கதையினை சொல்லி நிற்கின்றது. முட்கம்பி வேலிகளிற்கு அப்பாலுள்ள வீடுகளையும் காணிகளையும் விரக்தியுடன் வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு ஏதும் மக்களிடம் இல்லை. ஆனாலும் விடுவிக்கப்பட்ட பகுதிகளினில் பெரும்பாலானவை எப்போதும் படையினரால் பயன்படுத்தப்பட்டதான தடயங்கள் இல்லாதேயுள்ளன. அவ்வாறாயின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பினில் பெரும் பகுதி வெறும் காடுபற்றியதாகவேயுள்ளது.

சு.சொரூபன், கொக்கட்டிச்சோலை,மட்டக்களப்பு

கேள்வி : தந்தை செல்வா நினைவுப்பேருரையினை சந்திரிகா ஆற்றியமை தொடர்பினில்?

பதில் : தந்தை செல்வாவின் ஆவிகூட ஏற்பாட்டாளர்களை மன்னிக்காது. மஹிந்த எவ்வாறு தண்டிக்கப்படவேண்டியவரோ அதே போன்றே போர்க்குற்றங்கள், இன அழிப்பு தொடர்பினில் சந்திரிகாவும் தண்டிக்கப்படவேண்டியவர். அவ்வாறானவரினைக் கொண்டு தமிழினத் தலைவரிற்கு நினைவுப்பேருரை நடத்தியவர்கள் அடுத்துவரும் ஆண்டுகளினில் கோத்தபாய ,மஹிந்தவை கூட அழைப்பார்கள். கலிகாலமைய்யா.

க.சிவகுமாரன், கொக்குவில்

கேள்வி – ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மீண்டும் வடக்கினில் தலைதூக்கத் தொடங்கியுள்ளதே?

பதில்– சர்வதேச ஊடக அமைப்பொன்று விடுத்துள்ள செய்திக்குறிப்பினில் இதனைத் தெளிவாக விபரித்துள்ளது. மைத்திரி அரசினது காவல்துறை ஊடகவியலாளர்களை வடிகட்டுவதாக அது குறிப்பிட்டுள்ளது. இருந்தால் இணக்க அரசியல் செய்யும் ஊடகவியலாளராக இரு. இல்லாவிடின் ஊடகத்தொழிலை விட்டு விலகு எனும் பாணியில் மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. ஆட்சி மாற்றமென்ற பேரில் ஆட்கள் மாறியிருக்கின்றனரேயன்றி வேறெதுவுமில்லை.

ச.சிவரூபன், சம்பூர் இடம்பெயர்ந்தோர் முகாம்

கேள்வி : சம்பூர் நில ஆக்கிரமிப்பு பற்றி தமிழ் அரசியல் தலைமைகள் மூச்சுவிட மறுக்கின்றனவே?

பதில் : உண்மையினில் ஆக்கிரமிக்கப்படும் நிலம் இந்தியாவிற்கு அனல் மின் நிலையம் அமைக்கவே வழங்கப்படப்போகின்றது. அதனால் டெல்லி விசுவாசிகளால் இது பற்றி வாய் திறக்க முடியாது. அடக்கியே வாசிப்பார்கள். மக்கள் தாமாகவே போராடவேண்டியது காலத்தின் கட்டாயமாகின்றது. போராடாத இனம் தலைநிமிர்ந்து வாழ்ந்ததாக வரலாறு இல்லை. என்ன மக்கள் போராடவும் முட்டுக்கட்டை போடுபவர்களாகவே கூத்தமைப்பின் தலைமை இருப்பது தலையெழுத்தன்றி வேறெதுவுமில்லை.

சி.சிவனருள்வேலன்

கேள்வி: சம்பூர் அனல் மின்நிலையம் திருகோணமலை முழுவதுக்கும் அழிவு ஏற்படுத்துமாம் என்பதால் அதனை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி மாவட்டத்தின்ர மூத்த தலைவரிட்ட கேட்க அவர் மறுத்திட்டாராமே?

பதில்: அவர் திட்டவட்டமா சொல்லிப்போட்டாராம் இந்தியாவை சங்கடப்படுத்திறமாதிரி நான் ஒரு நாளும் செயற்படமாட்டன் என்று.



நேயா

# பனிக்கண்டத்தில் சிறைபிடிக்கப்பட்ட எண்ட்யூரன்ஸ்



ஷாக்கிள்டன் தலைமையில் அண்டார்டிகாவின் ஒரு பகுதியைத் தொட எண்ட்யூரன்ஸ் கப்பல் போய்க்கொண்டிருந்தது. அதேநேரம் இவர்களுக்கு உதவுவதற்காக அண்டார்டிகாவின் எதிர்ப்பகுதியான ராஸ் கடலை நோக்கி அரோரா கப்பல் பயணித்தது. எண்ட்யூரன்ஸ் கப்பல் குழு அண்டார்டிகாவைத் தொட்ட பிறகு, தேவையான அத்தியாவசியப் பொருட்களைத் தரைவழியாகத் தரவே அரோரா சென்று கொண்டிருந்தது.

பனிக் கண்டத்தைக் கடந்து செல்லத் திட்டமிட்ட இந்தப் பயணத்தில் கப்பல் குழுவினருக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முழுவதையும் எண்ட்யூரன்ஸ் கப்பலே சுமந்து செல்ல முடியாது. அத்தியாவசியப் பொருட்கள் இல்லையென்றால் கப்பல் குழுவினர் உயிர் பிழைக்க முடியாது. அந்தத் தேவையை நிறைவு செய்யவே மேக்கிண்டாஷ் தலைமையில் அரோரா கப்பல் சென்றது.

## வெடித்தது பிரச்சினை

ஆனால், எண்ட்யூரன்ஸ் கப்பல் அண்டார்டிகா கண்டத்தைத் தொடுவதற்கு முன்னதாகவே பிரச்சினை வெடித்தது. பயணம் தொடங்கி ஒன்றரை மாதத்தில் குளிர்காலம் தீவிரமடைய ஆரம்பித்தது. 1915 ஜனவரி 18-ம் தேதி வெண்டல் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த எண்ட்யூரன்ஸ் கப்பலைச் சூழ்ந்து பனி படர ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாகப் பனிப் பாறைகளின் நடுவே கப்பல் சிக்கிக்கொண்டது.

பனிப்பாறைகள் விலகுவதாகத் தெரியவில்லை. பனிப்பாறைகளை வெட்டியெடுத்துக் கப்பலை வெளியேற்றும் கப்பல் குழுவின் முயற்சி தோல்வியில் முடிந்தது. கப்பலில் இருந்த குழுவினரின் எண்ணிக்கை 28.

## பனிக்கண்டத்தின் மேலே

அடுத்த 9 மாதங்களுக்குப் பனிப் பாறைகளால் கப்பல் வடக்கு நோக்கித் தாறுமாறாக நகர்த்தப்பட்டுக்கொண்டே இருந்தது. அக்டோபர் மாதத்தில் பனிப் பாறைகள் கப்பலின் பலகைகளை உடைக்க ஆரம்பித்தன. கப்பல் உடைந்து மூழ்கத் தொடங்கியது. வேறு வழியில்லாத நிலையில் எண்ட்யூரன்ஸ் கப்பலைக் கைவிட ஷாக்கிள்டன் உத்தரவிட்டார்.

அதற்குப் பிறகும் வடக்கு நோக்கிப் பனிப்பாறைகள் நகர்ந்து கொண்டேவர, கப்பல் குழுவினர் பனிப்பாறைகளின் மீதே தற்காலிக முகாமில் பல மாதங்களுக்குத் தங்கியிருந்தனர். அவர்களிடம் அவசர காலப் படகுகள் இருந்தன. ஆனால், அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்றால்கூட, பனிப்பாறைகள் உடைந்து படகு செல்வதற்குத் தண்ணீர் வேண்டுமே.

அவர்கள் கடல் நாய் (சீல்), பென்குயின்களை வேட்டையாடிச் சாப்பிட்டனர். கடல்நாய்களின் கொழுப்பை எரிபொருளாகப் பயன்படுத்தினர்.

பெரும்பாலான நேரம் எதுவும் வேலை செய்ய முடியாது என்பதால் அவசரகாலப் படகுகளைத் தலை கீழாகக் கவிழ்த்து, தூங்கும் பைகளுக்குள் புகுந்துகொண்டு அவற்றுக்குள் தூங்கினர்.

## பெரும் துணிச்சல்

பனி விலக ஆரம்பித்த பிறகு அருகிலிருந்த தரைப்பகுதியான யானைத் தீவை நோக்கி அவசரகாலப் படகுகளில் முன்னேறினர். அந்தத் தீவில் இருந்து ஐந்து பேருடன் எண்ட்யூரன்ஸ் கப்பல் புறப்பட்ட தெற்கு ஜார்ஜியா தீவுக்கு அவசரகாலப் படகில் செல்லத் தயார் ஆனார் ஷாக்கிள்டன். மிகவும் குறுகலான அந்தக் கடல் பகுதியில் 1916 ஏப்ரல் 24-ம் தேதி புறப்பட்டனர்.

காதை கிழிக்கும் பலத்த காற்றும், உறைய வைக்கும் குளிர்ச்சியான தண்ணீர் படகுக்குள் புகுவதுமாகப் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தனர். திசையறிய அவர்களிடம் மாலுமிகளின் காலமானி மட்டுமே இருந்தது. அதைக் கொண்டு திசையறிந்து, மிகவும் துணிச்சலுடன் 1,287 கி.மீ. தொலைவை 17 நாட்களில் கடந்து தெற்கு ஜார்ஜியாவை அடைந்தனர். ஆனால், அதிலும் ஒரு துரதிருஷ்டம். அவர்கள் சென்றடைந்தது தெற்கு ஜார்ஜியாவின் மற்றொரு முனை. உதவியைப் பெற வேண்டுமானால், மறு முனையை அடைந்தாக வேண்டும். அப்பகுதியில் நெடிதோங்கி இருந்த மலைகளை ஏறிக் கடப்பது தான்ஒரே வழி. கடலை துணிச்சலாகக் கடந்த ஆறு பேரும் மலைகளையும் ஏறிக் கடந்தனர்.

## நிறைந்தது பயணம்

மறு முனையை அடைந்து உதவியைப் பெற்றனர். யானை தீவில் எஞ்சியிருந்த கப்பல் குழுவினரை மீட்க ஷாக்கிள்டன் திரும்பி வந்தபோது, ஐந்து மாதங்கள் கடந்திருந்தன. தன் குழுவினர் அனைவரையும் எந்த உயிர் சேதமும் இல்லாமல், தெற்கு ஜார்ஜியாவுக்கு ஷாக்கிள்டன் மீட்டுக் கொண்டுவந்தார். இதுதான் எண்ட்யூரன்ஸ் கப்பல் குழுவினர் காவியப் பயணம்.

அதேநேரம், அண்டார்டிகா கண்டத்தின் மற்றொரு முனையில் இருந்த ராஸ் கடல் குழுவினரோ மாறுபட்ட பயங்கரமான அனுபவத்தை எதிர்கொண்டனர். கடும் காற்றில் சிக்கிய அவர்களுடைய அரோரா கப்பல் சேதமடைந்தது. அதில் இருந்த கருவிகளும், அத்தியாவசியப் பொருட்களும் வீணாகின. இந்தப் பிரச்சினையில் அரோரா கப்பல் குழுவைச் சேர்ந்த 3 பேர் மடிந்தனர்.

---

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(மலை முரசின்.....)

கொள்வதற்கான சர்வதேச தரத்திலான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். திருகோணமலை சம்பூர், முல்லைத்தீவின் கேப்பாபிலவு, யாழ்ப்பாணத்தின் வலிவடக்கு பிரதேசங்கள் உள்ளிட்ட போரினால் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் உடனடியாக மீள்குடியேற்றப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியில் இருந்து நடைபெற்றுவரும் அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அனைத்துத் தொழிலாளர்களும் அவர்களுக்கான உரிமைகளுடனும், மரியாதையுடனும் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

தொழிலாளர்களை அடிமையாக, வீட்டுச் சேவர்களாக நடாத்துவது இல்லாதொழிக்கப்பட வேண்டும் போன்ற பல பொதுப்பிரகடனங்களும் வெளியிடப்பட்ட அதேவேளை குறித்த மேதின ஊர்வலத்திற்குப் பங்களிப்புச் செய்த நான்கு தொழிற்சங்கங்களின் சார்பில் பல்வேறுபட்ட விசேட பிரகடனங்களும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரகடனங்கள் யாவும் சிங்கள மொழிக்கு மாற்றப்பட்டு ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் அனைத்து அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபையினருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று மலைமுரசின் ஆசிரியர் தெரிவித்தார். (அ)

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(மட்டக்களப்பு யுவதி......)

அவரிற்கு ஜனாதிபதி ஏப்ரல் முதலாம் திகதி பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

எனினும் சித்திரைப் புத்தாண்டையொட்டி தொடராக வந்த நீண்ட நாள் விடுமுறை காரணமாக ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு குறித்த கடிதம், சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு அனுப்ப தாமதமாகியிருந்தது. அத்துடன் உதயஶ்ரீயை உடனடியாக விடுதலை செய்வதற்கு அவர் சார்பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு விலக்கிக் கொள்ளப்படாமையால் அந்த விவாரம் உதயஶ்ரீயின் விடுதலையில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்ததாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஆ.இ.அ பொது......)

எனவே தமிழ், முஸ்லீம் மக்கள் இந்த பெருச்சாளிகள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டுமென்றார்.

புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் வடக்கு, கிழக்கு மக்களுக்கு நீண்ட கால காணி, குடியிருப்பு பிரச்சினைகள், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பவற்றிலும் அரசு கூடுதல் அக்கறை கொள்ள வேண்டும். அதேவேளை புதிய தேர்தல் முறை மாற்றம் தமிழ், முஸ்லீம் மலையக சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை பாதிக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது என்கின்ற மேலதிகக் கோரிக்கைகளும் மேதின கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. (அ)

பொருளாதாரத்தாலும் மதத்தாலும் இனத்தாலும் அரசியலாலும் ஒடுக்கப்பட்ட ஏழை மக்களுக்காகத் தொடர்ந்து போராடுவதும் அவர்கள் பக்கம் நிற்பதும் தான் என்னுடைய நியாயமாகக் கருதுகிறேன். புரட்சியாளர்கள், நல்ல தலைவர்கள், ஆசிரியர்களால்தான் சமூக மாற்றத்தைக் கொண்டு வரமுடியும். அதனால் நான் இவர்களைத்தான் நம்புகிறேன்

எஸ்.சுஜாதா

# ஒடுக்கப்பட்டவர்களுக்காக போராடும் ஆலிஸ்

போராட்டக்காரர் என்பது தவிர உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர், கவிஞர், ஆசிரியர் என்று பல்வேறு முகங்களும் இவருக்கு உண்டு.

"போராட்டம் என்பது நான் பூமியில் வசிப்பதற்கான வாடகை" என்று சொல் வதிலேயே தான் யார் என்பதை உணர்த்தி விடும் இவர் ஆலிஸ் வாக்கர்.

அமெரிக்காவில் உள்ள ஜார்ஜியாவில் பிறந்தவர் என்றாலும் ஆலிஸ் தன்னை ஒரு நாட்டின் அடையாளமாகவோ, ஒரு கண்டத்தின் அடையாளமாகவோ வெளிப்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை. பூமியில் வசிக்கும் மனிதர்கள் என்ற அடையாளம் மட்டுமே நம் எல்லோருக்கும் போதுமானது என்கிறார்.


அமெரிக்காவில் நிறவெறி நிலவி வந்த காலத்தில், ஆப்பிரிக்க அமெரிக்கத் தம்பதிக்குப் பிறந்தார் ஆலிஸ். அப்பா விவசாயக் கூலியாகக் குறைந்த வருமானம் ஈட்டிக்கொண்டிருந்தார். அம்மா வீட்டு வேலைகளைச் செய்துவந்தார். சின்ன வயதிலேயே தான் சந்திக்கும் மனிதர்களை உற்றுக் கவனிப்பது ஆலிஸின்வழக்கம். ஒருநாள் பண்ணை உரிமையாளர் ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கு எதற்குப் படிப்பு என்று கேட்டபோது, ஆலிஸின் அம்மா கொதித்துவிட்டார். தன்னுடைய குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார்.

எட்டு வயதில் தன் சகோதரன் வைத்திருந்த துப்பாக்கி வெடித்ததில் ஆலிஸின் வலது கண் பாதிக்கப்பட்டது. அவர்களிடம் கார் இல்லாததால் ஒரு வாரம் கழித்துத்தான் மருத்துவரிடம் செல்ல முடிந்தது. பார்வை பறிபோய்விட்டதாக மருத்துவர் கூறினார். கண்ணில் ஏற்பட்ட தழும்பைக் கண்டு எல்லோரும் கிண்டல் செய்தனர். இதனால் பெரும்பாலான நேரத்தைத் தனிமையிலேயே கழித்தார் ஆலிஸ். நிறைய புத்தகங்கள் படித்தார். தன் எண்ணங்களை வெளிப்படுத்தும் விதத்தில் கவிதைகளை எழுதினார். 14 வயதில் அறுவை சிகிச்சை மூலம் கண்ணில் ஏற்பட்ட தழும்பு அகற்றப்பட்டது.

## எழுத்தும் ஆயுதமே

கல்லூரியில் படிக்கும்போது பேருந்தில் உட்கார்ந்திருந்த ஆலிஸை ஓர் அமெரிக்கப் பெண் இருக்கையை விட்டு எழச் சொன்னார். அந்த நிகழ்ச்சி ஆலிஸை வெகுவாகப் பாதித்தது. ஒருமுறை மார்டின் லூதர்கிங்கைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது வழிகாட்டுதலில் ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் சிவில் உரிமைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டார் ஆலிஸ். அன்று ஆரம்பித்த போராட்டத்தை இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

ஒரு பக்கம் போராட்டம், இன்னொரு பக்கம் எழுத்து. ஆலிஸின் நாவல், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைப் புத்தகங்கள் அடுத்தடுத்து வெளிவந்து வரவேற்பைப் பெற்றன. அவரது எழுத்துகளைப் பார்த்து, மிஸ் மேகசின் ஆசிரியர் பொறுப்பு தேடி வந்தது. பெண்ணுரிமைகளை வலியுறுத்தி காத்திரமான கட்டுரைகளை எழுதி வந்தார்.



சிவில் உரிமைப் போராட்டங்களில் தன்னுடன் பங்கேற்ற மெல்வின் ரோசென் மனைத் திருமணம் செய்து கொண்டார் ஆலிஸ். இது கலப்புத் திருமணம். வெள்ளை இனம் முதன்மையான இனமாகக் கருதப்படவேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வந்த 'குக்ளஸ் க்ளான்' என்ற பழமைவாத அமைப்பு ஆலிஸையும் அவருடைய கணவரையும் தாக்கியது. உயிர் பயத்தை ஏற்படுத்தியது. எத்தனையோ இன்னல்களைச் சமாளித்து வந்த ஆலிஸ், இவர்களையும் தைரியமாக எதிர்கொண்டார்.

1982-ம் ஆண்டு ஆலிஸைப் புகழின் உச்சிக்குக் கொண்டுசென்ற 'த கலர் பர்ப்பிள்' நாவல் வெளியானது. அமெரிக்கா கடைப்பிடித்து வந்த நிறவெறிக் கொடுமைகளைச் சொன்னதோடு, ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் பிற்போக்குத்தனங்களையும் இந்த நாவல் சுட்டிக்காட்டியது. அடுத்த ஆண்டு புலிட்சர் விருதும் நேஷனல் புக் விருதும் இந்த நாவலுக்கு வழங்கப்பட்டன. 1985-ம் ஆண்டு ஹாலிவுட் இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் நாவலை அதே பெயரில் திரைப்படமாக எடுத்தார். மிகப் பெரிய வரவேற்பைப் பெற்ற இந்தத் திரைப்படம் பல்வேறு விருதுகளையும் தட்டிச் சென்றது.

## வன்முறைக்கு எதிரான பயணம்

2003-ம் ஆண்டு சர்வதேசப் பெண்கள் தினத்தில் வெள்ளை மாளிகை வாசலில் இராக் போரை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, சிறை சென்றார் ஆலிஸ். இராக் மட்டுமல்ல, உலகின் எந்த நாட்டிலும் மதம், இனம், அரசியல் காரணங்களுக்காக வன்முறைகள் நிகழ்த்தப்பட்டால் அவற்றுக்கு எதிராக முதலில் ஒலிக்கும் குரல் ஆலிஸுடையதாக இருக்கிறது. இஸ்ரேலுக்கு எதிராக மிகக் கடினமான பிரச்சாரங்களைச் செய்துவருகிறார். இன வேறுபாட்டைக் கடைப்பிடிக்கும் இஸ்ரேலின் ஹிப்ரு மொழியில் தன் நூல் வெளிவருவதைத் தடை செய்துவிட்டார்.

"இன வேறுபாட்டை எதிர்க்கும் என் எழுத்து, இன வேறுபாட்டை தூக்கிப்பிடிக்கும் மனிதர்கள் பேசும் ஒரு மொழியில் வெளிவருவதில் எந்த அர்த்தமும் இல்லை" என்கிறார். ஆப்பிரிக்கா, இந்தியா, பாலி என்று உலகம் முழுவதும் பயணம் செய்கிறார். அங்கு வாழும் மக்களின் நிலைமைகளைக் கண்டுணர்கிறார்.

"பொருளாதாரத்தாலும் மதத்தாலும் இனத்தாலும் அரசியலாலும் ஒடுக்கப்பட்ட ஏழை மக்களுக்காகத் தொடர்ந்து போராடுவதும் அவர்கள் பக்கம் நிற்பதும்தான் என்னுடைய நியாயமாகக் கருதுகிறேன். புரட்சியாளர்கள், நல்ல தலைவர்கள், ஆசிரியர்களால்தான் சமூக மாற்றத்தைக் கொண்டு வர முடியும். அதனால் நான் இவர்களைத் தான் நம்புகிறேன்" என்கிறார் ஆலிஸ்.

ஆலிஸின் புத்தகங்கள் நீதி, சமத்துவம், அரசியல், சுற்றுச்சூழல் ஆகியவற்றை முன்னிறுத்துகின்றன. இவை 24 உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதுவரை ஒன்றரைக் கோடிப் பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றன. புத்தகங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தை ஆப்பிரிக்காவில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கி வருகிறார்.

மனித உரிமைகள் மட்டுமின்றி பூமியில் வசிக்கும் ஒவ்வொரு உயிரினத்துக்காகவும் தான் போராடுவதாகச் சொல்கிறார் ஆலிஸ். அதனால் சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கு எதிராகவும் வனவிலங்குகள் பாதுகாப்புக்கு ஆதரவாகவும் செயல்படுகிறார். தன் வாழ்க்கையில் 50 ஆண்டுகளைப் போராட்டங்களுக்காகவே அர்ப்பணித்துள்ள ஆலிஸ், தன் மகளையும் போராட்டக்காரராகவே உருவாக்கியிருக்கிறார்.

# கர்ப்ப காலத்தில் சில முக்கிய பிரச்சினைகள்

கர்ப்பமாய் இருக்கும்போது நோயுறுவது கூடிய கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்று. ஏனெனில் இந்த நேரத்தில் நோய் ஏற்பட்டால் கர்ப்பமாய் இருக்கும் பெண்ணின் ஆரோக்கியத்தைக் கெடுப்பது மாத்திரமின்றி, அவளது பிரசவத்திலும் சிக்கல்களைக் கொடுக்கலாம், எல்லாவற்றிற்கும் மேலாக வயிற்றில் வளரும் குழந்தையின் ஆரோக்கியத்தைக் கெடுத்து அதன் வளர்ச்சியையும் பாதிக்கலாம்.

கர்ப்பிணியும் ஒரு சாதாரண மனித உயிர்தான். எனவே ஏனைய மனிதர்களுக்கு உண்டாகக் கூடிய அல்லது தொற்றக் கூடிய நோய்கள், கர்ப்பமாய் இருக்கும் எந்தப் பெண்ணுக்கும் உண்டாகலாம்.

ஆயினும் கர்ப்பமாய் இருக்கும் போது நோயுறுவது கூடிய கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்று. ஏனெனில் இந்த நேரத்தில் நோய் ஏற்பட்டால் கர்ப்பமாய் இருக்கும் பெண்ணின் ஆரோக்கியத்தைக் கெடுப்பது மாத்திரமின்றி, அவளது பிரசவத்திலும் சிக்கல்களைக் கொடுக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக வயிற்றில் வளரும் குழந்தையின் ஆரோக்கியத்தைக் கெடுத்து அதன் வளர்ச்சியையும் பாதிக்கலாம்.

எனவே கர்ப்பகாலத்தில் நோய்கள் ஏற்படாமல் இருக்க, கூடிய கவனம் செலுத்துங்கள். சரியான சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பெரும்பாலான தொற்று நோய்கள் தொற்றுவதைத் தடுத்துவிடலாம். காய்ச்சல், தடிமன், வயிற்றோட்டம், இருமல் போன்ற தொற்று நோய்களுக்கு ஆளானவர்களுடன் நெருங்கிப்பழக வேண்டாம். சுத்தமாக இருங்கள். உங்கள் ஆரோக்கியத்திலும், உணவிலும் போதிய கவனம் செலுத்துங்கள். இவற்றைக் கடைப்பிடித்தால் தொற்று நோய்கள் உங்களை நெருங்காது.

கர்ப்பகாலத்தில் உண்டாகக் கூடிய எல்லா நோய்களையும் பற்றி ஆராய்வது இங்கு முடியாத காரியம். எனவே மிக முக்கியமானதும், நீங்கள் அறிந்திருக்க வேண்டியதும், நீங்கள் அறிய ஆவல்படக் கூடியதுமான சில நோய்களைப்பற்றி மாத்திரம் சுருக்கமாகப் பார்ப்போம்.

**இரத்தசோகை**

எமது நாட்டில் பெரும்பாலான கர்ப்பிணிகளைப் பாதிப்பது இந்த நோயே. பொருள் வசதி குறைந்தவர்களையே அதிகம் பாதிக்கிறது. காரணம் அவர்களால் நல்ல சத்துள்ள உணவுகளை வாங்கி உண்ண முடியாதிருக்கிறது. ஆனால் நல்ல பொருள் வசதி உள்ளவர்களையும் பல தருணங்களில் பாதிக்கின்றது. இதற்குக் காரணம் சத்துள்ள உணவுகள் பற்றிய போதிய அறிவின்மையும், கர்ப்பகாலத்தில் விதிக்கப்படும் சில பிழையான உணவுக் கட்டுப்பாடுகளும் தான்.

உங்களுக்கு இரத்த சோகை இருந்தால் கர்ப்பகாலத்திலும் பிரசவ நேரத்திலும் பல பிரச்சினைகள் ஏற்படலாம்.

- கர்ப்பகாலத்தில் உங்கள் ஆரோக்கியம் பாதிப்படையும்.
- பலவித தொற்று நோய்கள் இலகுவாகப் பரவக்கூடும்.
- வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கலாம்.
- பிரசவத்தின்போது உங்களால் போதிய ஒத்துழைப்பு வழங்க முடியாமல், நீங்கள் சோர்வடையலாம்.
- கர்ப்பகாலத்திலும், பிரசவ நேரத்திலும் உங்கள் இருதயத்தின் செயற்பாடு தளரலாம் (Heart Failure).
- இரத்தம் ஏற்ற வேண்டிய (Blood Transfusion) நிலைகூட ஏற்படலாம்.

உங்களுக்கு இரத்த சோகை இருக்கிறதா என்று எவ்வாறு அறிந்து கொள்வீர்கள்?

உடலில் மெல்லிய வெளுப்புத் தன்மை ஏற்படும். உங்கள் கண்களும், நகங்களும், நாக்கும் தங்கள் சாதாரண நிறத்தை இழந்து, வெண்மை கலந்திருக்கும்.

வழமையான வேலைகளைச் செய்யக் களைப்பாக இருக்கும். இலகுவில் சோர்வடைவீர்கள். திடீரென இருக்கையை விட்டு எழுந்தால் தலை சுற்றலாம். நடந்தால் இளைக்கலாம். இரத்தசோகை மோசமாக இருந்தால் கால்களும் வீங்கலாம்.

இப்படியான அறிகுறிகள் இருந்தால் உங்களுக்கு இரத்த சோகை என்பது நிச்சயமாகிறது. உடனடியாக வைத்தியம் செய்து அதனை நிவர்த்திக்கவேண்டும். ஆயினும் இரத்தசோகை ஏற்படாமல் தடுப்பதே முக்கியமானது.

நீங்கள் ஒழுங்காகக் கர்ப்பவதி நலன் பேண் 'கிளினிக்'குக்குச் சென்று வந்தால், உங்களுக்கு இந்நோய் உண்டாகாமல் தடுப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

அங்கு நீங்கள் முதல் முறை செல்லும்போதே, உங்கள் விரல் நுனியில் இருந்து சிறிதளவு இரத்தத்தை எடுத்து மருத்துவ ஆய்வு கூடப்பரிசோதனை மூலம் உங்கள் நல் இரத்த அளவைக் (Haemoglobin Level-Hb%) கணிப்பார்கள்.


உங்கள் இரத்த விகிதம் (Hb%) - 11 gm/100ml (75%) இற்கு குறைவாக இருந்தால், அதை நிவர்த்தி செய்வதற்குப் போதிய இரும்புச் சத்து மாத்திரைகளையும் (உதாரணம் - Ferrous Sulphate, Ferrous Gluconate, Ferrous Fumarate) போலிக் அசிட் (Folic Acid) மாத்திரைகளையும் கொடுப்பார்கள்.

இரத்த விகிதம் மிகக் குறைவாகவும், பேறுகாலம் நெருங்கியும் இருந்தால் இரும்புச் சத்து மருந்தை (உதாரணம் : Imferron ) ஊசி மூலம் ஏற்றுவார்கள்.

தேவை ஏற்படின் உங்கள் நல் இரத்த அளவை மீண்டும் சிலமுறை அவர்கள் ஆராய்ந்து பார்க்கக் கூடும்.

உங்களுக்கு இரத்தசோகை இல்லாவிட்டாலுங்கூட உங்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகளைத் தருவார்கள். ஏனெனில் கர்ப்பமாயிருக்கும்போது உங்கள் வயிற்றில் வளரும் குழந்தைக்கும், அதன் போஷாக்கிற்கு உதவும் 'நச்சுக்கொடிக்கும்', உங்கள் உடலின் தேவைகளுக்காகவும் மேலதிக இரும்புச் சத்து தேவைப்படும். இவற்றை உணவு மூலமோ மாத்திரைகள் மூலமோ அளிக்காவிட்டால், உங்கள் இரத்தத்திலுள்ள இரும்புச் சத்து, முன்கூறிய தேவைகளுக்காக உறிஞ்சப்படலாம். இதனால் உங்களுக்கு இரத்தசோகை ஏற்படலாம்.

எனவே இரத்த சோகை ஏற்படாமல் இருக்க பசுங்கீரை வகைகள், முட்டை, மீன், பால், ஈரல் போன்ற ஊட்டமுள்ள உணவு வகைகளை உட்கொள்வதுடன், உங்கள் வைத்தியர் அல்லது குடும்பநல உத்தியோகத்தர் (Family Health Worker) கொடுக்கும் மாத்திரைகளையும் தவறாது உட்கொள்ளுங்கள்.




(தொடரும்.....)



# தமிழ்த் தேசியம் ஒரு வாழ்வு முறையாக மாறவேண்டும்

சி.அ.யோதிலிங்கம்

**1948** இல் தரப்பட்ட சுதந்திரத்தையும் அதனால் கிடைத்த ஆட்சி அதிகாரத்தையும் பயன்படுத்தி அரச அதிகாரக் கட்டமைப்பை சிங்கள மயமாக்கினர். தமிழர் தாயகத்தை சிதைக்கும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுதல், சிங்களமொழி, அரசகரும மொழி என்பதைக் கொண்டு வந்து அதனை நடைமுறைப்படுத்துதல் என்பன சோல்பரி யாப்புக் காலத்தில் முக்கிய இடத்தைப் பெற்றன.


1972 இல் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது குடியரசு யாப்பு இலங்கை அரசினை சிங்கள பௌத்த அரசாக மாற்றியது. தேசியக் கொடியின் நான்கு மூலைகளிலும் பௌத்தத்தைக் குறிக்கும் அரச இலைகள் சேர்க்கப்பட்டன. அத்துடன் சிங்கள மயமாக்கல் செயற்பாடுகளுக்கு அரசியல் யாப்பு அந்தஸ்து கொடுத்து அதனை நிறைவு செய்து வைத்தது. சிங்கள மொழி அரச கரும மொழி, பௌத்தமதம், முதன்மை மதம் என்பவற்றிற்கும் தேசியக் கொடிக்கும் முதலாவது குடியரசு யாப்பு அரசியல் யாப்பு அந்தஸ்தினைக் கொடுத்தது. இரண்டாவது குடியரசு யாப்பு பௌத்தமதம் முதன்மை மதம் என்பதையும், தேசியக் கொடியையும், ஒற்றையாட்சிக் கட்டமைப்பையும் எதிர்காலத்தில் எவரும் மாற்றக்கூடாது என்பதற்காக அதனைத் திருத்துவதாயின் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையும் மக்கள் தீர்ப்பு ஒன்றின் மூலம் மக்களின் சம்மதம் தேவை என்பதையும் யாப்பில் சேர்த்துக்கொண்டது. இதனூடாக என்றைக்குமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாத வகையில் அரசியல் யாப்பினை ஒரு மூடப்பட்ட யாப்பாக மாற்றியது.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் சுய நிர்ணயப் போராட்டத்தை நசுக்கும் வகையில் 6 ஆவது திருத்தச் சட்டத்தை அறிமுகப் படுத்தியது. தொடர்ந்து பயங்கரவாத தடைச் சட்டம் போன்றவற்றைக் கொண்டு வந்து போராட்டத்தை அழிக்க முயற்சித்தது என்பதும், மகிந்தர் சர்வதேச சக்திகளினதும் பிராந்திய சக்தியினதும் துணை கொண்டு போராட்டத்தை அழித்தார் என்பதும் வரலாறு.

இவையெல்லாம் சுதந்திரத்தைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டன. இதனால் சுதந்திர தினம் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கும், அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து அவர்களை விலக்குவதற்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வழங்கிய அனுமதிப் பத்திரம். அதாவது லைசன்ஸ் என்கின்றோம். ஆட்சியாளர்களின் இந்த சுதந்திர தின விழாவில்தான் சம்பந்தனும் சுமந்திரனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதுவும் சுமந்திரன் தம்பதிகளாக சமுகம் கொடுத்துச் சிறப்பித்தார். இதன் மூலம் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு நாங்களே அனுமதியைத் தருகின்றோம் எனக் கூறியிருக்கின்றனர்.

முன்னர்கூறியது போல கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகள்தான் வெற்றியைத் தீர்மானிக்கும் என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இந்தியாவும் எப்படியாவது மைத்திரியை வெற்றியடைச் செய்யவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தன. இந்நிலையில் இந்த சர்வதேச சக்திகளுடன் வலுவான பேரம் பேசலில் ஈடுபட்டிருக்கலாம். இயல்பு நிலையைக் கொண்டு வருதல் தொடர்பாகவும், அரசியல் தீர்வு தொடர்பாகவும் வலிமையான பேரம் பேசலில் ஈடுபட்டிருக்கலாம்.

இயல்பு நிலையைக் கொண்டு வருதல் தொடர்பில் பொதுமன்னிப்பு மூலம் அரசியல் கைதிகள் அனைவரையும் ஆட்சிமாற்றம் வந்த கையுடன் விடுதலை செய்திருக்கலாம். காணாமல் போனோர் விவகாரம் தொடர்பாக ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். இராணுவம் பறித்த காணிகளை உடனடியாக மீளப்பெற்றிருக்கலாம். அரசியல் தீர்வு தொடர்பாக நிரந்தரத் தீர்வினை சற்றுக்கால தாமதப்படுத்தினாலும் இடைக்காலத் தீர்வு ஒன்றிற்கு வந்திருக்கலாம். அந்த இடைக்காலத் தீர்வு தாயகத்தின் அதிகாரத்தை தமிழ் மக்கள் தங்கள் கையில் எடுப்பதற்கான ஆரம்பமாக அமைந்திருக்கும். இந்தப் பேரம் - பேசலுக்கு மக்களையே சாட்டாகக் காட்டியிருக்கலாம்.





கூட்டமைப்புக்குள் சிலர் இதனை வற்புறுத்தியபோது சம்பந்தன் அதற்கு உடன்பட்டிருந்தார். ஆனால் சம்பந்தன் இந்தியா சென்று திரும்பியதும் எந்தவித நிபந்தனையுமில்லாமல் ஆதரவளிப்பதாக அறிவித்தார்.

இதற்கு முன்னர் சந்திரிகாவுடன் பேசியபோது நாம் உடன்படிக்கை ஒன்றினை எழுதுவோம் என சந்திரிகாவே நேரடியாக கேட்டிருந்தார். அதற்கு சம்பந்தன் அவை எதுவும் தேவையில்லை மகிந்தர் அகற்றப்பட்டாலே போதும் எனக் கூறியிருக்கிறார். 50 வருடகால ஏமாற்றம் தான் உடன்படிக்கைக்கு வரத் தயங்குகின்றீர்களா? என்று கூறிய போதும் சம்பந்தன் தேவையில்லை என்றார்.

இது விடயத்தில் பகிரங்க எழுத்து மூல உடன்படிக்கை வெற்றியைப் பலவீனப் படுத்தும் எனக் கருதியிருந்தால் அதனை வெளிப்படுத்தாது விட்டிருக்கலாம். அல்லது சர்வதேச சக்திகளின் சாட்சியங்களுடன் ஒரு வாய்மூல உடன்பாட்டிற்காகவாவது வந்திருக்கலாம். ஆனால் கூட்டமைப்புத் தலைமை எதனையும் செய்யவில்லை. இணக்க அரசியலை மேற்கொள்ளுங்கள் என இந்தியா வற்புறுத்தியமையே இதற்குக் காரணமாகும்.

நான்காவது வேலைத் திட்டம் பின்நோக்கி இழுத்துச் செல்லலில் உச்சமாகும். அதாவது ஆட்சியில் பங்கேற்பதாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லாமல் ஆட்சியில் பங்கேற்பது என்பது சிங்கள அரசியலுக்குள் தமிழ் அரசியலை முற்றாகக் கரைப்பதே. கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சியாகி அதன் உயர் ஆலோசனை நிறுவனமான தேசிய நிறைவேற்றுச் சபையிலும் உறுப்பினராகியது. இன்று கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சி. ஈ.பி.டி.பிக்கும் அதற்கும் எந்த வேறுபாடும் இல்லை. இந்நிலையில் கூட்டமைப்பை ஆதரிப்பதும் ஒன்றுதான், ஈ.பி.டி.பியை ஆதரிப்பதும் ஒன்றுதான். ஐந்தாவது வேலைத்திட்டம் அரசாங்கத்தை



தானும் சேர்த்துப் பலப்படுத்துவதாகும். அதன் அடிப்படையில் தான் இனப்படு கொலையாளியான சந்திரிகா தந்தை செல்வா ஞாபகார்த்த நினைவுப் பேருரையாற்ற அழைக்கப்பட்டார். இதன் மூலம் சொல்லப்படுகின்ற செய்தி இது எங்களுடைய அரசாங்கம். இதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது என்பதே. கூட்டமைப்பின் இந்த பின்நோக்கி இழுக்கும் செயற்பாட்டினால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தமிழ்த் தேசிய அரசியலை முன்கொண்டு செல்வதல்ல. கூட்டமைப்பு பின்நோக்கி இழுத்தச் செல்வதை எவ்வாறு தடுப்பது என்பதே. இந்த இடத்தில்தான் இரு முடிவுகளை தமிழ்த் தேசிய சக்திகள் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை முன்நோக்கி கொண்டு செல்வதற்கான தகுதியை இழந்துவிட்டது என்பதாகும். அது மேலும் மேலும் தமிழ்த் தேசிய அரசியலைப் பலவீனப்படுத்துகின்றது. ஒப்பீட்டளவில் சுயாதீனமாக இயங்கக் கூடிய தமிழகத் தளத்தையும் புலம்பெயர் தளத்தையும் வினைத்திறனுடன் செயற்பட விடாது தடுக்கின்றது. தமிழ் மக்களின் நலன்களுக்காக அல்லாது இந்தியாவின் எடுபிடியாக இயங்க முற்படுகின்றது. எனவே கூட்டமைப்பில் இனிமேல் நம்பிக்கை வைக்க முடியாது.

இரண்டாவது மாற்று அரசியல் இயக்கம் ஒன்றினைக் கட்டி வளர்ப்பதாகும். மாற்று அரசியல் இயக்கம் ஒன்று தேவை என்பதை வலுவாக உணர்ந்தால்தான் அதனைக் கட்டியெழுப்புவது நோக்கி எம்மால் நகர முடியும். அந்த மாற்று அரசியல் இயக்கத்தின் பண்புகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பாக நாம் விவாதித்து முடிவுகளை எடுக்கலாம். அதிலும் கூட இரண்டு நிபந்தனைகள் முக்கியமானவை என நான் கருதுகின்றேன். ஒன்று வெளியாரின் நிகழ்ச்சி நிரலில் அல்லாது சொந்த நிகழ்ச்சி நிரலில் சொந்தப் பலத்தில் இயங்குவதாகும். இரண்டாவது தமிழ்த் தேசியம் என்பதை அரசியலில் மட்டும் கடைப்பிடிக்காமல் அதனை ஒரு வாழ்வு முறையாக பின்பற்றுவதாகும்.

# மைத்திரியின் 100 ந

■ பாமரன்

100 நாள் திட்டம் குறித்த விமர்சனங்கள் கொழும்பை மையப்படுத்திக் காரசாரமாகப் பேசப்படுகின்றன. விமர்சிக்கப்படுகின்றன. வடக்கில் வாழும் தமிழர்களின் பெரும்பாலானவர்களுக்கு இந்தத் திட்டம் பற்றி அடிமுடி எதுவும் தெரியாது.

காரணம் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தில் சாதாரணர்களை இலக்கு வைத்தவை மிகச் சாதாரணம். அத்துடன் 100 நாள் திட்டத்தின் அனேக சாரங்கள் ஆட்சியியலுடனும், அதன் இருப்பைத் தக்கவைத்தலுடனும் தொடர்புபட்டது. எனவேதான் தமிழ் புத்திஜீவிகளிடமிருந்து இந்த 100 நாள் திட்டம் பற்றியும் 100நாட்களின் ஆட்சி பற்றியும் வடக்கு என்ன நினைக்கிறது.

இந்த ஆட்சி மாற்றம் இலங்கை மக்களால் கொண்டுவரப்பட்ட போதிலும், மேற்கும், இந்தியாவும் இணைந்தே இந்த மாற்றத்தினைக் கொண்டுவந்தது என்றே பரவலாக நம்பப்படுகிறது. அதன் முக்கிய ஆட்சிச் சுலோகமே சட்டத்தின் ஆட்சி என்பதுதான். எனவே இந்த 100 நாட்களில் சட்டத்தின் ஆட்சி எப்படியிருக்கின்றது என்பது பற்றி குமாரவடிவேல் குருபரன் அவரிடம் வினவினோம்.

தமிழ் இளம் ஆளுமையாளர்களுள் ஒருவரான குமாரவடிவேல் குருபரன் யாழ். பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளரும், பிரிட்டன் பல்கலைக் கழக கல்லூரியின் துறைசார்ந்த ஆய்வு நிலை (கலாநிதி) புலமையாளரும் ஆவார்.

"நல்லாட்சியைக் கொண்டு வருவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வராத அரசாங்கங்களை இலங்கையில் விரல் விட்டு எண்ணலாம். ஆனால் ஆட்சிக்கு வந்தவுடன் ஆட்சியில் எப்படி தொடர்ந்து இருப்பது என்பது தான் மேலோங்கும். இம்முறையும் அதுவே நடந்திருக்கின்றது. பொதுவாக அனைத்து 'சனநாயக' நாடுகளிலும் நடக்கும் விடயம் இது. ஆனால் இலங்கையில் இதற்கொரு மேலதிகமான முக்கிய குணாம்சம் உள்ளது. தமிழர்கள் நலன் சார் விடயங்களில் நல்லாட்சி அமைக்க முடியாமைக்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட முடியாமைக்கும் இனப்பிரச்சினையையும் போரையும் அதன் விளைவான அரசியல் சூழலையும் சாட்டுச் சொல்வதே அது.


கடந்த நூறு நாட்களில் அரசாங்கத்திற்கு இருந்த பிரதான இலக்கு பொதுத் தேர்தலில் மீண்டும் மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பது மட்டுமே. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எந்தவொரு விடயத்திலும் அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்படாமைக்கு சொல்லாமல் சொல்லப்படும் காரணம் அப்படிச் செய்தால் மஹிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார் என்பதே. தமிழ் மக்கள் விடயத்தில் நீதியின் வழி செயற்படுவது சிங்கள மக்களின் வாக்குகளை இழப்பதற்கு சமனாகும் என்ற கணக்கு இந்த அரசாங்கத்தின் மனதிலும் உள்ளது. அதனால்தான் தமிழர் சார்ந்த பிரச்சினைகளில் மேலோட்டமாக சில நடவடிக்கைகளோடு மைத்திரி அரசாங்கம் சுருண்டுவிட்டது. நூறு நாள் திட்டத்தில் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் சொல்லப்பட்டிருந்த சில விடயங்களில், இந்த ஆட்சி எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதைப் பார்ப்போம்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பில் வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. பல்வேறு தேசிய நிறைவேற்றுச் சபைக் கூட்டங்களில் இவ்விடயம் பேசப்பட்டதாக திரு. மனோ கணேசனும், திரு. சுமந்திரனும் சொல்லி வந்தனர். ஆனால் எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டனர்? சுதந்திர தினம் அன்று சிலர் விடுவிக்கப்படக்கூடும் என்று கூட்டமைப்புக்கு சொல்லப்பட்டாலும் அது நிறைவேறவில்லை (ஆனால் அது எமது தலைவர்கள் சுதந்திர தினத்தில் பங்கெடுக்கும் தீர்மானத்தைப் பாதிக்கவில்லை)

திருமதி. ஜெயக்குமாரி பாலேந்திரன் பிணையில் விடுதலை செய்யப்பட்டது மகிழ்ச்சியே. ஆனால் அவருக்கெதிரான வழக்கு முற்றாகக் கைவிடப்படவில்லை. சட்டத்துக்கு முரணாக ஒரு வருடத்திற்கு மேல் தடுத்து வைக்கப்பட்டதற்காக உண்மையில் அவருக்கும் விபூசிகாவுக்கும் அரசு நட்டஈடு வழங்க வேண்டும். செய்யப்படுமா என்பது சந்தேகமே. சட்டமா அதிபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பிணை விண்ணப்பத்தை ஆட்சேபிப்பதில்லை என்ற பொதுவான கொள்கை முடிவை (பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 7 (1) இன் கீழ்) எடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எடுக்காமல் ஜெயக்குமாரியை மட்டும் விடுவிக்க எடுத்த முடிவைப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகைக்கு முன் எடுக்கப்பட்ட ஓர் அரசியல் முடிவாகவே கருத வேண்டியுள்ளது. தொடர்ந்து அரசியல் கைதிகள் விடயத்தில் முன்னேற்றம் இல்லாதிருக்கின்றமை இதனையே காட்டுகின்றது. புனர்வாழ்வை ஏற்றுக்கொள்ள அரசியல் கைதிகளை இந்த அரசாங்கம் நிர்ப்பந்தம் செய்வதாக சிரேஸ்ட சட்டத்தரணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். பயங்கரவாதத் தடை சட்டம் இல்லாதொழிக்கப்படுவதே சுமுக நிலைக்குத் திரும்புவதற்கான உண்மையான குறியீடாக இருக்கும். ஆனால் அதைப் பற்றி பேசுவதற்குக் கூட அரசாங்கம் தயாரில்லை.

### சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம்

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளமையை இந்த அரசாங்கத்தின் சாதனையாகச் சொல்லுகின்றனர். சட்டப் புத்தகங்களில் இவ்விடயம் சேர்க்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதே. ஆனால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டமையால் நடைமுறையில் என்ன பயன் ஏற்பட்டுள்ளது என்றே கேட்கத் தோன்றுகின்றது. சாட்சிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு காவல்துறையிடமே இருக்குமென்றால் காவல் துறையை நம்பி சாட்சி சொல்ல எத்தனை பேர் தயார்? குற்றச்சாட்டு காவல் துறைக்கு எதிராக எனின் யார் பாதுகாப்பளிப்பது? தகவலறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக சொல்லப்படுகின்றது. கொண்டுவரப்பட்டாலும் உதாரணமாகக் காணாமல் போனோரைக் கண்டறிய அச்சட்டம் உதவுமா என்றால் விடை இல்லை என்பதே – தேசிய பாதுகாப்பு என்று காரணம் சொல்லி தகவல் வழங்க மறுக்கலாம். தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அனைத்து மனித உரிமைகளும் (சட்டப் பிரகாரமும், சட்டத்திற்குப் புறம்பாகவும்) மீறப்பட்டமையை எமக்கு வரலாறு சொல்லுகின்றது. தகவலறியும் உரிமைக்கும் அதேகதி தான்.



நீதித் துறையின் சுயாதீனம் தொடர்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. அரச வலிமையைப் பாவித்து அன்று மொஹான் பீரிஸை பிரதம நீதியரசர் கதிரையில் மஹிந்த ராஜபக்ச அமர்த்தினார். அதே அரச வலிமையை பாவித்து சிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பிரதம நீதியரசராக்கினார்கள். ஜனாதிபதி சிறிசேன மொஹான் பீரிசின் நியமனம் ஆரம்பத்திலிருந்தே செல்லுபடி அற்றது என்று கடிதம் அனுப்பியமை சட்ட ரீதியில் சரியானது என வாதிட முடியும். எனினும் அதன் பின் மொஹான் பீரிஸ் இல்லாத நேரம் பார்த்து அவரின் கதிரையில் சிராணி பண்டாரநாயக்கவை இருத்தியமை நீதித்துறையின் சுயாதீனத்துக்கு வலுச் சேர்க்கும் நடவடிக்கை அல்ல என்றே கருதுகிறேன். அதனை உணர்ந்து தான் போலும் சிராணி பண்டாரநாயக்க ஒரே நாளில் பதவியைத் துறக்குமாறு கேட்கப்பட்டார். தமிழ்ப் பார்வையில் சிராணி பண்டாரநாயக்க பதவியில் இருந்து அகற்றப்படுவதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முதலே நீதித்துறையின் சுயாதீனம் பறிபோய்விட்டது என்பதே உண்மை. தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற உயர் நீதிமன்றம் ஒத்துழைத்த போதிருந்து நீதித்துறை தமிழர் விடயங்களில் சுயாதீனமற்ற நிறுவனமாகவே இருந்து வந்துள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை விடுவிக்கும் திட்டத்திலும் எந்தக் கொள்கையும் கோட்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. வலிகாமம் வடக்கில் குளறுபடிகளோடு செய்யப்பட்டுள்ள சில காணிகளின் விடுவிப்பு இவ்விடயம் தொடர்பில் இந்த அரசாங்கத்திடம் நீண்ட காலத் திட்டமில்லை என்பதையே காட்டுகின்றது. வேறு பல இடங்களில் இராணுவத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்வதாக தகவல்கள் உள்ளன. காணி விடுவிப்பு தொடர்பில் பொதுவான, காத்திரமான நிலைப்பாடு இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.


> என்னதான் மக்கள் நலன் சார்ந்த விடயங்களாக 100 நாள் திட்டமும், ஆட்சியும் இருந்தாலும் அதைச் சுற்றி முழுக்க முழுக்க சிங்கள மயப்பட்ட அரசியல் உண்டு.

### ராஜபக்ஷ அளவுகோல்

100 நாட்களை வைத்து இந்த அரசாங்கத்தை எடை போடக்கூடாது என்று சொல்பவர்கள் உண்டு. நீண்ட காலம் புரையோடிப் போன பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காலமெடுக்கும் என்று சமாதானப்படுத்த முயற்சிக்கின்றனர். இதில் உண்மை உண்டு. ஆனால் மாற்றத்துக்கான ஆரம்ப அறிகுறிகளாவது தென்படவேண்டும். ராஜபக்சவோடு ஒப்பிட்டால் இந்த அரசாங்கம் பரவாயில்லைத்தான். ஆனால் ராஜபக்சவை வைத்துத் தான் எது சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி என முடிவு செய்யப் போகின்றோமா?'

குருபரன் கேட்ட கேள்வியின் உண்மைத்தன்மையும், அவர் தன் கருத்துக்கு சொல்லப்பட்ட முடிவும் தமிழர் பக்கமிருக்கின்ற சந்தேகங்கள்தான். அந்த

# ாள் ஆட்சியில் வடக்கு



“

**100 நாட்களை வைத்திந்த அரசாங்கத்தை எடைபோடக்கூடாது என்று சொல்பவர்கள் உண்டு. நீண்ட காலம் புரையோடிப் போன பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காலமெடுக்கும் என்று சமாதானப்படுத்த முயற்சிக்கின்றனர். இதில் உண்மை உண்டு.**

சந்தேகம் எப்படி உறுதியாகிறதெனில் அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கமும், குறிப்பிடும் விடயத்திலிருந்துதான். என்னதான் மக்கள் நலன்சார்ந்த விடயங்களாக 100 நாள் திட்டமும், ஆட்சியும் இருந்தாலும் அதைச் சுற்றி முழுக்க முழுக்க சிங்கள மயப்பட்ட அரசியல் உண்டு என்பதை நிறுவுகின்றார் திரு. சி. அ. யோதிலிங்கம்.

“புதிய அரசாங்கத்தின் 100 நாள் அரசியல் என்பது முழுக்க முழுக்க சிங்கள அரசியலையே மையமாகக் கொண்டிருந்தது. இந்த 100 நாட்களில்பிரதானமாக நான்கு விடயங்கள் முக்கிய பேசுபொருளாக இருந்தன.

19 ஆவது திருத்தம், 20 ஆவது திருத்தம் என அழைக்கப்படுகின்ற தேர்தல் மறுசீரமைப்பு, மஹிந்தவின் மீள் எழுச்சி, ஜே.வி.பிக்குள் ஏற்பட்ட உடைவு என்பவையே அவை.

19 ஆவது சீர்திருத்தத்தைப் பொறுத்த வரையில் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றவையாக இருந்தன. ஒன்று நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றுதல், இரண்டாவது சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்குதல். இதில் சுதந்திர ஆணைக்குழுக்களை உருவாக்குவதில் முரண்படாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவந்த பின்னரே 19 ஆவது சீர்திருத்த சட்டத்துக்கு தாம் ஆதரவு வழங்க முடியும் எனக் கூறியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் முன்வைத்த காரணம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் எந்தவொரு கட்சியும் பாராளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவது கடினம். எனவே அந்தக் கடினமான சூழலில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைதான் அரசாங்கத்துக்கு ஓர் அரசியல் உறுதிப்பாட்டை வழங்குகின்றது. ஆகவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றும்போது தேர்தல் முறையை மாற்றாமல் வந்தால் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாதபோது கூட்டரசாங்கம் அமைக்க வேண்டிய நிலை வரும். கூட்டரசாங்கத்தில் இணைந்துகொண்ட கட்சிகளிடையே முரண்பாடுகள் ஏற்பட்டால் நாட்டினுடைய அரசியல் உறுதித்தன்மை பலவீனமடையும். ஆகவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை மாற்றுவதென்றால் தேர்தல் முறையையும் மாற்றவேண்டும் என அவர்கள் இதற்கு நியாயம் கூறுகின்றனர்.

ஆனால் இதற்குப் பின்னால் அரசியல் உள்ளது போன்றுள்ளது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் சாதகமானது. அந்தக் கட்சிக்கு சிங்கள மக்களைவிட ஏனைய தமிழ், முஸ்லிம் மக்களிடமும் கணிசமான வாக்கு வங்கி இருக்கின்றது. இதனாலே அவர்களின் வாக்குகள் அதிகரிப்பதற்கான சூழல் இருக்கின்றது. எனவே வாக்குவீதத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு தேர்தல் முறை எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் சார்பாக இருக்கும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நாம் இதனை அவதானிப்போமாக இருந்தால் 1956 ஆம் ஆண்டு தேர்தலைத் தவிர ஏனைய தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைத்தாலும் கூட வாக்குவீதம் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் கூடுதலாக இருந்தது. குறிப்பாக 1970 ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 91 ஆசனங்களைப் பெற்றிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 18 ஆசனங்கள்தான் கிடைத்தது. ஆனால் வாக்குவீதத்தின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி 38 வீதமான வாக்குகளையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 37 வீதமான வாக்குகளையுமே பெற்றிருந்தது. ஆகவே இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தங்களுக்கு எப்போதும் சாதகமாக இருக்கும் என்பதனாலேயே ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த முறையைக் கொண்டு வந்தார். ஆகவே இந்தக் காரணங்களினால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்போது இதனைக் கடுமையாக எதிர்க்கின்றது போல தெரிகின்றது.

மஹிந்தவின் மீள் எழுச்சியைப் பொறுத்தவரை, போர் வெற்றியின் கதாநாயகன் மஹிந்த ராஜபக்ச தான். அவர் சென்ற தேர்தலில் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் அவர் தோல்வியடையவில்லை. போர் வெற்றிக்குப் பின்னர் 2010 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் கணிசமான வாக்குகள் மஹிந்த ராஜபக்சவுக்கு விழுந்துகொண்டிருந்தன. ஆனால் கடந்த முறை நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சொந்தமான வாக்குகள் மீளவும் அந்தக் கட்சியிடம் வந்தமைதான் காரணம். அத்துடன் வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லிம்மக்களின் வாக்குகளும் ஒரு காரணம். ஆனால் கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வந்த வாக்குகள் மீளவும் மஹிந்த ராஜபக்வை நோக்கிச் செல்வதற்கான ஏதுநிலைகள் உருவாகி வருவதாகத் தென்னிலங்கை அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டமையை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

“

**மஹிந்தவின் மீள் எழுச்சியைப் பொறுத்தவரை, போர் வெற்றியின் கதாநாயகன் மஹிந்த ராஜபக்ச தான். அவர் சென்ற தேர்தலில் தோல்வியடைந்து இருக்கலாம். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் அவர் தோல்வியடையவில்லை.**

மஹிந்தவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடிகளிலிருந்து தப்புவதற்கும், அவருக்கு சார்பாக எழுந்திருக்கும் மக்கள் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்ளவுமே அவர் விரும்புவார். எனவே எதிர்வரும் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்றே நான் கருதுகின்றேன். அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தை எடுப்பதற்கு முயற்சி செய்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முந்திக்கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர் பதவியை அவர் எடுத்துக்கொண்டார். ஆகவே மஹிந்த வெற்றிலைச் சின்னத்தைப் பயன்படுத்த முடியாது. இதனால் பொதுஜன முன்னணியின் சின்னமான கதிரை சின்னத்தில் மஹிந்த ராஜபக்ச போட்டியிடவே முயற்சிப்பதாகத் தெரிகின்றது. அப்படி போட்டியிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 75 வீதமான வாக்குகள் மஹிந்த ராஜபக்சவுக்கு விழுவதற்கே வாய்ப்புகள் உண்டு. எனவே மஹிந்த ராஜபக்சவின் மீள் எழுச்சி சாத்தியப்பட்டுக்கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

அதற்கான காய்நகர்த்தல்களாகவே தெற்கில் இப்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கொதிநிலை அவதானிக்கப்படுகின்றது. அத்துடன் ஜே.வி.பியிலிருந்து உடைந்து சென்ற சோமவன்சவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிருப்தியாளர்களும் மஹிந்தவுக்கு ஆதரவளிப்பர் என்றே கருதுகின்றேன்.

இதில் புவிசார் அரசியல் விடயத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். சீனா இவ்வளவு நிதி மூலங்களையும் இலங்கையில் செலவழித்துவிட்டு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காது.

எனவே அந்த நாடு எப்போதும் தன் விசுவாசியான மஹிந்த ராஜபக்சவுக்கு சாதகமாக இருக்கவே செய்யும். தென்னாசியாவைப் பொறுத்த வரையிலும் சீனாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் பெரும் பனிப்போர் நடப்பது அனைவரும் அறிந்ததே.

மாலைதீவில் சீனாவுக்கு சார்பான தலைவர்தான் ஆட்சியில் இருக்கிறார். இந்தியாவுக்கு சார்பான தலைவர் தூக்கியெறியப்பட்டார். இலங்கையில் சீனாவுக்கு சார்பான தலைவர் தூக்கியெறியப்பட்டு, இந்தியாவுக்கும் மேற்கிற்கும் சாதகமான தலைவர் ஆட்சிக்கு கொண்டுவரப்பட்டார்.

இந்த ஆட்சி மாற்ற போட்டியும் நீடித்து நிலைக்கப் போகின்றது. உலகளவில் அமெரிக்கா – சீனப் பனிப்போரும், பிராந்திய அளவில் சீன – இந்திய பனிப்போரும், தேசிய அளவில் சிங்கள – தமிழ் பனிப்போரும் இலங்கையை மையப்படுத்தி உச்சம் பெற்ற ஒரு காலமாகவே இந்த 100 நாள் ஆட்சி இருந்தது’ *(தொடரும்)*

# தாயகம், தமிழகம், புலம்பெயர்ந்த தமிழர்கள் இணைய வேண்டும்

**சமூக ஆய்வாளர் நிலாந்தனுடன் ஒரு நேர்காணல்**

**நேர்கண்டவர்: செல்வநாயகம் ரவிசாந்**

**தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகக் கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட தமிழ் மக்களை தேசிய இனம் என்று கூறிக் கொள்வதில் பின்னிற்கின்றனர். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

நான் ஏற்கனவே கூறியதுபோல கட்சிகள் மக்களைச் செயலற்ற வாக்காளர்களாக வைத்திருக்கவே விரும்புகின்றன. செயற்பாட்டு இயக்கங்கள்தான் செய்ய வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் செயற்பாட்டு இயக்கங்கள் பெருகியிருக்கவேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக செயற்பாட்டியக்கங்கள் எங்கள் மத்தியில் பெருக வில்லை.

சுன்னாகம் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரை செயற்பாட்டியக்கங்கள் பெருகியுள்ளன. ஆனால் இது ஆரம்பம் என்கிற காரணத்தால் அந்தச் செயற்பாட்டியக்கங்களுக்கிடையிலும் சில குழப்பங்களுள்ளன. பெண்ணியச் செயற்பாட்டியக்கங்கள், மீனவச் செயற்பாட்டியக்கங்கள், உழவர் செயற்பாட்டியக்கங்கள், கூலி வேலைச் செயற்பாட்டியக்கங்கள்? கிராம மட்டச் செயற்பாட்டியக்கங்கள். நகர்ப்புறத் தொழிலாளர் செயற்பாட்டியக்கங்கள், ஆசிரிய செயற்பாட்டியக்கங்கள், மாணவர் செயற்பாட்டியக்கங்கள், ஊடகச் செயற்பாட்டியக்கங்கள், அறிவியற் செயற்பாட்டியக்கங்கள் இவ்வாறு செயற்பாட்டியக்கங்கள் அதிகம் எழுச்சி பெறுமிடங்களில் கட்சிகள் தங்கள் திசை திருப்பும் அரசியலைச் செய்யமுடியாது. கட்சிகள் வாக்கு வேட்டை அரசியலைச் செய்யலாம். கட்சிகளின் வாக்குவேட்டை அரசியல் அது நினைத்த தடத்தில் அரசியல் செய்யவிடாது செயற்பாட்டியக்கங்களால் கட்டுப்படுத்த முடியும்.

தமிழ் சிவில் சமூக அமையம் இங்கே காணப்படுகிற தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஒரு அழுத்தப் பிரயோகத் தளமாகவுள்ளது. இவ்வாறு அரசியல்வாதிகள் மீதும், அரசியல் அமைப்புக்கள் மீதும் அரசியற்கட்சிகள், இயக்கங்கள் மீதும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வல்ல சக்திமிக்க செயற்பாட்டியக்கங்கள் தோற்றம் பெறவேண்டும். தமிழ் மக்கள் செயற்பாட்டியக்கங்களைக் கட்டியெழுப்பும் போது தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துவதற்கான நிலை உருவாகும். இதனை நாம் கட்சிகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. செயற்பாட்டியக்கங்கள் எப்போதும் ஞாபகசக்தி மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கும். கட்சி அரசியல் எப்போதும் மறதியின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கும். எங்களுக்குத் தேவை தமிழ்மக்களை விழிப்பு நிலையில் வைத்திருக்கும் செயற்பாட்டியக்கங்கள்.

**தற்போதைய ஆட்சியை உருவாக்கிய மேற்குலகக் கூட்டு தமிழர் பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களை இறக்கித் தமிழ்த் தேசிய அரசியலை எழுச்சி பெறாத வகையில் தங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளதாகச் செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் நீங்கள் கூறுவது எவ்வாறு சாத்தியமாகும்?**

பதில் : ஒரு விடயம் சாத்தியமா சாத்தியமில்லையா என்பதல்ல பிரச்சினை. யதார்த்தத்தை நோக்கிக் கனவை வளர்ப்பதா? கனவை நோக்கி யதார்த்தத்தை வளர்ப்பதா? என்பதுதான் கடந்த ஆறு ஆண்டு காலமாகத் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள மிகப் பெரிய கேள்வி. தமிழ் மிதவாதிகள் ஏறக்குறைய யதார்த்தத்தை நோக்கிக் கனவை வளர்க்கும் நிலைக்குப் போய்விட்டார்கள். ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறான தொரு நிலையிலேயில்லை. ஆனால் அது மக்கள் ஆணையைப் பெறாத ஒரு கட்சியாகவே காணப்படுகிறது. அவர்கள் இலட்சியவாதிகளாக இருக்கிறார்கள்.



**தாயகம், தமிழகம், புலம்பெயர்ந்த தமிழர்கள். இந்த மூன்றும் இணையும் போது தான் தமிழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக தோற்கடிக்கப்படாத வகையில் எழுச்சி பெற முடியும். தமிழ் மக்கள் திரண்ட சக்தியாகத் தங்கள் பலங்கள் முழுவதையும் ஒன்றிணைப்பதற்கு அமைந்திருக்கக் கூடிய ஒரே தளம் ஜனநாயகம்தான்.**

ஆனால் அவர்களிடமும் அதிகளவு மக்கள் தரிசனம் இருப்பதாகத் தெரியவில்லை.

அண்மைக் காலங்களில் அந்தக் கட்சியினுடைய செயற்பாடுகள் வேகமடைந்து காணப்படுகின்றன. இது கூட மாற்றத்தின் விளைவுதான். மாற்றம் என்பது தமிழ் மக்களுக்கிருக்கக் கூடிய வெளிப் பேரம் பேசும் சக்தியைக் குறைத்திருந்தாலும் கூட தீமைக்குள்ளும் நன்மை காணப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வெளிப்பேரம் சக்தி ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தது. இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசமெங்கும் கொண்டு செல்லப்பட்டன. மாற்றத்தால் வந்திருக்கக் கூடிய ஆட்சியில் தீமைக்குள்ளும் நன்மை காணப்படுகிறது. தமிழ் மக்களுக்கு. மாற்றம் ஒரு பக்கம் வெளிப் பேரம் பேசும் சக்தியை இல்லாமல் செய்தாலும் கூட அகப் பேரம் பேசும் சக்தியைப் பலப்படுத்தக் கூடிய பரப்பை அதிகரித்திருக்கிறது. இந்த நிலையில் மாற்றத்தின் விளைவாகக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுடைய இயலாமைகள் தெரிய வந்திருக்கிறது.

ஒரு பக்கம் முதலமைச்சர் அக்கட்சிக்குள்ளே ஒரு தீவிரவாதியாக எழுச்சி பெறுகிறார். இன்னொரு பக்கம் கூட்டமைப்பின் தலைமை என்பது மாற்றத்தின் பின்னரான நிலைமையில் மக்கள் மத்தியில் அதிகம் கேள்விக்குரியதொன்றாக மாறியிருக்கிறது. சுன்னாகம் குடிநீர்ப் பிரச்சினை வடமாகாண சபை எதிர்கொண்ட மிகப் பெரிய மக்கள் எதிர்ப்பு என்று கூறலாம். அது வலிகாமத்திலே கூட்டமைப்பினுடைய வாக்கு வங்கியிலே எதிர்காலத்தில் சேதத்தை எற்படுத்தும். இவ்வாறு நோக்கும்போது மாற்றத்திற்குப் பின்னர் கூட்டமைப்பின் செயற்பாடுகள் காரணமாக அது தன்னைத் தானே அம்பலப்படுத்திக் கொண்டுள்ளது என்றுதான் கூற வேண்டும். இந்தப் போக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிக்கும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த ஆறாண்டு காலமாக இருந்த நிலைமையை விடவும் அதனுடைய செயற்பாடுகள் தற்போது வேகமடைந்துள்ளன. ஆனால், அது மக்கள் ஆணையைப் பெறவேண்டும். அந்தக் கட்சி மக்கள் ஆணையைப் பெற்று கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்க முடியும் என்பதை நிரூபிக்கும் போதுதான் அது சரியான பொறிமுறையில் தமிழ் மென்சக்தியாக எழுச்சிபெற முடியும். முதல் அது மக்கள் ஆணையைப் பெற வேண்டும். அதற்கேற்றவாறு மக்களுக்குள்ளே இறங்கி வேலை செய்ய வேண்டும். மக்கள் மத்தியிலே தன்னுடைய ஜனநாயக மூலக் கூறுகளைப் பலப்படுத்துவதன் மூலம் தன் கட்சியையும் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுக்கவேண்டும்.

**கேள்வி : தமிழ் அரசியலுக்கு இன்று தமிழ் மக்களின் அனைத்து விவகாரங்களையும் கையாளக் கூடிய தேசிய அரசியல் இயக்கம் தேவையாகவுள்ளது. அந்தத் தேசிய அரசியல் இயக்கத்தின் பண்புகள் எவ்வாறு இருக்கவேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்: தேசியமாகச் சிந்தித்தல் அல்லது தேசமாகச் சிந்தித்தல் என்று நோக்கும் போது தமிழ் மக்கள் தங்களையொரு தேசிய இனமாகச் சிந்திக்கும்போது தேசியத்தின் அடிப்படை என்ன? தேசியத்தின் உள்ளடக்கம் என்ன? என்று பார்க்க வேண்டும்.

தேசியத்தின் உள்ளடக்கம் ஜனநாயகம். எனவே தமிழ் மக்கள் தங்களின் இனமான அரசியலை ஆகக் கூடியளவு ஜனநாயக அடித்தளத்தில் வைத்துப் பலப்படுத்த வேண்டும். ஜனநாயகம் என்ற தளத்தில் தான் தமிழ் மக்களுடைய மூன்று பிரதான மூலக் கூறுகள் ஒன்றிணைய முடியும். தாயகம், தமிழகம், புலம்பெயர்ந்த தமிழர்கள். இந்த மூன்றும் இணையும்போது தான் தமிழ் மக்கள் ஒரு திரண்ட சக்தியாக தோற்கடிக்கப்படாத வகையில் எழுச்சி பெறமுடியும். தமிழ் மக்கள் திரண்ட சக்தியாகத் தங்கள் பலங்கள் முழுவதையும் ஒன்றிணைப்பதற்கு அமைந்திருக்கக் கூடிய ஒரேதளம் ஜனநாயகம்தான். ஜனநாயகமல்லாத வேறெந்தத் தளத்திலும் மூன்று தரப்பும் இணைய முடியாது. எனவே எந்தளவுக்கு ஜனநாயக அடிக்கட்டுமானங்களைப் பலப்படுத்துகிறோமோ அந்தளவுக்குத் தமிழ்த் தேசியப் பரப்பு பலமானதாகவும் தோற்கடிக்கப்பட முடியாததாகவும் அனைத்துலக கவர்ச்சிமிக்கதாகவும் எழுச்சிபெறும். எனவே தமிழ் மக்கள் உடனடியாகச் செய்யவேண்டியது தமிழ்த் தேசியத் தளமானது ஜனநாயக அடிக்கட்டுமானங்களையும் அடித்தளத்தையும் பலப்படுத்துவதுதான்.

(தொடரும்)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினப் பிரகடனம் (2015)

## இரு தேசங்கள் ஒரு நாடு என்ற அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அரசியலை முன்னெடுப்போம்

தற்போதைய காலகட்டம் ஒரு தீர்க்கமான காலகட்டம். தமிழ்த் தேசிய அரசியலை முன் நோக்கி நகர்த்திச் செல்வதா பின்நோக்கி அழிய விடுவதா? எனத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றோம்.

13 ம் திருத்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த எவ்வகையிலும் உதவாது என்பதால் அதை முற்றாக நிராகரிக்கின்றோம். "இரு தேசங்கள் ஒரு நாடு" என்ற இலக்கின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அரசியலை முன்னெடுப்போம். இதற்காக நிலத்தையும், புலத்தையும் தமிழகத்தையும் ஒன்றிணைப்போம்.

## காணாமல் போனோர் விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்கி சர்வதேச விசாரணைக்காக குரல் கொடுப்போம்

காணாமல் போனோரின் குடும்பங்கள் தங்கள் உறவுகளின் உண்மை நிலை தெரியாது நீண்ட நாட்களாகத் தவிக்கின்றனர். ஸ்ரீலங்கா அரசு கண்துடைப்புக்கு ஆணைக் குழுவினை உருவாக்கி விசாரணைகளை மேற்கொண்டதால் உரிய பயன் எதுவும் கிடைக்கவில்லை.

நாம் இந்த விவகாரத்தை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வோம். சர்வதேச விசாரணைக்காகக் குரல் கொடுப்போம்.



## இனவழிப்புக்கு எதிராக சர்வதேச விசாரணைக்குக் குரல் கொடுப்போம்

ஸ்ரீலங்கா அரசு தான் மேற்கொண்ட மனிதாபிமானச் சட்ட மீறல்களை மறைப்பதற்காக சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளக விசாரணை என்கிற நாடகத்தை மேடையேற்றுகின்றது. குற்றவாளியே நீதிபதியாக மாறுவதை நாம் அனுமதிக்க முடியாது. எமது மக்களுக்கு நீதி தேவை. நாம் உள்ளக விசாரணையை நிராகரிக்கின்றோம். நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற இனவழிப்பிற்கு எதிராக சர்வதேச விசாரணையை மேற்கொள்ளுமாறு சர்வதேசத்தை வலியுறுத்துகின்றோம்.

## போரினால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பொதுமக்களின் நலன்களுக்காக சமூகமாக ஒன்றிணைந்தூடுபடுவோம்

தமிழ் மக்களின் விடுதலைக்காக செயற்பட்ட பொதுமக்களும் முன்னாள் போராளிகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டவண்ணமுள்ளனர். தமிழ் மக்களின் நலன் என்ற பொதுநோக்கம் காரணமாக பாதிக்கப்பட்டதனால் இவர்களை சமூகமே பொறுப்பெடுக்க வேண்டும். தனிப்பட்ட நபர்கள், குடும்பங்கள் இத்துயரங்களைச் சுமக்க அனுமதிக்க முடியாது. இந்தப் பெரும் துயரத்தை அவர்களினால் தனித்து சுமக்கவும் முடியாது. சமூகமாக ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களின் நலன்காக்க முயற்சி செய்வோம்.

## எமது நிலம் எமக்கு வேண்டும், எமது கடல் எமக்கு வேண்டும் எமது நிலத்தையும் கடலையும் மீட்டெடுப்போம்

எமது நிலத்தை ஸ்ரீலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. சிங்களவர்களைக் குடியேற்றி பலவந்தமான முறையில் கபளீகரம் செய்கின்றது. இராணுவமயமாக்கம் செய்கின்றது. சம்பூர், கேப்பாபிலவு, வலிவடக்கு உள்ளிட்ட எமது மக்களின் வளமான வாழ்விடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எமது கடலை சிங்கள மீனவர்களும் வேறு நாட்டு மீனவர்களும் ஆக்கிரமிக்கின்றனர். எமது மீனவர்களின் வலைகளை அறுத்தெறிகின்றனர். தடுக்கப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி கடல் வளத்தைப் பச்சையாகச் சூறையாடுகின்றனர். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி எமது நிலத்தையும் கடலையும் மீட்டெடுப்போம்.

## ஸ்ரீலங்கா சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகள் விடுதலைபெற குரல் கொடுப்போம்

ஆயுதப் போர் முடிவடைந்து 6 வருடங்களுக்கு மேலாகியும் ஸ்ரீலங்கா சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் விடுதலையாகவில்லை. இவர்களில் பலர் 20, 30 வருடங்களாக சிறைவாசம் அனுபவிக்கின்றனர். வெளியில் அவர்களில் தங்கி நிற்கும் குடும்பங்கள் பல்வேறு கஸ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு சர்வதேச ரீதியாக குரல் கொடுப்போம்.

## விவசாயிகள், தொழிலாளர்கள் உரிமைகளுக்காகப் போராடுவோம்

நில ஆக்கிரமிப்பு, தென்னிலங்கை விவசாய உற்பத்திப் பொருட்களின் வருகை, இராணுவத்தின் விவசாய உற்பத்திகளினது வருகை, விவசாய உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு என்பவற்றினால் எமது விவசாயிகள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். விவசாயத்தை நம்பியதால் கடனாளியாகியுள்ளனர்.

எமது தொழிலாளர்கள் தென்னிலங்கைத் தொழி லாளர்களின் ஆக்கிரமிப்பினாலும் வர்த்தக நிறுவனங்களின் படையெடுப்பினாலும் தமது தொழில்களை இழந்துள்ளனர். கட்டடத் தொழில், வீதி அபிவிருத்தி என்பவற்றைத் தென்னிலங்கைத் தொழிலாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர். இவற்றைத் தடுத்து நிறுத்தி எமது விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும் உரிமைகளுக்காகப் போராடுவோம்.

## தமிழ்ப் பெண்கள் அனைத்து ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெற ஒன்றிணைந்து போராடுவோம்

தமிழ்ப் பெண்கள் இன்று ஆணாதிக்கம், வர்க்க ஒடுக்குமுறை, இன ஒடுக்குமுறை என மூவகை ஒடுக்குமுறைக்கு உள்ளாகின்றனர். இன ஒடுக்குமுறை உச்சத்தில் உள்ளது. தமிழ்ப் பெண்கள் என்பதற்காகவே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். துணைகளை இழந்ததால் ஆயிரக்கணக்கில் குடும்பத்தின் ஒற்றைத் தலைவர்களாயுள்ளனர். அவர்கள் சுமக்கும் துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. தமிழ்ப் பெண்கள் அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலைபெற அவர்களை அமைப்பாக்கி ஒன்றிணைந்து போராடுவோம்.

## நில உரிமை,வீட்டுரிமை உட்பட மலையக மக்களின் தேசிய உரிமைகளை உறுதிப்படுத்த குரல்கொடுப்போம்

மலையக மக்கள் தங்களை ஒரு தனியான தேசமாக அடையாளப்படுத்துகின்றனர். அதனை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். மலையக தேசத்தை தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம், மக்கள் கூட்டம் என்பன தொடர்ச்சியாக சிதைக்கப்பட்டு வருகின்றன. இன்று உலகில் தாம் உருவாக்கி வளப்படுத்திய நிலத்திற்கு சொந்தம் கொண்டாட முடியாதவர்களாக இருப்பவர்கள் மலையக மக்கள்தான்.

நில உரிமை, வீட்டுரிமை உட்பட மலையக மக்களின் தேசிய உரிமைகளை உறுதிப்படுத்த நாமும் இணைந்து குரல்கொடுப்போம்.

> “ சுயநிர்ணய உரிமை என்றால் அந்த தேசத்துடைய மக்கள் தாங்களாகவே தங்களை ஆளக் கூடிய அதிகாரமாகும். எனவே தேசம் என்ற அடையாளம் என்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாக மட்டுமல்லாது தமிழ் இனத்தினுடைய இருப்பு சம்பந்தப்பட்ட விடயமாகவும் உள்ளது.



# தமிழர் தரப்பு ஆழமான அரசியல் செயற்றிட்டத்தில் இணையவேண்டும்

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

தமிழ்த் தேசத்தினுடைய அடிப்படைத்தேசிய கொள்கை என்ன என்பதைப் பார்க்கு முன் நாங்கள் முதலில் இனப் பிரச்சினை என்றால் என்ன என்பதனை விளங்கிக்கொள்ளவேண்டும். இன்று இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்கின்றது என்பது அனைவராலும் பேசப்படுகிற ஒரு விடயம்.

அதன் உண்மையான அர்த்தம் என்ன? நாங்கள் ஒரு தேசம் என்று கூறுகின்றோம். தேசம் என்றால் என்ன? ஓர் இனம், தனக்கென ஒரு மொழி, கலாசாரம். அந்த இனத்தினுடைய வாழ்க்கையைத் தக்க வைக்கக் கூடிய ஒரு சுயமான பொருளாதாரம், நிலப்பரப்பு என்பன இருக்கின்ற பட்சத்திலே அந்த இனத்திற்கு ஒரு தேசம் என்ற அங்கீகாரம் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் கிடைக்கின்றது. ஒரு தேசம் என்ற அங்கீகாரம் பெறக்கூடிய எந்தவொரு இனத்துக்கும் சுயநிர்ணய உரிமையும் தனித்துவமான இறைமையும் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் உரித்தாகின்றது.

சுயநிர்ணய உரிமை என்றால் அந்த தேசத்துடைய மக்கள் தாங்களாகவே தங்களை ஆளக் கூடிய அதிகாரமாகும். எனவே தேசம் என்ற அடையாளம் என்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாக மட்டுமல்லாது தமிழ் இனத்தினுடைய இருப்பு சம்பந்தப்பட்ட விடயமாகவும் உள்ளது.

இனப்பிரச்சினை என்று கூறுகின்ற போது நான் ஏற்க னவே கூறியது போல தேசம் என்ற அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் எமக்குக் கொடுக்கக் கூடிய தூண்களாக விளங்கும் மொழி, கலாசாரம், பொருளா தாரம், நிலம் என்பன திட்டமிட்ட வகையிலே அழிக்கப்படுவதா கும். இதுவே இன்றைக்கு இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இனப் பிரச்சினையாக இருக்கின்றது. காரணம் சிங்கள தேசம். விசேடமாக சிங்கள, பௌத்த தேசியவாதம் ஒட்டுமொத்த இலங்கையை ஒரு சிங்கள பௌத்த நாடாகக் கருதுகின்றது.

அந்த சிங்கள பௌத்த மேலாதிக்கத்துக்கு சவால் விடுகின்ற ஒரேயொரு விடயம். தமிழ்த் தேசிய வாதமும் தமிழ்த் தேசியமும் தான். ஏனென்றால் நாங்கள் ஒரு தேசமாக இருக்கிற வரைக்கும் தான் பிரச்சினை. சிறுபான்மையாக இருந்தால் இந்தப் பிரச்சினை எதுவுமேயில்லை. நாங்களொரு தேசமாக இருப்பை வைத்திருக்கின்ற வரைக்கும் ஒட்டுமொத்த இலங்கைத் தீவையும் ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்றக் கனவு காண்கின்ற அந்தக் கனவுக்கு நாங்கள் இடைஞ்சலாகவும் தடையாகவும் இருக்கின்றோம்.

ஆகவே திட்டமிட்ட வகையில் பிரித்தானியர் இலங்கைத் தீவில் வெளியேறிய காலம்தொடக்கம் இற்றை வரைக்கும் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் தேசம் என்ற அங்கீகாரத்தினை கொடுக்கக்கூடியதாகவுள்ள தமிழரது தாயகநிலம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பன ஒவ்வொரு நொடியும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. அதன் மூலம் தமிழ்த் தேசம் அழிக்கப்படுகின்றது என்பதுதான் தமிழருக்கு இருக்கக்கூடிய இனப்பிரச்சினை. இப்படிப்பட்டதொரு இனப்பிரச்சினைக்குத் தீர்வு என யோசிக்கின்றபோது முதற்கட்டமாக எங்களுடைய தேசத்தினுடைய அங்கீகாரம் என்பது இன்றியமையாத ஒரு விடயமாகின்றது. தேசத்தினுடைய அங்கீகாரம் தான் முதற்படியாக இருக்க வேண்டும். அந்தத் தேசத்தினுடைய அங்கீகாரம் அரசியல் ரீதியாகக் கிடைக்கிற பட்சத்தில் தான், அதற்குப் பிறகு அந்த தேசம் எப்படி சிங்கள தேசத்தோடு இணைந்திருக்கப் போகின்றதா? அல்லது நாங்கள் பிரிந்து தனியாக செல்லப் போகின்றோமா? என்ற எல்லாக் கேள்விகளுக்கும் நாங்கள் பதில் தரமுடியும்.

ஒற்றையாட்சியைப் பொறுத்தவரையில் அது அடிப்படையிலேயே பிரச்சினையாக இருக்கின்றதற்குக் காரணம் ஒற்றையாட்சி முறையிலே தமிழர் வேறாக சிங்களவர் வேறாக வேறுபடுத்தி நாங்கள் பார்க்க முடியாது. ஒற்றையாட்சியிலே ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரேயளவான பெறுமதி தான் இருக்கின்றது. தமிழ், சிங்களம் என்று பிரித்துப் பார்க்கும் ஒரு தன்மை கிடையாது. மனிதர்கள் என்ற வகையிலே முடிவுகள் எடுக்கப்படும். அந்த யதார்த்தத்தில் 75 வீதமான மக்கள் சிங்கள பௌத்தர்களாக இருக்கும் போது ஒரு ஒற்றையாட்சி முறை யில் சிங்கள பௌத்த மக்களுடைய ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. அதுதான் இன்றைக்கு எங்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினை.

இன்று இலங்கைத் தீவில் ஒரு ஒற்றையாட்சி நடைபெறுகின்றது. 75 வீதமானவர்கள் சிங்கள பௌத்தர்கள். அந்த பெரும்பான்மை மக்கள் தமிழர்கள் ஒரு தேசமாக இருக்கக்கூடாது. தேசமாக இருக்கிறவரைக்கும் தங்களுடைய இலங்கைத் தீவு சிங்கள பௌத்த நாடாக இருக்க

> **தமிழரது தாயகநிலம், மொழி, கலாசாரம், பொருளாதாரம் என்பன ஒவ்வொரு நொடியும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. அதன் மூலம் தமிழ்த் தேசம் அழிக்கப்படுகின்றது என்பதுதான் தமிழருக்கு இருக்கக்கூடிய இனப்பிரச்சினை.**

வேண்டும் என்ற கனவுக்கு ஒரு சவாலாகவும் தடையாகவும் அது இருக்கும் ஆபத்து உள்ளது எனக் கருதுகின்றனர். இதனால் ஒரு இன அழிப்பு திட்டமிட்ட வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசத்தினுடைய அடையாளத்தை அழிப்பது என்பது ஒரு இன அழிப்பு. ஒற்றையாட்சியும் இனப்பிரச்சினைக்கான ஒரு முக்கிய காரணியாகும்.

இந்தப் பின்னணியிலேதான் தமிழ்த் தேசிய அரசியல் என்பது உண்மையில் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பின்னரும் 1977ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிற்குப் பின்னரும் தேசத்தை மையப்படுத்திய ஒரு அரசியலுக்கு நாங்கள் மாறியது. அதற்கு முதல் தமிழரசுக் கட்சி அதிகாரப் பகிர்வுக்கூடான ஒரு சமஸ்டி என்ற ஒரு கோட்பாட்டை முன்வைத்தது. அதற்கு முதல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 50க்கு 50 என்ற ஒரு கோட்பாட்டை முன்வைத்தது. இவற்றை எல்லாமே எடுத்துப் பார்த்தால் ஆரம்பத்தில் தேசம் என்ற அடையாளத்தை மையப்படுத்தி எதையும் முன்வைக்க வில்லை. ஆனால் அனுபவ ரீதி யாக தேசம் என்ற அடையாளத் தைத்தான் அழிக்கிறார்கள் என்று தெரியவர அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - தமிழரசுக் கட்சி உள்ளிட்ட அனைத்துத் தரப்புக்களும் இணைந்து 1976ல் வட்டுக்கோட்டைத்தீர்மானம்எடுக்கப்பட்டது. அந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தேசம் என்ற அடையாளத்தைப் பாதுகாக்க தனிநாட்டையே தீர்வாகக் கோரினார்கள். அத்தீர்மானத்திற்கு 1977 பொதுத் தேர்தலில் மக்கள் ஆணைகொடுத்தனர். ஆனால் அதன் பின்பு இந்தியாவினுடைய நேரடி தலையீட்டினைத் தொடர்ந்து தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக ஐக்கிய இலங் கைக்குள் ஏதோ ஒருவகையில் தீர்வு காண வேண்டும் எனச் சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் தான் 1985ஆம் ஆண்டு திம்பு மாநாட்டில் அனைத்துத் தமிழ் அமைப்புகளும் வெறுமனே ஒரு தேர்தல் அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கட்சிகள் மட்டுமல்லாது ஆயுதம் ஏந்திப் போராடிக்கொண்டிருந்த அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்து திம்புக் கோட் பாடுகளை முன்வைத்தார்கள். அந்தத் திம்புக்கோட்பாடுகள் தனித்தமிழீழத்திற்கு மாற்றீடாக, தமிழ் மக்கள் இந்த இனப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வகையில் தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாக் கக்கூடிய அடிப்படையிலே விடயங்கள் ஆராயப்பட்டு மூன்று மிக முக்கியமான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அதனுடைய மிகமுக்கியமான ஒரு கோட் பாடு தமிழர் ஒரு தேசம் என்ற ஒரு அங்கீகாரம். இந்த அடிப்படையிலே தான் தமிழ் அரசியல் படிப்படியாக வளர்ந்திருக்கிறது. ஆனால் துரதிஸ்டவசமாக தேர்தல் அரசியலிலே ஈடுபட்டவர்கள் விட்டுக்கொடுத்து நேர்மையற்ற வகையிலே செயற்பட்டார்கள். பாராளுமன்ற அரசியல் தலைமைகள் சோரம் போகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்த இளைஞர்கள் ஆயு தப் போராட்த்திற்கு செல்லத் தொடங் கினர்.


அதன் மூலம் தமிழ் மக்களது தலைமை மிதவாத தேர்தல் அரசியலில் இருந்து ஆயுதப் போராட்டத்திற்கு மாறியது. அந்தப் போராட்டத்தை முன்னெடுத்த தரப்புக்களிலே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மிக முக்கியமான ஒரு இடத்தைப் பெற்று தலைமை வகித்தது. 2009 மே மாதம் வரையில் அந்தத் தலைமை அந்தப் போராட்டத்தை முன்னெடுத்து உரிமைக்காகச் செயற்பட்டு வந்தது.

(தொடரும்)

# அழிக்கப்பட்ட கிராமம் சத்துருக்கொண்டான்

-எஸ்.ஜெயானந்தமூர்த்தி-

'அன்று இவ்வாறான துயரம் நிறைந்த சம்பவம் நடக்குமென நாம் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் எதிர்பார்த்திராத நிலையில் மாலை வேளையில் இராணுவத்தினர் எமது கிராமத்தை நோக்கி வருவதைக் கண்டதும் நான் எனது மனைவி பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு காட்டுக்குள் ஓடி மறைந்துவிட்டேன். இல்லாவிட்டால் எனது குடும்பமும் இன்று அழிந்திருக்கும். தற்போது நான் எனது கிராமத்தை மறந்து பல வருடங்கள் கடந்துவிட்டன எனக்கூறினார் சத்துருக் கொண்டான் கிராமத்தைச் சேர்ந்த சின்னையா இராசமாணிக்கம்.




இந்த நிலையில் செப்டெம்பர் மாதம் 5ம் திகதி வந்தாறுமூலைப் பல்கலைக் கழகத்தில் இயங்கி வந்த அகதி முகாம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு 158 பேர் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் கொலை செய்யப்பட்டு விட்டதாகவும் கதைகள் காட்டுத்தீ போல் எங்கும் பரவின. இதனால் பெரும் அச்சம் ஏற்பட்டது. இதுமாத்திரமின்றி தமிழ் மக்களை பழிவாங்கும் வகையில் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினருடன் இணைந்து படுகொலைகளிலும் கைது நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இதுவும் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

இவ்வாறுதான் சத்துருக்கொண்டான், பனிச்சையடி, பிள்ளையாரடி, கொக்குவில் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் அகதி முகாமில் இருந்துவிட்டு படிப்படியாகத் தமது வீடுகளுக்குத் திரும்பினர். எனினும் இவர்கள் இரவு வேளைகளில் பொது இடங்களிலும் சிலர் ஒவ்வொரு வீடுகளிலும் எட்டுப்பத்துக் குடும்பங்களுமாகத் தங்கினர்.

1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி மாலை ஐந்து மணி சத்துருக்கொண்டான் கிராமத்திற்கு ஊடாகவும் பிள்ளையாரடிக் கிராமத்தை நோக்கியும் இராணுவத்தினர் படைபடையாகச் சென்றனர். இவர்களைக் கண்டதும் வீடுகளில் இருந்தவர்களுக்கு குலை நடுக்கம், இராணுவத்தைக் கண்ட சிலர் தப்பி ஓடிவிட்டனர். ஒருசிலர் அருகில் உள்ள பற்றைக் காடுகளுக்குள் மறைந்து கொண்டனர். இக்கிராமங்களைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்தவர்களையும் கண்ணில் தென்பட்டவர்களையும் அழைத்துக் கொண்டு பனிச்சையடியை அடைந்தனர். கொக்குவில் கிராமத்திற்கு ஊடாகச் சென்ற படையினர் அக்கிராமத்தில் இருந்தவர்களையும் அழைத்துக் கொண்டு பனிச்சையடிச் சந்தியை அடைந்தனர். அச்சந்தியில் அவர்களை இருக்குமாறு கூறிவிட்டு பனிச்சையடிக் கிராமத்தவர்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டனர்.

இராணுவத்தினர் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி ஆகிய கிராமங்களில் நடமாடும்போது கொக்குவில், பனிச்சையடிக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் தப்பி ஓடிவிட்டனர். கணவன் இருந்தால் பிடித்துக்கொண்டு சென்று விடுவார்கள் என நினைத்து கணவனை ஓடுமாறு கூறிவிட்டு வீட்டில் இருந்த மனைவியும் இந்த சுற்றி வளைப்பில் அகப்பட்டுப் போனாள்.

மூன்று மாதக் குழந்தை உட்பட சிறுவர்கள், சிறுமிகள், நடுத்தர வயதினர், வயோதிபர், கரப்பிணிப்பெண்கள் எனக் கண்ணில்பட்டவர்கள் அனைவரும் மாடுகளை ஓதுக்குவதைப் போல் கொண்டு செல்லப்பட்டனர். பனிச்சையடியில் ஒரு குடும்பத்தில் வயோதிபர் தாயும் தந்தையும் நான்கு இளம் பெண்களும் இருந்தனர். இந்த இளம் பெண்கள் நால்வரும் வாய்பேச முடியாததுடன் கால் கை ஊனமடைந்தவர்கள். இவர்களால் நடக்க முடியாது. இவர்களை இராணுவத்தினர் கைத்தாங்கலாக தூக்கி பனிச்சையடிச் சந்திக்குக் கொண்டு சென்றனர். தாய், தந்தையையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. இவர்களில் கூட அந்த அரக்கர்கள் இரக்கம் காட்டவில்லை. நேரம் ஆறு மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. கிராமங்களில் சுற்றி வளைத்து பனிச்சையடிச் சந்தியில் ஒன்று சேர்த்தவர்களைப் பின்னர் சத்துருக்கொண்டான் முகாமிற்கு காட்டு வழியாகக் கொண்டு சென்று எந்தவித விசாரணையும் இன்றி வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர். இவர்களில் ஒருவர் வெட்டுக் காயத்திற்கு உள்ளாகி இறந்தவர்கள் போல் கிடந்து இராணுவத்தினருக்குத் தெரியாமல் மெதுவாக தவண்டு தவண்டு சென்று உயிர் தப்பினர். இவர் தான் இப்படுகொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர். 184 பேர் இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டனர்.

> "கிராமங்களில் சுற்றி வளைத்து பனிச்சையடிச் சந்தியில் ஒன்று சேர்த்தவர்களைப் பின்னர் சத்துருக்கொண்டான் முகாமிற்கு காட்டு வழியாகக் கொண்டு சென்று எந்தவித விசாரணையும் இன்றி வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர்."

இப்படுகொலை நடந்தது மாத்திரமின்றி, இராணுவத்தினர் இக்கிராமங்களில் வீடுகளையும் தீயிட்டுக் கொளுத்தினர். இதனால் அவர்களின் உடைமைகளும் முற்றாகச் சேதமாகின. மொத்தத்தில் இக் கிராமங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. இதன் பின்னர் இக்கிராம மக்கள் முழுமையாக வெளியேறி மட்டக்களப்பு நகரில் இயங்கி வந்த அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். வீட்டில் எவரும் இல்லாமல் பாழடைந்து கிடக்கின்றது அவர்களின் உறவினர்கள் கூட இன்று எவரும் உயிருடன் இல்லை.

இப்படுகொலையில் மூன்று மாதக் குழந்தைகளான என். வேணுதாஸ், எஸ். பிரியா மற்றும் நான்கு மாதக் குழந்தையான ஏ. வேணுயா உட்பட ஒரு வயதிற்குட்பட்ட ஐந்து குழந்தைகளும் பத்து வயதிற்குட்பட்ட 42 சிறுவர்கள், சிறுமிகளும் 68 வயதிற்கு மேற்பட்ட 28 பேரும் அடங்கியுள்ளனர். இவர்களில் ஒன்பது பெண்கள் கர்ப்பிணிகளாவர்.

இதில் கிராம ரீதியாக சத்துருக் கொண்டான் கிராமத்தில் 38 பேரும், பனிச்சையடிக் கிராமத்தில் 37 பேரும் பிள்ளையாரடிக் கிராமத்தில் 62 பேரும், கொக்குவில் கிராமத்தில் 47 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இப்படுகொலையை விசாரணை செய்ய ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் கே.பாலகிட்ணர் தலைமையிலான மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகளும் இடம்பெற்றன. இதில் சம்பவத்தில் தப்பிவந்த இளைஞனும் வாக்கு மூலம் அளித்தான். அத்துடன் கிராம மக்கள் பலர் வாக்குமூலம்அளித்திருந்தனர். இராணுவத்தினர் இப்படுகொலையைச் செய்தது ஊர்ஜிதமானது. இக் கொலைச் சம்பவத்தின் போது சத்துருக்கொண்டான் முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர் கப்டன் வர்ண குலசூரிய. இவரின் பணிப்பிலேயே இப்படுகொலை நடந்ததாகப் பொதுமக்கள் விசாரணையில் தெரிவித்தனர். ஆனால் இவருக்கோ இதில் சம்பந்தப்பட்ட ஏனைய இராணுவத்தினருக்கோ எந்தவொரு தண்டனையும் வழங்கப்படவில்லை.

இப்படுகொலையில் உயிரிழந்த 184 பேரின் நினைவாகப் பனிச்சையடிச் சந்தியில் கடந்த வருடம் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமே இப்படுகொலையின் அத்தாட்சியாகவும் ஞாபகச் சின்னமாகவும் இன்றுள்ளது.

மறுநாள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவிடம் சென்று முறையிட்டபோது அன்று விடுமுறை தினம் என்பதால் உடனடியாக வர முடியாதெனவும் மறுதினமே வர முடியும் என்று கூறிவிட்டனர்.

இதனால் மறுதினமே அவர்கள் கிராமத்திற்கு வருகை தந்ததுடன் முகாமையும் சென்று பார்வையிட்டனர். ஆனால் படையினர் பொதுமக்களைத் தீயிட்டுக் கொளுத்திய தடயத்தை மறைத்துவிட்டனர். எனினும் அவர்கள் அணிந்திருந்த காலணிகள் மற்றும் ஆடைகள் கிடந்தன. ஆனால் படையினர் எந்தவொரு பதிலும் தெரிவிக்கவில்லை.

## எத்தனை நாள்
## துயின்றிருப்பாய்..
## என்னருமை
## தாய்மண்ணே..!




# மலையக தேசியம்

## சிதைக்கப்படும் தமிழ்மொழி

■ வோல்டர் டெரி

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால் 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பில் (இந்த யாப்பினை இடதுசாரி தலைவர் கொல்வின் ஆர்.டி.சில் வாவே தயாரித்தார்) சிங்கள மொழிக்கு அரச கருமமொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டதுடன் பௌத்த மதம் முதன்மை மதமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழ் மொழியின் உபயோகத்திற்கு சாதாரண பாராளுமன்ற சட்ட அந்தஸ்தே இருந் தது. இது யாப்பு ஏற்பாடாக பொருள் கொள்ளக்கூடாது என்றும் கூறப்பட்டது. பிறகு ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பின் (இன்றும் இந்த யாப்பே நடைமுறையில் உள்ளது) படி சிங்களம் அரச கரும மொழியாகவும், சிங்களமும், தமிழும் தேசிய மொழிகளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் அத்தியாயம் IV இலும், 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய- இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் அரசியல் யாப்பிற்குக் கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்தின் ஊடாகவும், பிற்காலத்தில் கொண்டு வரப்பட்ட 16 வது திருத்தச் சட்டத்தின் மூலமாகவும் தமிழ் மொழி முழு இலங்கைக்குமான ஆட்சி மொழியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் தமிழும், சிங்களமும் தேசிய மொழிகளாகவும், ஆட்சி மொழியாகவும் இருப்பதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் உள்ளது.

மேற்குறிப்பிட்ட உறுதிப்பாடானது இலங்கையின் அரசியல் யாப்பின் அத்தியாயம் 27(2)(ஏ) பிரிவின் படியான “சமத்துவமான கல்வி, எல்லோருக்கும் கல்வி” என்பது ஒவ்வொரு பிரஜையினதும் உரிமை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இலவசக் கல்வி, தாய் மொழிக் கல்வி, எல்லோருக்கும் கல்வி என்பன இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் ஒவ்வொரு பிரஜையினதும் உரிமையாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி மொழி என்பது ஆளுமை விருத்திக்கும், கருத்துருவாக்கத்திற்கும், சூழலுடன் இசைந்து கற்பதற்கும் இன்றியமையாததாகும். எனவே, மலையகத் தமிழரின் தாய் மொழியான தமிழ் மொழியில் உயர் கல்வி வரையில் இலவசமாக கற்பதற்காக உள்ள வாய்ப்பு வரவேற்கத்தக்கதே. மேலும், அரசியல் யாப்பு ரீதியான உறுதிப்பாடு என்பது இலங்கையில் கல்வி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் சட்டங்களை ஆக்கும் மொழியாகவும் தமிழ் மொழியும்,

1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பில் (இந்த யாப்பினை இடதுசாரி தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வாவே தயாரித்தார்) சிங்கள மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டதுடன் பௌத்த மதம் முதன்மை மதமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.

சிங்கள மொழியும் அங்கீகாரம் பெற்றுள்ளன என்பதை இதனூடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அரசியலமைப்பின் பிரகாரம் அரச நிர்வாகச் செயற்பாடுகளில், தமிழ் மொழி பங்கு கொடுக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் தமிழ் மொழியின் அமுலாக்கம் உரிய முறையில் இடம்பெறுவதில்லை. இலங்கையில் மொத்தமாக 325 பிரதேச செயலகங்கள் உள்ளன. 55 % மேற்பட்ட தமிழ் பேசுவோர் வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலேயே வாழ்கின்றார்கள். ஆனால் வட-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் நிர்வாக ரீதியாக தமிழ் மொழி அமுலாக்கம் உரிய விதத்தில் பயன்பாட்டில் காணக்கூடியதாக இல்லை. கிழக்கு மாகாணத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் முழுமையாக சிங்கள மொழியிலேயே நிர்வாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வட- கிழக்கிற்கு வெளியே உள்ள அரசாங்க நிறுவனங்களான அமைச்சுக்கள், மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மாவட்டச் செயலகமும் அதன் உப பிரிவுகளான பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் போன்றவற்றின் நிர்வாக செயற்பாடுகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் தமிழ் மொழியில் இடம்பெறுவதில்லை.



### இருமொழி பிரதேச செயலகங்கள்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலே 12.11.1999 ஆம் திகதி 1105/25 ஆம் இலக்க விஷேட அரசாங்க வர்த்தமானி மூலம் நுவரெலியா மாவட்டம் முழுவதிலும் (நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை, ‘ஹங்குரன்கெத்த பிரதேச செயலகங்கள்) சகல நிர்வாக நடவடிக்கைகளும் தமிழ் மொழியிலும் இடம்பெற வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை, எல்லை, ஹல்துமுல்லை, அப்புத்தளை, ஹாலிஎல, பசறை, மஹிகாகியுல பிரதேச செயலகங்களும் இரு மொழி பிரதேச செயலகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் 14.02.2001 ஆம் திகதி 1171/18 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியினூடாக கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய ஆகிய பிரதேச செயலகங்கள் இரு மொழி (சிங்களம்,தமிழ்) செயலகங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு 07.04.2003 ஆம் திகதி 1283/3 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி மூலமாக பதுளை மாவட்டத்தின் லுணுகலை, வெலிமடை, சொரணதொட்டை பிரதேச செயலகங்களும் கண்டி மாவட்டத்தின் அக்குறணை, தெல்தோட்டை, பன்விலை, பஸ்பாகே கோரளை, உடபலாத்த (தொலுவ) பிரதேச செயலகங்களும் காலி மாவட்டத்தின் காலி நகர் சூழ் பிரதேச செயலகமும், களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேச செயலகமும் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி, முந்தல், புத்தளம், வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச செயலகங்களும் நிர்வாக ரீதியாக இருமொழி பிரதேச செயலகங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதேபோல் 2006 ஆம் ஆண்டில் அரச கரும மொழிகள் ஆணைக்குழு மேலும் 43 பிரதேச செயலகங்களை (16 வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், 27 வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலும்) இருமொழி பிரதேச செயலகங்களாக அங்கீகரித்து வர்த்தமானியில் வெளியிட வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் வவுனியா தெற்கு பிரதேச செயலகமும், கிழக்கு மாகாணத்தை பொறுத்தமட்டில் திருகோணமலை மாவட்டத்தின் கோமரன்கடவல, கந்தளாய், மொரவேவா-பண்குளம், பதவிசிரிபுர, சேருவில, தம்பலகாமம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகங்களும், அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, தமண, தெஹியத்தகண்டிய, லாவுகல, மாஹாஓயா, பதியத்தலாவ, உஹன பிரதேச செயலகங்களும் இதில் அடங்குகின்றன.

(தொடரும்)








10

# மாதொருபாகன்

பெருமாள் முருகன்

**பெருமாள் முருகன் தமிழ்நாட்டின்புகழ்பெற்றஎழுத்தாளர். இவருடைய “மாதொருபாகன்” என்னும்இந்தநாவலை எதிர்த்து சாதி அமைப்புகளும் மதவாத அமைப்புகளும் ஹர்த்தால் போராட்டங்களை நடாத்தின. இதனால் கவலையுற்ற பெருமாள் முருகன் தான் ““மாதொருபாகன்” நாவலை திரும்பப் பெறுவதாகவும் இனிமேல் எதுவும் எழுதப் போவதில்லை எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்தும் எழுதுமாறு வேண்டுகின்றோம். அவருக்கு ஆதரவுதெரிவித்து இந்நாவலை தொடராக வெளியிடுகின்றோம்.**

உள்ளிருந்து தலையை நீட்டி 'வாச்சியாட்டம் நீட்டிக்கிட்டிருக்கற கல்லப் புடிச்சுக்க. கீழ கால் வெக்கறதுக்குச் சின்னதாக் கூர் மட்டும் தெரியுது பாரு. பயப்படாத உழுந்தாலும் கெணத்துக்குள்ளதான் உழுவ. அடிபடாத அளவு தண்ணி இருக்குது' என்றான் முத்து.

சிறு பிடிமானத்தைக் கவ்விப் பற்றும் உடும்பு போல அந்தப் பொந்துக்குள் காளி போனான். போனபின்தான் தெரிந்தது. அது பொந்தல்ல, பெருங்குகை. அடிப்பகுதி பாறை. மேலே மண்கூரை, மண்ணை வேண்டுமளவு குடைந்து காரை போட்டதுபோல் ஓடமண்ணால் பூசிவிட்டிருக்கிறான். முன்பக்கம் மறைப்புக்குக் கோவைக்கொடிகள் திரைபோலத் தொங்கின. காளி அசந்து போய்விட்டான். அதற்குள் பெரிய விருந்தே நடத்தும் அளவுக்குப் பொருட்கள் வைத்திருந்தான். அன்றைக்குப் பிடித்து அண்ணாக் கயிற்றில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு வந்திருந்த வெள்ளெலிகள் இரண்டையும் பக்குவம் செய்தான் முத்து. வெதிர் பெருத்த கடுவன் ஒன்றும் பொட்டை ஒன்றும். இரண்டும் சேர்ந்தால் எப்படியும் ஒரு கூறு கறி வரும்.

சூரிக்கத்தி, மரக்கட்டை, சிறுவடிவக் கற்கள் வைத்துக் கூட்டப்பட்ட அடுப்பு, மண் வடச்சட்டி என எல்லாம் இருந்தன. சிறு செலவுப் பெட்டி ஒன்றும் இருந்தது. மிளகாய் கிள்ளிப் பொட்டுக் கறி வறுத்தான் முத்து. புகையாமல் எரியும் விறகுத் துண்டுகளை எங்கிருந்து கொண்டு வந்தானோ. கிணற்றில் யாராவது ஏற்றம் இறைத்தால்கூட இங்கே உள்ளே ஆள் இருப்பது தெரியாது. காளி கால் நீட்டிப் படுத்துக் கொண்டான். கறி ருசிக்கும் அவன் வைத்திருந்த சாராயத்திற்கும் அப்படி ஒரு பொருத்தம். அடியில் கொஞ்சமாய் நின்றிருந்த சாறு அவ்வளவு சுவையாக இருந்தது. உள்ளங்கையில் ஊற்றி 'உறுப்'பென்று உறிஞ்சினான் காளி. இரண்டு பேரும் எந்தத் தொந்தரவும் இல்லாமல் குடித்தும் தின்றும் வெகு நேரம் தூங்கியும் நேரம் கழித்துவிட்டுச் சாயங்காலமாக வெளியே வந்தார்கள்.

'கெணத்துப் பொந்துல பாம்புதான் இருக்கும்' என்றான் காளி.

'நெசப்பாம்பு வராம இருக்க வசம்பு வெச்சிருக்கறன் பாரு' என்று காட்டினன். வசம்பு வாசத்துக்குப் பாம்பு வராது. கறி தின்ற பின் கொஞ்சம் சாம்பிராணி போட்டுப் புகைத்துவிட்டால் வாசமிருக்காது.

'மனசனெல்லாம் இந்த எடத்தக் கண்டுபிடிக்க முடியாது. நீதாண்டா பாம்பு' என்று காளி சொன்னான்.

அந்த இடம் இன்னும் யாருக்கும் தெரியாமல்தான் இருக்கும். யாராவது கண்டுபிடித்துவிட்டால் உடனே இடத்தை மாற்றிவிடுவான் முத்து. அந்தக் கிணற்றுக்குள் யார் இறங்கப் போகிறார்கள்? இறங்கினாலும் கோவைக் கொடித்திரை தொங்கும் அந்தக் குகையைக் கண்டுபிடிக்கச் சாதாரண கண் போதாது. உள்ளே எத்தனை நாள் வேலை செய்திருப்பானோ. மண் ஒட்டன் கெட்டான். அப்படிப் பூசி மெழுகி மேற்கூரையை அமைத்திருந்தான். இப்போது அவனிருந்தால் பரவாயில்லை. அவனோடு அப்படியே காட்டுப்பக்கம் போய் வந்தால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் என்று நினைத்தான்.

அவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துப் பொன்னா ஓடி வந்தாள். 'மாமா தண்ணி வேணுமா' என்று கேட்டாள். ஆமோதிப்பாய்த் தலையசைத்தான். உள்ளே ஓடினாள். இங்கே வந்துவிட்டால் அவனுடைய சின்ன அசைவுகளையும் கவனித்து வேண்டியன உடனுக்குடன் செய்வாள். வேறு ஏதோ வேலையில் இருப்பது மாதிரி தெரியும். அவள் கவனம் முழுக்க அவன் மேலேயே இருக்கும்.

> **'எல்லாம் ஒரு கொழந்த பொறக்கட்டும். புருசன ஓடி ஓடிக் கவனிக்கறதப் பாக்கறன்' என்பாள் அம்மா.**
>
> **பத்துக் கொழந்த பொறந்தாலும் எனக்கு மொதக் கொழந்த அவருதான்' என்று பெருமை பொங்கச் சொல்வாள்.**

அவள் அம்மா. 'உனக்குத்தான் அதிசயமாப் புருசன் வாச்சிருக்கறான். வெரலசஞ்சாப் போதும் ஓடிப் போய் நின்னுக்கற' என்பாள்.

'ஆமா எம்புருசன் எனக்கு அதிசயந்தான்' என்று விட்டுக் கொடுக்காமல் பேசுவாள் பொன்னா.

'எல்லாம் ஒரு கொழந்த பொறக்கட்டும். புருசன ஓடி ஓடிக் கவனிக்கறதப் பாக்கறன்' என்பாள் அம்மா.

பத்துக் கொழந்த பொறந்தாலும் எனக்கு மொதக் கொழந்த அவருதான்' என்று பெருமை பொங்கச் சொல்வாள்.

'ஆசயிருக்கலாம்டி. உனக்குப் பேராச. அதான் அந்தக் கடவுளுக்கே பொறுக்கலியோ என்னமோ' என்று அம்மா பெருமூச்செறிவாள். பேச்சு அத்தோட முடிந்து மௌனம்.

அவள் கொண்டு வந்த பெரிய பித்தளைச் சொம்புத் தண்ணீர் முழுவதையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டான்.

'என்ன மாமா இவ்வளவு தாகம்' என்று சிரித்தாள்.

'அந்தப் பாவாத்தா தாகத்தவிடக் கம்மிதான்' என்று சொல்ல வாய் வந்து நிறுத்திக் கொண்டான்.


சாமி இன்றைக்கு மலைக்குப் போகும் நாள் என்பதாலோ என்னவோ எல்லாம் அதைப் பற்றிய நினைவாகவே இருக்கின்றது.

'உங்கண்ணன் எப்ப வருவான்,' என்று கேட்டான்.

'அண்ணன் எங்கயோ காத்தாலயே போச்சு. இன்னங்காணாம். எப்படியும் சாப்பாட்டு நேரத்துக்கு வந்திரும். இன்னக்கி உங்களுக்குப் புடிச்ச முருங்கக்காச் சோறு' என்று சொன்னாள்.

வாய் சிரித்தாலும் மனம் லயிக்கவில்லை. பொன்னாவையும் அருகில் படுக்க வைத்து இறுக அணைத்து அவள் மார்பில் தலைசாய்த்துக் கிடந்தால் எல்லா நினைவுகளும் கழன்றோடிவிடும் என்று தோன்றியது. பட்டப்பகலில் பூவரச மர நிழலில் கட்டிலில்... எதற்கு மனம் இப்படி நடக்க முடியாத விஷயங்களை எல்லாம் யோசிக்கிறது? அவள் கையைப் பிடித்தெடுத்துக் கன்னத்தில் தேய்த்துக் கொண்டான். மெல்லத் தடவினாள். அதற்குள் அம்மாவின் அழைப்பு. அவள் நங்கை இருந்திருந்தால் பொன்னாவுக்கு வேலை அதிகம் இருக்காது. குழந்தையையும் கூட்டிக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாள் நங்கை. அங்கே நோம்பி அழைப்பு.

வாசல் கடந்து உள்ளே போகும் பொன்னாவையே பார்த்தான். அவளும் தான் குழந்தைக்காக என்னென்ன செய்திருக்கிறாள். எதைச் சொன்னாலும் தட்டமாட்டாள். கல்யாணம் ஆகி ஐந்தாறு மாதம்தான் எல்லாருக்கும் பொறுமை. அதுவரை கூட ஜாடைமாடையாகப் பேச்சு இருக்கும். அதற்கப்புறம் வெளிப்படையாகவே கேட்பார்கள். கல்யாணம் ஆன மாதத்திலேயே கருவுற்றால்தான் உண்டு. இல்லாவிட்டால் எந்த வகையிலாவது விசாரணை தொடங்கிவிடும். ஆறுமாதம் வரை பொறுமை காத்த அம்மா அப்பறம் தன் கைவைத்தியத்தைத் தொடங்கினாள்.



(தொடரும்....)




ஜெ.பிஸ்மி

# மகனை இழந்து கணவனைத் தேடிச் செல்லும் பெண்ணின் பயணம்

ஆண்களின் ஆதிக்கக் கொடி பறக்கும் இந்த உலகத்தில், ஆண் துணை இல்லாமல் வாழ்க்கையை எதிர்கொள்வது பெண்களுக்குப் பெரும் பிரச்சினையான விசயம். அதிலும், சரியான இல்லறத்துணை அமையாத பெண்ணின் வாழ்க்கை இன்னும் மோசம்... ஒவ்வொரு நாளும் நெருப்பாற்றில் நீந்துவதற்கு ஒப்பான இன்னல்களைச் சந்தித்தே தீரவேண்டிய சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள். காலம் முழுக்கத் தன்னிடம் அன்பாய், ஆதரவாய் இருப்பான் என்ற நம்பிக்கையில் ஒருவனுக்கு மனைவியாகி, அவனால் கைவிடப்படுகிறபோது அப்பெண் கடுமையான போராட்டத்துக்குள் தள்ளப்படுகிறாள்.

அப்படிப்பட்ட ஒரு பெண்ணின் துயரக்கதைதான் 'என் அம்மாவைப் பற்றிய எல்லாம்..' (All about my mother) என்ற ஸ்பெயின் நாட்டுத் திரைப்படம். பெட்ரோ அல்மோடுவார் இயக்கி, 1999 இல் வெளியான இப்படம், சிறந்த வெளிநாட்டுப்படம் என்ற ஆஸ்கார் விருது, சிறந்த இயக்கம், மற்றும் ஆங்கிலம் அல்லாத படம் என்ற பிரிவில் பிரிட்டிஷ் அக்கடமி விருது உட்பட ஏராளமான விருதுகளைக் குவித்தது.

ஒரு ரம்மியமான மாலை நேரத்தில் தொடங்குகிறது- என் அம்மாவைப் பற்றிய எல்லாம்.. திரைப்படம். கணவனைப் பிரிந்து தன் ஒரே மகனுடன் மேட்ரிட் நகரில் வசிக்கிறாள் மேனுலா. அவளது மகன் ஈஸ்டிபன்னுக்கு அன்று பதினேழாவது பிறந்தநாள். அம்மாவும் மகனும் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பார்க்கும் ஈஸ்டிபன் நிகழ்ச்சியை விமர்சிக்கிறான். அதோடு, தானே ஒரு கதையை எழுத ஆரம்பிக்கின்றான். தன் தாயைப்பற்றிய அந்தக் கதைக்கு 'என் அம்மாவைப் பற்றிய எல்லாம்...' என்று பெயர் வைக்கிறான். அக்கதையில் தான் அதுவரை கண்டிராத தன் அப்பாவைப் பற்றியும் எழுதுகிறான்.

"என் தந்தை எவனாகவும் இருக்கட்டும். எப்படிப்பட்டவனாகவும் இருக்கட்டும் அவனிடமிருந்து என் உரிமையை யாராலும் மறுக்க முடியாது" என்று தன் அப்பாவைப்பற்றி எழுதியதோடு, "என் அம்மாவின் புத்தகத்தில் பாதியாகக் கிழிக்கப்பட்ட ஒரு புகைப்படத்தைப் பார்த்தேன். அது என் அப்பாவாகத்தான் இருக்கவேண்டும். அந்தப் புகைப்படம் இழந்த பாதிபாகத்தைப் போலவே என் வாழ்க்கையும் பாதியை இழந்துவிட்டது" என்று தன்னோடு அப்பா இல்லாத சோகத்தையும் அதில் இறக்கி வைக்கிறான்.

இரவாகிறது. அம்மாவும், மகனும் அதே ஊரில் நடக்கும் ஒரு நாடகத்தைப் பார்க்கச் செல்கிறார்கள். நாடகம் முடிந்து வெளியே வரும்போது மழை கொட்டிக் கொண்டு இருக்கின்றது. நாடகத்தில் நடித்த நடிகை ஹூமாவிடம் ஆட்டோகிராஃப் வாங்க விரும்புகிறான் ஈஸ்டிபன்! அவள் இன்னும் வெளியே வரவில்லை. அவளுக்காகக் காத்திருக்கும் நேரத்தில், ஸ்டெல்லா கதாபாத்திரத்தில் நடித்தவள் உன்னைப் போல் இருப்பதாகத் தன் அம்மாவிடம் சொல்கிறான். அதை ஆமோதிப்பது போல், இருபது வருடங்களுக்கு முன் இதே நாடகத்தில் ஸ்டெல்லா பாத்திரத்தில் தான் நடித்ததையும், தன்னுடன் ஈஸ்டிபனின் அப்பா நடித்ததையும் நினைவு கூர்கிறாள் மேனுலா.

இத்தனை காலம் தன் அப்பாவைப் பற்றி வாய் திறக்காத அம்மா, முதன் முறையாக இன்று வாய்திறந்தது ஈஸ்டிபனுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. 'என் அப்பாவைப்பற்றி இன்று நீ அவசியம் கூற வேண்டும்' என்கிறான். இனியும் தன் கடந்த காலத்தை மறைக்க தன் மகன் சின்னப்பிள்ளை இல்லை என்பதை உணரும் மேனுலா, வீடு போய்ச் சேர்ந்ததும் எல்லாவற்றையும் சொல்வதாக உறுதியளிக்கிறாள். அம்மாவின் வாக்குறுதி அவனை உற்சாகமடைய வைக்கிறது.

நடிகை ஹூமா வெளியே வருகிறாள். மழையிலும், வாசலில் நிற்கும் கூட்டத்திலிருந்தும் தப்பிக்கவும் விரைந்து சென்று காரில் ஏறிக் கொள்கிறாள். அவளிடம் ஆட்டோகிராஃப் வாங்கமுடியவில்லையே என்று ஏமாற்றமடையும் ஈஸ்டிபன், ஹூமா செல்லும் காரைத்துரத்திக் கொண்டு ஓடுகிறான். எப்படியாவது காரைநிறுத்தி அவளிடமிருந்து ஆட்டோகிராஃப் வாங்கிவிடவேண்டும் என்று ஓடும் ஈஸ்டிபன் எதிரில் வந்த காரில் அடிபட்டு அங்கேயே இறக்கிறான். மழையில் நனைந்த அவனது ஆட்டோகிராஃப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு கதறுகிறாள் மேனுலா.

ஒரே உறவாய் இருந்த ஈஸ்டினின் இழப்பு மேனுலாவை மனதளவில் கடுமையாய் பாதிக்கிறது.

தன்னைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், தற்போதைய ஒரே




உறவான தன் கணவனைத் தேடி பார்சிலோனாவுக்குக் கிளம்புகிறாள். அவனுக்கு ஒரு மகன் இருந்ததையும், விபத்தில் இறந்ததையும், அவன் எழுதிய முற்றுப் பெறாத கதையைக் காட்டி, அவன்

"என் தந்தை எவனாகவும் இருக்கட்டும். எப்படிப்பட்டவனாகவும் இருக்கட்டும் அவனிடமிருந்து என் உரிமையை யாராலும் மறுக்க முடியாது" என்று தன் அப்பாவைப்பற்றி எழுதியதோடு, "என் அம்மாவின் புத்தகத்தில் பாதியாகக் கிழிக்கப்பட்ட ஒரு புகைப்படத்தைப் பார்த்தேன். அது என் அப்பாவாகத்தான் இருக்கவேண்டும். அந்தப் புகைப்படம் இழந்த பாதியாகத்தைப் போலவே என் வாழ்க்கையும் பாதியை இழந்துவிட்டது"

தன் அப்பாவைக்கான ஆசைப்பட்டதையும் சொல்லவேண்டும் என்று நினைத்து பார்சிலோனா வரும் மேனுலாவிற்கு அங்கே காத்திருக்கிறது அதிர்ச்சி!

அவளது கணவன் இப்போது போதைக்கு அடிமையாகி இருப்பதையும், பெண்களின் நடை, உடை, சுபாவங்களைப் பின்பற்றுகிறவனாக... அரவாணியாக மாறிவிட்டதையும், அவனது இப்போதைய பெயர் லோலா என்பதையும் அறிகிறாள். தவிர, அவனைக் கண்டுபிடிப்பது அத்தனை எளிதல்ல என்றும் தெரிகிறது. மகனை இழந்து, கணவனையும் கண்டுபிடிக்க முடியாத நிலையை எண்ணிக் கலங்கிப் போகும் மேனுலா, ஒரு சாலையில் நடக்கும் சண்டையில் தற்செயலாகத் தன் பழைய நண்பன் அக்ரடோவை சந்திக்கிறாள். இருபது வருடங்களுக்கு முன் ஒரே அறையில் வசித்தவர்கள். பழைய நண்பனைப்பார்த்ததும் அந்தக் கண்ணீர் வடிக்கும் மேனுலாவுக்கு, பிறகே உறைக்கிறது.... அக்ரடோவின் தோற்றம். அவனும் அரவாணியாக மாறியிருக்கிறான்.

தன் கணவனைப்பற்றி விசாரிக்கிறாள் மேனுலா. சில மாதங்கள் வரை தன் வீட்டில் குடியிருந்த லோலா தன் பணத்தைத் திருடிக் கொண்டு ஓடிவிட்டதைச் சொல்லும் அக்ரடோ, லோலாவை எப்படியும் கண்டுபிடித்துவிடலாம் என்று நம்பிக்கை தெரிவிப்பதோடு, ரொசா என்ற இளம் பெண்ணிடம் அவளை அறிமுகப்படுத்தி வைக்கிறான். லோலாவைத் தனக்குத் தெரியும் என்று சொல்லும் ரொசா மேனுலாவைத் தன் வீட்டில் தங்க வைக்க அழைத்துச்செல்கிறாள். ரொசாவின் நோயாளித் தந்தையும், அவளது அம்மாவும் மேனுலாவை விலைமாது என்று தப்பாக நினைத்துக் கொண்டு அவளை வீட்டில் தங்க வைக்க மறுக்கிறார்கள். சண்டைபோட்டு அவளைத் தங்க வைக்கும் ரொசா, மேனுலாவுடன் நாளடைவில் நட்பாகிறாள். இருவரும் ஆத்மார்த்தமான தோழிகளாகிறார்கள்.

ஒரு நாள் அதிர்ச்சிகரமான தகவலை அறிகிறாள் மேனுலா. ரொசா கர்ப்பமாக இருக்கிறாள் என்பது தான் அது. மட்டுமல்ல, அவளது கர்ப்பத்துக்குத் தன் கணவனான லோலாதான் காரணம் என்பதையும் அறியும் மேனுலா அவன்தான் தன் கணவன் என்பதை ரொசாவிடம் மறைத்துவிடுகிறாள். கர்ப்பவதியான ரொசாவிற்கு ஒத்தாசையாய்

(23 ஆம் பக்கம் பார்க்க)

# உனது காத்திருப்பும் நானும்

உனது காத்திருப்பு
கொக்காய்
என்
இளமையின்
தீர்ந்து போதலுக்காய்

அவர்கள் சொல்லிப் போன
அவைகளை
நிறைவேற்ற வேண்டி
வீணாகிப் போன
என்
இளமைத் துளிகள்

தீர்ந்து போகு
முன்
இறுதிச் சொட்டையாவது
ஒத்தி எடுக்கும்
முனைப்பில்
சுடர் விட்டெரியும் நான்

வசந்தி

# இரண்டாவது சூரிய உதயம்

இரண்டாவது சூரிய உதயம்
அன்றைக்கு காற்றே இல்லை
அலைகளும் எழாது செத்துப் போயிற்றுக்
கடல்.
மணலில் கால் புதைதல் என
நடந்து வருகையில்
மறுபடியும் ஒரு சூரிய உதயம்.
இம்முறை தெற்கிலே-
என்ன நிகழ்ந்தது?
எனது நகரம் எரிக்கப்பட்டது
எனது மக்கள் முகங்களை இழந்தனர்.
எனது நிலம், எனது காற்று
எல்லாவற்றிலும்
அந்நியப்பதிவு.
கைகளைப் பின்புறம் இறுகக் கட்டி
யாருக்காகக் காத்திருந்தீர்கள்?
முகில்களின் மீது
நெருப்பு.
தன் சேதியை எழுதியாயிற்று!
இனியும் யார் காத்துள்ளனர்?
சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருக.

சேரன்

# நிலவும் நானும்

நீண்ட புல்வெளி
நிலவு
வானத்தில் எழுந்து கொண்டிருந்தது.

நான்
ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தேன்.
மெல்ல வீசிய குளிர்காற்று
என்னைக் கடந்து சென்றது.
வர இருக்கும் குளிர் காலத்துக்குக்
கட்டியம் கூறுகிறதோ?

மெல்ல எழுந்து நடந்தேன்.
எங்கிருந்தோ ஒரு குழந்தையின்
அழுகை ஒலி
இதமாக இருக்கிறது
சோகமான ஒரு நேரம்.

உங்களுக்கு நினைவிருக்கக்கூடும்
ஒரு சனிக்கிழமையாய் இருக்கும்
கிணற்றடியில் இறைத்துக் கொண்டிருந்த
தண்ணீரில் அள்ளித் தோய்ந்து
பலா இலையை மடித்துக் கோலி
ஈக்கில் துண்டை முறித்துச் செருகி
ஒடியல் மீன் கூழை வார்த்து
அம்மா அப்பா தம்பி ஆச்சியென
சுற்றமும் சூழ இருந்து
உறிஞ்சிக் குடித்த நாட்கள்
உங்களுக்கும் நினைவுக்கு வரக்கூடும்.

இழந்தோம்
நாட்களை இழந்தோம்!
உறவுகளை இழந்தோம்!!
பதிவுகளை இழக்கின்றோம்!!!

தேசத்தையும் மண்ணையும்
மொழியையும் மறந்து
புதிய தலைமுறை வளர்கிறது.

அகதிகள் கூட்டத்தின்
முகங்களை இழக்கும்
முகமூடி மனிதர்களுடன்
பேசுவதற்கு அதிகம் இல்லை.
ஓர் அதிகாலை வேளையாய்
இருக்கலாம்
அந்தி சாயும் நேரமாயும்
இருக்கக்கூடும்
அந்தி சாய்ந்து இருள் சூழ்ந்து
நிலவு எழும் நேரமாயும் கூடவிருக்கும்.

நான்
என் தேசத்திற்குச் செல்வேன்.

தேசம் எரிகின்ற போதும்
அது எழுகின்ற போதும்
வாழ்கின்ற
என் தேசத்து மனிதர்களோடு
புன்னகை செய்வேன்.

செழியன்

# ஷெல் குத்துதல்



50 சதம் நினைத்தேன்.
போர்வையைப்
போர்த்திக் கொண்டு
போர்வை இழுபட
இழுபட
பயத்தோடு திரிந்தேன்
முற்றத்தில் வெகு நேரம்
ஒரு ஷெல் குத்தும்
சத்தத்தை எதிர்பார்த்துக்
கொண்டு
அலைந்தேன்.

சிதறிப்போன அந்த
உடல்கள் வந்து
போகின்றன
மாலை முகம் கழுவும்
போது
சவங்களின் விதைகளும்
யோனிமடல்களும்...
நள்ளிரவில் சவங்கள்
என்முன்
எழுந்து நின்றன.
கால்கள் இல்லாது. ஆண்குறியில் தாங்கி
நடந்தன.
தன் துயரத்தையும் வேதனையையும்
வாய்திறந்து காட்டியது
'இரத்தத்தைப்பற்றி நீ கனவு காண்கின்றாய்'
என்றது.
பகலுக்கு என்ன தெரியும்?

இரவில் தானே எல்லாம் களை கட்டுகிறது
இன்று பகலில்
ஷெல் பட்டிறந்த குடும்பத்தை
சவப் பெட்டிகளில் காவிச் சென்றோம்
எனக்கு அழுகை வரவில்லை.

இரவில் தானே எல்லாம் களை கட்டுகிறது
மேசையில் இருந்தால் ஷெல் கூவும் பயம்
'ஆண்டவரே!
இன்று தான் உம்மை வேண்டுகிறேன்'
என்று தோப்புக்கரணம் போட்டேன்.
பாயில் கிடந்தேன். நித்திரை வரவில்லை.

எல்லா
இராக்கால நேரமும்
எழும்பி எழும்பி
'ஆண்டவரே'! என்று தோப்புக்கரணம்
போட்டேன்.
வயல் வெளி முருகன் கோயிலுக்கு

- நட்சத்திரன் செவ்விந்தியன் -



# முதுமை

காலம் பனித்து விழுந்து
கண்களை மறைக்கிறது.

கபாலத்தின் கூரையும்
ஒட்டியிருந்தது
எண்ணவலை பின்னிப்பின்னி
ஓய்கிறது மூளைச் சிலந்தி.

உணர்வின் ஒளிப்பட்டில்
புலனின் வாடைக்காற்று
வாரியிறைத்த பழந்தூசு
உலகை நோக்கிய
என்விழி வியப்புக்கள்
உயிரின் இவ் அந்திப்போதில்
திரைகள் தொடர்ந்து வரும்
சவ ஊர்வலமாகிறது.

ஒவ்வொரு திரையிலும்
இழந்த இன்பங்களின்
தலைகீழ் ஆட்டம்.
அந்தியை நோக்குகிறேன்.
கதிர்க்கொல்லிகள் நடுவே
ஏதோ எரிகிறது.
ஒன்றுமில்லை.
பரிதிப்பிணம்.

-தருமு சிவராம் -

# காட்டுப்பூனைகளும் பச்சைக்கிளிகளும்

தி. ஞானசேகரன்

**தமிழ் பொட்டையள் நல்ல வடிவாம், இங்கை பொம்பிளப்பிள்ளையள் எல்லாருக்கும் சைக்கிள் ஓட்டத் தெரியுமாம். உங்கடை அம்மா மாருக்கும் சைக்கிள் ஓட்டத் தெரியுமோ எண்டு ஒருநாள் கேட்டான். எங்கடை ஐ.சி.யை வாங்கி வச்சுக் கொண்டு கனநேரமாய்த் தராமல் கதைச்சுக் கொண்டே இருந்தான்.**

(சென்றவாரத் தொடர்ச்சி...)

தெருவிலை மண்மூடையல்... மரக்குத்தியள்...... தகரங்கள்.... பெயின்ற் அடிச்ச தார்ப்பீப்பாக்கள்..... துவக்கோடை நிக்கிற இளவட்டங்கள்... கொச்சைத் தமிழ் மிரட்டல்கள்..... வெறித்த பார்வைகள்... சில வேளைகளில் கொஞ்சல்கள்.... காவல் அரண் ஒன்று புதிதாய் முளைத்தது.

அங்கு ஒரு நெட்டையன். பெயர் சரத். எந்த நாளும் சொட்டைக் கதைதான் கதைப்பான். அவனுக்கு தமிழ் எழுத வாசிக்கவும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும்.

"சிங்களம் பேசத்தெரியுமா?" எண்டு தான் முதலில் கேட்பான் இல்லையென்று சொன்னால் கொச்சைத் தமிழிலே கதைப்பான்.

தமிழ் பொட்டையள் நல்ல வடிவாம். இங்கை பொம்பிளப்பிள்ளையள் எல்லாருக்கும் சைக்கிள் ஓட்டத் தெரியுமாம். உங்கடை அம்மாமாருக்கும் சைக்கிள் ஓட்டத் தெரியுமோ எண்டு ஒருநாள் கேட்டான். எங்கடை ஐ.சி.யை வாங்கி வச்சுக் கொண்டு கனநேரமாய்த் தராமல் கதைச்சுக் கொண்டே இருந்தான்.

வசந்திக்குக் கோபம் வந்திட்டுது. "ரியூசனுக்கு நேரமாச்சு, ஐ.சி. யைத் தாருங்கோ. தராட்டில் பெரியவனிட்ட றிப்போட் பண்ணுவம்" என்று படபடத்தாள்.

"நான் தான் இங்கே பெரியவன்" எண்டு சொல்லிச் சிரித்தான் அவன்.

அந்தச் சென்றியைக் கடந்து போறதெண்டா எல்லாருக்கும் சங்கடம் தான். வண்டில்களில், சைக்கிள்களில், தலைச்சுமைகளில் கஷ்டப்பட்டு கட்டியேத்திக் கொண்டு போற சாமான்களை செக் பண்ணிறதெண்டு கொட்டிச் சிந்துவாங்கள்..., நாங்கள் தான் அதைப் பூட்டவேணும்... கொழுப்பு....

அண்டைக்கு எங்களைச் செக் பண்ணிற நேரத்திலை வேறையொருத்தரையும் செக் பண்ணாமல் போகவிட்டாங்கள். எல்லாரும் எங்களைத் திரும்பித் திரும்பிப் பாத்துக் கொண்டே போச்சினம். சந்தேகக் கண்கள்... எங்களுக்கு கூச்சமாய் இருந்தது.

கொஞ்ச நாள் ரியூசன் வகுப்பிலை எங்களைப் பற்றிக் கிசு கிசுப்பு... நாங்கள் தான் வலிய வலியப் போய் சென்றியில நிண்டு சிரிச்சுச் சிரிச்சுக் கதைக்கிறதாம்.

பின் வாங்கில இருக்கிற சிவராசன் சொன்னான். "எங்கடை ஊர்ப் பெட்டையள், தெரிஞ்சதுகள் எண்டு ஆசையாய் நாங்கள் ஏதும் பகிடி கதைத்தால் எங்களை முறைச்சுப் பாக்கிறாளவை.... அவங்களோட இளிச்சு இளிச்சு நளினம் பேசுவாளவை."

"அதுமட்டுமில்லையடா, எங்களைப் பற்றி அவங்களிட்டை றிப்போட் பண்ணு



ராளவை" என்றான் பக்கத்திலிருந்த வேல்முருகு.

அப்போது வசந்தி என் காதுக் குள்ளை சொன்னாள், "உவையளுக்கு எங்கடை நிலமை எங்க தெரியப் போகுது? அவங்கள் கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல் இருக்க முடியுமோ? அவங்களோடை சிரிச்சுக் கதைச்சா செக்கிங் குறையும், பிரச்சனை இருக்காது. நாங்கள் மனசுக்குள்ள எரிஞ்சு கொண்டு தான் வெளியிலை சிரிக்கிறம் எண்டது உவையளுக்குத் தெரியாது"

கொஞ்ச நாட்களில் எல்லாம் பழகிப் போய்விட்டது. சென்றியில் எங்களுக்குப் பெரிதாய் செக்கிங் எதுவும் இருக்கவில்லை. தனியாய் போகும் போதும் பயமிருக்காது. ஆனால் ரியூற்றறிக்குப் போகும் போது சேர்ந்து போக வேண்டுமென்ற நிலமையும் இல்லை.

இப்போது அங்கு ஐ.சி யை எங்களிடம் கேட்கமாட்டார்கள். ஆனாலும் அந்த இடத்தில் சைக்கிளை ஓட்டிச் செல்வதற்கு எவருக்கும் அனுமதியில்லை. இறங்கி உருட்டிக் கொண்டுதான் போக வேண்டும்.

வசந்தி ஒரு நாள் என்னிடம் கேட்டாள், "சென்றியிலை நிக்கிற சரத்தைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?"

"நல்ல ஆள்மாதிரித்தான் தெரியுது என்றேன்.

"அவனோடை நீர் அடிக்கடி கதைக்கிறீராம். அவன் உமக்கு லெட்டர் கொடுத்தவனாம்..., போய்ஸ் கதைக்கினம்"

"இல்லவே இல்லை...போய்ஸ் சும்மா கதை கட்டினம் உப்பிடித்தான் உவையள் எல்லாரையும் சும்மா கேவலப் படுத்திறவை."

"சரத் உமக்கு லெட்டர் கொடுத்ததை சிவராசன் கண்ணாலை கண்டாராம்."

நான் திகைத்துப் போனேன். "என்ன வசந்தி நீரும் நம்பிறீரோ?" லெட்டர் எனக்குக் கொடுக்கேலை. போற வழியிலை போஸ்ற் ஓபீஸிலை போஸ்ற் பண்ணச் சொல்லித்தான் தந்தவர்... சத்தியமாய் வேறயொண்டும் இல்லை" நான் அழுதுவிட்டேன்.

சின்னராசு யன்னல் பக்கம் பரபரப்புடன் ஓடி வருகிறான். யன்னல் கம்பிகளைப் பிடித்தபடி தாழ்ந்த குரலில் கிசு கிசுக்கிறான். "அக்கா, அக்கா ஆமிக்காரங்கள் தெருவில நிக்கிறாங்கள். வீடு வீடா செக் பண்ணப் போகிறாங்களாம். எனக்குத் தெருப்பக்கம் போகப் பயமாய் இருக்கு. அதுதான் இங்க ஓடி வந்தனான்."

எனக்குத் தலைக்குள் ஏதோ செய்கிறது. சுவர் ஓரமாய் மறைந்து நின்று தெருப்பக்கம் பார்க்கிறேன். சரத்தின் தலைதட்டிப் படத்துக்கு மேலால் தெரிகிறது. அவனருகே நிற்பவன் சுமதிபால அவர்கள் என்னைத்தான் நோட்டம் விடுகிறார்கள். சரத் என்னைக் கண்டிட்டான் தலையில் அணிந்திருக்கும் தொப்பியை முன்புறமாக சரித்து தன்னுடைய முகத்தை மறைக்க முயற்சிக்கிறான். என்னைக் கூர்ந்து பார்க்கிறான். அவனது கையில் ரி.56 இருக்கிறது. துவக்கின் விசையில் அவனது சுட்டுவிரல் பதிவது நன்றாகத் தெரிகிறது.

எங்கோ இருந்து வந்த காட்டுப்பூனையொன்று முன் விறாந்தைப் பக்கம் போகிறது.

"மியாவ், மியாவ்"

"எடே சின்னராசு, கிளிக்குச் சாப்பாடு போட்டனியே? கிளிக்கூடு திறந்தபடியே கிடங்கு.....பூனை உலாவுதடா கவனம்."
சின்னராசு என்னை விநோதமாய்ப் பார்க்கிறான். "என்னக்கா மறந்து போனியளே? இப்ப கிளி அங்கை இல்லை... போன கிழமை அது செத்துப் போச்சு.."

ஓ... ஓமோம் எனக்கு நினைவுக்கு வருகிறது. நான் விம்மி விம்மி அழுகிறேன். அண்டைக்கு நான் தனியாகத் தான் போனனான். சென்றியிலை சரத்தும் சுமதி பாலாவும் தான் நிண்டவங்கள். என்ர சைக்கிளைப் பறிச்சு உள்ள கொண்டு போய் வச்சிட்டாங்கள். சைக்கிளைத் தரச் சொல்லி நான் கெஞ்சி மன்றாடினனான். உள்ளுக்குப் போய் எடுக்கச் சொன்னாங்கள்.

நான் தயங்கித் தயங்கி... பயந்து பயந்து.. ஐயோ எனக்கு மயக்கம் வருகுது. தேகம் நடுங்குது. வேர்க்குது. நெஞ்சு படபடக்குது. ஓர் அடிகூட என்னால் எடுத்து வைக்கமுடியாது.

ஓ, அதுக்குப்பிறகு.... அதுக்குப் பிறகு.. உச்சந்தலைக்குள் ஏதோ கிழிந்து சிதறி.. எழும்ப முடியாமல்... எழும்பி, நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி, சைக்கிளை உருட்டிக் கொண்டு தான் வீடு வந்த நான்.

விறாந்தையில சைக்கிளைச் சாத்திய போது அம்மா கவலையோடு சொன்னா, "உவன் சின்னராசு வந்து கிளிக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தவன். கிளிக் கூட்டுக்கதவை பூட்ட மறந்திட்டான். காட்டுப் பூனையொண்டு திரிஞ்சது.... கிளியைக் கடிச்சுக் குதறிப் போட்டுது பிள்ளை..."

எனக்கு நெஞ்சு விறைச்சுப் போச்சு. அம்மா என்ன சொல்லிறா ஒரு வேளை..... ஒரு வேளை?

என்னுடைய தேகம் நடுங்குது.

கிளி இரத்த வெள்ளத்தில் குற்றுயிராய்க் கிடக்கிறது. அதன் அடி வயிற்றின் கீழ் காட்டுப்பூனை பதித்த கோரச்சுவடுகள்....

மயங்கி நிலத்தில் சாய்கிறேன்.

என்னைச் சுற்றியிருக்கும் சுவர்கள் சுழல்கின்றன. என்னை நெரிப்பதற்கு மெது மெதுவாய் நெருங்கி வருகின்றன.

"ஐயோ... ஐயோ"

(முற்றும்)



இது நம்தேசம்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத் துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் நம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.


மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல:96. கிருல வீதி. கொழும்பு-05
தொலைபேசி: 011-5353635 பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: peesl@peesl.lk இணையத்தளம்: www.pccsl.lk

# நூல் அறிமுகம்

## காமன் கூத்து

### இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு




**ஆசிரியர்** :- பொன்.பிரபாகரன்
**வெளியீடு** :- புதிய பண்பாட்டு அமைப்பு
**விலை** :- 400.00

மலையகத்தில் செயற்படும் புதிய பண்பாட்டு அமைப்பின் இணைப்பாளரும் ஆசிரியருமான பொன்.பிரபாகரன் "காமன் கூத்து" என்ற பெயரில் மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு நூலை எழுதியிருக்கின்றார். இந்நூல் புதிய பண்பாட்டு அமைப்பின் வெளியீடாக வெளிவந்திருக்கின்றது. குமரன் புத்தக இல்லம் இந்நூலை அச்சிட்டிருக்கின்றது. பேராசிரியர் மௌன குரு, கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் ஜெய்சங்கர் ஆகியோர் சிறந்த முன்னுரைகளைத் தந்திருக்கின்றனர்.

இந்நூல் காமன்கூத்து ஒரு வரலாற்று அறிமுகம், மலையக சமூக பொருளாதாரத்தில் காமன்கூத்து, பண்டைத் தமிழரின் பண்பாட்டில் காமன், மன்மதன் வழிபாடும், கருத்தியல் வளர்ச்சியும் இலக்கிய சாட்சியங்கள், காமன் கூத்து மலையகத் தமிழரின் மரபுரிமை, அறிவியலும் தொழில்நுட்பமும், மலையகத்தின் தனித்து வமும் மண்வாசனையும், அரசியல் அதிகாரமற்ற மக்களின் பேராயுதமாகப் பண்பாடு, பாரம்பரிய கூத்துகளின் நிகழ்வெளியைப் பெயர்த்தல், பண்பாட்டுக் கருவறுப்பின் தொடக்கம், திறந்த வெளி சமூக பாடசாலையாக காமன்கூத்து என்கின்ற தலைப்புகளில் வெளிவந்திருக்கின்றது. இத்தலைப்புகள் ஒவ்வொன்றும் பின்னர் உபதலைப்புகளாகவும் விரிவடைகின்றன.

நூலின் இன்னோர் சிறப்பு அதன் பின்னிணைப்புகளாகும். 12 பின்னிணைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. காமன் கூத்து பாடல்கள், ஆட்டமுறைகள், காமன் கூத்து நடைபெறும் தோட்டங்கள் போன்ற தகவல்கள் அதில் தரப்பட்டுள்ளன.

காமன் கூத்தினை வெறும் கூத்தாகப் பார்க்காமல் மலையகத் தமிழரின் பண்பாடு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வாகப் பார்ப்பதே நூலின் முக்கிய சிறப்பம்சமாகும். பிரபாகரன் காமன் கூத்தினை மலையகத் தமிழரின் மரபுரிமையாகவும் தனித்துவமான சமூக அரங்காகவும் அரசியல் அதிகாரமற்ற மக்களின் பேராயுதமாகவும் காண்பதை பேராசிரியர் மௌனகுரு மெச்சுகின்றார்.

நாடகம், கூத்துத் துறையில் அக்கறை கொண்டவர்கள் மட்டுமல்ல பண்பாடு, கலைகள் என்பன அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை அறிய விரும்பும் அனைவரும் வாசிக்க வேண்டிய முக்கிய நூலாக இந்நூல் உள்ளது.

**சி.அ.யோதிலிங்கம்.**

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(ஆட்சியாளர்கள் .....)

தொடர்கின்றன. கடல்சார் தொழில், வர்த்தகம் என்பன பாதிப்படைந்துள்ளன. கலாசாரச் சீரழிவு மோசமாக இடம்பெறுகின்றது. இளைஞர்கள், மாணவர்கள் தவறாக வழிநடாத்தப்படுகின்றனர். அரசாங்கம் இதனை ஊக்குவிக்கின்றது. கூட்டமைப்பினர் இந்த கலாசாரச் சீரழிவின் ஏவல் முகவர்களாக உள்ளனர். இந்த ஏமாற்று வாதிகளிடமிருந்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டும். உண்மையான அர்ப்பணிப்புள்ளவர்களை நாம் ஆதரிக்க வேண்டும். அதனூடாக உண்மையான அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்க வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் செல்லையா இராசையா பேசும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணக்க அரசியலைச் செய்கின்றனர். இந்த இணக்க அரசியலினால் 100 நாட்களில் என்ன செய்தனர்? படையினர் பறித்த காணிகளை முழுமையாக மீட்டார்களா? சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தார்களா? காணாமல் போனவர்களை கண்டுபிடித்துக் கொடுத்தார்களா? புலிகள் இல்லை என ஆட்சியாளர்களே கூறுகின்றனர். அப்படியாயின் இராணுவம் இங்கு ஏன் நிலை கொண்டுள்ளது?

தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கும்வரை நாம் எதுவும் செய்யாவிட்டாலும் மக்கள் தமக்கு வாக்களிப்பர் எனக் கூட்டமைப்பினர் நினைக்கின்றனர். இப்படி நினைக்கும் கட்சி எமக்குத் தேவையா? இவர்களைத் தொடர்ந்தும் விட்டு வைத்தால் எமது சந்ததிக்கே துரோகம் இழைத்துவிடுவர்.

ஒற்றுமை என்கிறார்கள். ஒற்றுமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருக்கின்றதா? வருடம்தோறும் தீர்மானங்களை எடுக்கின்றார்கள். இதனை நடைமுறைப்படுத்துகின்றார்களா? இன்று எங்களுக்குத் தேவை அர்ப்பணிப்புள்ள நல்ல தலைமையே! அந்த நல்ல தலைமை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே என்றார்.

சட்டத்தரணி சுகாஸ் பேசும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தேசியத் தலைவர் உருவாக்கினார். அதனால்தான் மக்கள் அதற்கு வாக்களித்தனர். தற்போது கூட்டமைப்பு பாதை மாறிச் செல்கின்றது. இதனால் மாற்று அரசியல் இயக்கம் தேவை என்பது அப்பட்டமான உண்மையாகின்றது. மாற்றுத் தலைமையை விஜயகலாவிற்கோ, டக்ளஸ் தேவானந்தாவிற்கோ வழங்க முடியாது. அவர்கள் சரணடைவு அரசியல் செய்பவர்கள். தமிழ்த் தேசிய முன்னணிக்கே அதனை வழங்குதல் வேண்டும்.

தொகுதிவாரித் தேர்தல் முறை வந்தால் இந்தப் பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போட்டியிடுவார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் சுமந்திரனும் இங்கு தான் போட்டியிடுவார். நீங்கள் தமிழ்த் தேசிய அரசியலுக்காக உழைக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலமா? அல்லது தமிழ்த் தேசிய அரசியலைக் காட்டிக் கொடுக்கும் சுமந்திரனா? என்பதை முடிவு செய்ய வேண்டும். இதனைக் கொண்டுதான் தமிழ்த் தேசியம் வெற்றியடையுமா? தோல்வியடையுமா? என்பதை தீர்மானிக்க முடியும் என்றார்.

தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நீண்ட உரையினை ஆற்றினார். அவரது உரை முழுமையாக அடுத்த "இது நம் தேசம்" இதழில் வெளிவரும். இரவு 8.30 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியதால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் உட்பட பல முக்கியஸ்தர்கள் பேச முடியவில்லை. இதனால் 8.30 மணியுடன் மேதின நிகழ்வு முடிவடைந்தது.

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(என் அம்மாவை....)

மருத்துவமனைக்கு செக்கப் செல்லும்போது மற்றொரு தகவலையும் கேள்விப்பட்டு இடிந்து போகிறாள் மேனுலா. ரொசாவுக்கு எய்ட்ஸ் நோய் என்பதே அந்தத் தகவல்.

ரொசாவுக்குக் குழந்தை பிறக்கிறது. பேபிஈஸ்டிபன் என்று பெயர் சூட்டும் ரொசா, அக்குழந்தையை வளர்க்கும்படி மேனுலாவிடம் கேட்கிறாள். அதற்கு உடன்படுகிறாள் மேனுலா. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ரொசா நோயின் தீவிரத்தில் மரணமடைகிறாள். அதைக் கேள்விப்பட்டு அங்கே வருகிறான் லோலா! அவனும் எய்ட்ஸ் நோயால் பாதிப்படைந்து ஏறக்குறைய சாகும் நிலையில் இருக்கின்றான்.

இதற்கிடையில் மேனுலாவின் நேர்மையில் கவரப்படும் நாடக நடிகை அவளைத் தன்னோடு வைத்துக் கொள்ள விரும்புகிறாள். அந்த வேலை வாய்ப்பை மறுத்துவிட்டு ரொசாவுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகக் குழந்தை பேபி ஈஸ்டிபனுடன் பார்சினோலாவிலிருந்து மீண்டும் மேட்ரிட் நகரத்துக்கே வருகிறாள் மேனுலா.

காலம் ஓடுகிறது இரண்டு வருடங்களுக்குப் பிறகு மறுபடியும் பார்சிலோனாவிற்கு வருகிறாள். லோலா மரணமடைந்துவிட்ட செய்தியை கேள்விப்படுகிறாள். அந்தச் செய்தி அவளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. குழந்தை பேபிஈஸ்டிபனை அவனது தாத்தா பாட்டியுடன் சேர்க்க வேண்டும் என்பதே அவளுக்குக் கவலை. அவள் விரும்பியது போலவே ரொசாவின் பெற்றோர்களின் கோபம் தணிந்திருக்கிறது. அவர்களிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு, தான் ஒரு காலத்தில் நடிகையாய் இருந்த நாடகக் குழுவைத் தேடிச் செல்கிறாள்.

மேனுலாவின் முடிவற்ற போராட்ட வாழ்க்கையின் அடுத்த அத்தியாயம்!?

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(சிங்கக் கொடி....)

இந்த நாட்டில் அரசியலமைப்புச் சட்டங்கள் மாற்றம் செய்யப்படுகின்றபோது தமிழ், முஸ்லீம் மக்களின் கருத்துக்களை அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகளின் கருத்துக்களை, ஆலோசனைகளைத் திருத்தங்களைக் கேட்டறியாமல் சிங்கள மக்களால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சட்டத்தை நாம் ஏற்க வேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அவர்களுக்குரிய அரசியல் அங்கீகாரத்தை அளிக்க வேண்டும். - என்றார்.






தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தின ஊர்வலம் பருத்தித்துறை பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாகி கொட்டடி கடற்கரையை சென்றடைந்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந் நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகைச் சுடரினை ரஞ்சன் சித்தப்பாவின் தாயாரான செல்வநாயகம் தங்கேஸ்வரி அம்மா அவர்கள் ஏற்றி வைத்தார்.






மாமனிதர் சிவராமின் நினைவு நிகழ்வு - மட்டக்களப்பு




வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் கவனயீர்ப்புப் போராட்டம் - யாழ்ப்பாணம்

இது நம்தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.
வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்
அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 06.05.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.